# 1ம், 2ம், இராஜாக்கள்.

இராஜாக்கள் இஸ்ரவேலர்களின் 971-852 கி.மு உள்ள காலப் பகுதியின் சரித்திரத்தை கூறுகின்றது. தாவீதின் இறுதிக்காலத்தின் ஆரம்பத்தில், சாலொமோனின் ஆரம்பகாலமும் இஸ்ரவேலின் மகிமையான காலப்பகுதியாக இருந்தது எனப் பதியப்பட்டுள்ளது. 931 இல் உள்ளூர் பிரச்சனையின் காரணமாக இராஜ்ஜியம் 10 கோத்திரங்கள் ஒரு இராஜ்ஜிய மாகவும், இரண்டு கோத்திரங்கள் வேறொரு இராஜ்ஜியமாகவும் மாறியன. தெற்கு இராஜ்ஜியம் அகாசியாவின் காலப்பகுதியுடன் நிறைவுக்கு வந்தது.1,2, இராஜாக்கள் புத்தகம் உண்மையில் ஒரு புத்தகமாகவே இருந்தன. இவை இதன் சரித்திரத்தைக் கூறுகின்றன, இஸ்ரவேலர்களின் ஆவிக்குரிய நிலமையின் வீழ்ச்சியையும் இது கூறுகின்றது, இதன் இராஜ்ஜிய தோல்விகளையும் விபரிக்கின்றது. தேவனுக்கு பயந்து வாழ்ந்த இராஜாக்களையும் பாவத்தில் வாழ்ந்த இராஜக்களின் வாழ்கையை வேறுபிரித்தும் காட்டுகிறது.

***1ம்,2ம்* இராஜாக்கள்.**

971. கி.மு. தாவீதின் மரணமும், சாலொமோன் அரசனும்.

931. இராஜ்ஜியம் பிரிக்கப்பட்டது. இஸ்ரவேல், யூதா

874. ஆகாப் இஸ்ரவேலின் ராஜாவானான். எலியாவின் ஊழிய ஆரம்பம்

**பின்னணி.** 1 இராஜாக்கள் இஸ்ரவேலர்களின் 971-852 கி.மு உள்ள காலப் பகுதியின் சரித்திரத்தை கூறுகின்றது. தாவீதின் இறுதிக்காலத்தின் ஆரம்பத்தில், சாலொமோனின் ஆரம்ப காலமும் இஸ்ரவேலின் மகிமையான காலப்பகுதியாக இருந்தது எனப் பதியப்பட்டுள்ளது. 931 இல் உள்ளூர் பிரச்சனையின் காரணமாக இராஜ்ஜியம் 10 கோத்திரங்கள் ஒரு இராஜ்ஜியமாகவும், இரண்டு கோத்திரங்கள் வேறொரு இராஜ்ஜியமாகவும் மாறியன. தெற்கு இராஜ்ஜியம் அகாசியாவின் காலப்பகுதியுடன் நிறைவுக்கு வந்தது.1,2, இராஜாக்கள் புத்தகம் உண்மையில் ஒரு புத்தகமாகவே இருந்தன. இவை இதன் சரித்திரத்தைக் கூறுகின்றன, இஸ்ரவேலர்களின் ஆவிக்குரிய நிலமையின் வீழ்ச்சியையும் இது கூறுகின்றது, இதன் இராஜ்ஜிய தோல்களையும் விபரிக்கின்றது.

**எழுதியவர்.-** யார் என்று தெரியாது. சிலவேளை எரேமியாவாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. சாலொமோனின் மற்றநடபடிக்கைகளும், அவன் செய்தவை அனைத்தும், அவனுடைய ஞானமும், சாலொமோனுடைய நடபடிக்கைப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது(11:41), இது இஸ்ரவேல் ராஜாக்களின் சரித்திரப்புத்தகமாகும். (14:29). அத்துடன் யூதாவின் ராஜாக்களின் சரித்திரப் புத்தகங்களுமாகும்.

**காலம்-** இன்று மட்டும்,தேசம் முழுவதும் நீதி குறைந்தளவாகவே காணப்பட்டது, இதனையே 1,2, இராஜாக்கள் கூறுகின்றன. (12:19; 2 17:23, 34, 41)

அனேகமான நிகழ்வுகள் இந்தப்புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன. தெற்கு இராஜ்ஜியத்தின் கடைசி காலப்பதிவுகளாகும். 630-600 கி.மு. இது இருக்கின்றது.

**இடம்**.- அனேகமாக எருசலேமாக இருக்கலாம், எழுத்தாளரின் அனேக பதிவுகள் நீதிமன்றப் பதிவுகளாகக் காணப்படுகின்றன. தெற்கு இராஜ்ஜியம் வீழ்சியடைந்தபின்பு அதன் சரித்திரப்பதிவுகள் எருசலேமிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன

**நோக்கம்**:-

- இஸ்ரவேலின் இராஜாக்கள் தங்களுடைய தேசத்தின் சரித்திரத்திற்கான தீர்க்க தரிசனங்களை ஞாபகப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படிதல் வெகுமானத்தைக் கொண்டுவரும். கீழப்படியாமை தண்டனையைக் கொண்டுவரும்.
- தீர்க்கதரிசனக் கொள்கை எல்லா இஸ்ரவேலர்களுக்கும் பொருத்தம். அதாவது இது அரசர்களுக்கு மிகவும் அவசியமானதாகும்.
- விஷேசமான தீர்க்கதரிசனங்கள் நிறைவு செய்யப்பட்ட அறிக்கைகளுடன், 1ம் 2ம் இராஜாக்கள் காலத்திற்குக் காலம் விசுவாசிகளுக்கு ஞாபகப்படுத்துகின்றது, (: 2:26-27; 13:1-10; 15:25-32; 16:8-14, 29-34).

**பிரதான சம்பவங்கள்**.

- சாலொமோன் எல்லோரிலும் அதிகமாக ஞானமுள்ள மனிதனாக இருந்தான், ஆனாலும் அவரது துன்பங்கள் குறித்து 1இராஜாக்கள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, (4:31), இவர் அதிக செல்வத்துக்கும். பெண்களுக்கும் அடிமையானார் (10:14–11:13).
- இதில் இஸ்ரவேலின் முதலாவது ஆலயம் கட்டப்பட்டதும், பிரதிஸ்டை பண்ணப்பட்டதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது 4 நுற்றாண்டுகளுக்கு இருந்தது. (968–586 கி.(மு.).
- சாலொமோனின் ஆட்சிக்காலத்தில், இஸ்ரவேல் பெரிய தேசமாக இருந்தது. இந்த நாள் இஸ்ரவேலைவிட மிகவும் பெரிதாக இருந்தது. தாவீதினால்

பெற்றுக் கொள்ளப்பட்ட செல்வங்களைக் கொண்டு, சாலொமோன் இராஜ்ஜியத்தைப் பெரிதாக்கினார். (4:24; 2சாமு. 8:1-18).

- 17:22வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள எட்டு உயிர்த்தெழுதலில் முதலாவது உயிர்த்தெழுதலைப் பதிவு செய்துள்ளது.

சுருக்கம்

1. அமைதியான வருடங்கள்.
2. இஸ்ரவேலர்களின் ஆவிக்குரிய யுத்தம். (1:1–11:25)
3. சாலொமோனின் முடி சூட்டுவிழாவும், அவரது ஆரம்ப வெற்றிகளும்(1–2)
4. சாலொமோன் தன்னுடைய சகோதரனாகிய அதோனியாவை வெற்றி கொள்ளுதல்.(2:13-25)
5. தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவன் தன் குமாரனாகிய சாலொமோனுக்குக் கட்டளையிட்டவை. ( 2:1-12)
6. ஆசாரியனாகிய அபியத்தாரை சாலொமோன் வெற்றி கொள்ளுதல். (2:26-27)
7. சாலொமோன் யோவாப்பை வெற்றி கொள்ளுதல். (2:28-35)
8. குழப்பக்காரனாகிய சிமேயியை சாலொமோன் வெற்றி கொள்ளுதல். (2:36-46)
9. சாலொமோனின் திறன்,செல்வம், எல்லைகள், குழுக்கள். (3–4)
10. சாலொமோனின் ஆலயம். (5–8)
11. ஆயத்தம் (5)
12. கட்டுமானம் (6–7)
13. பிரதிஸ்டை (8)
14. சாலொமோனின் மேலதிக வெற்றிகளும் பொக்கிஷெங்களும். (9–10)
15. வெற்றிகளும் பொக்கிஷெங்களும் விபரிக்கப்படுதல். (9)
16. பொக்கிஷெங்களும் சீபா இராணியினால் இச்சிக்கப்படுதல். (10:1-13)
17. பொக்கிஷெங்கள் விபரிக்கப்படுதல். (10:14-29)
18. சாலொமோனின் மீறுதல்களும் வீழ்ச்சியும். (11:1-25)

**ஒழுங்கீனமான வருடங்கள்.**

1. இஸ்ரவேலர்களின் குடியியல் யுத்தம். (11:26–22:5

2. யெரொபெயாம், முதலாவது வடக்கு அரசன் (11:26–14:20)
3. யெரொபெயாம், சாலொமோனுக்கு எதிராகப் புரட்சி செய்தல். (11:-40)
4. சாலொமோனின் மரணம். (11:41-43)
5. யெரொபெயாம்,ரெகொபெயாமுக்கு எதிராகப் புரட்சி செய்தல். (12:1-15)
6. யெரொபெயாம் 10 வடக்கு கோத்திரங்களை ஆளுதல் (12:16–14:20)
7. ரெகொபெயாம் முதலாவது தெற்கு அரசன். (14:21-31)
8. அபியாம் இரண்டாவது தெற்கு அரசன். (15:1-8)
9. ஆசா, மூன்றாவது தெற்கு அரசன். (15:9-24)
10. நாதாப், பாஷா என்பவர்கள் இரண்டாம் மூன்றாம் வடக்கு அரசர்களாவார்கள். (15:25–16:7)
11. ஏலா, சிம்ரி, என்பவர்கள் நான்காம் ஐந்தாம் வடக்கு அரசர்களாவார்கள் (16:8-20)
12. உம்ரியை , ஆறாவது வடக்கு அரசன். (16:21-28)
13. ஆகாப், ஏழாவது வடக்கு அரசன். (16:29–22:40
14. கொள்கை கைவிடல் (16:29-34) எலியாவுடன் இணங்குதல் (17–19)
15. பென்கதாத்துடன் இணங்குதல். (2)
16. நாபோத்துடன் இணந்து கொண்டார். (21)
17. யோசபாத்துடன் இணைந்து கொண்டார். (22:1
18. யோசபாத் , நான்காவது தெற்கு அரசன்.(22:41-50)
19. அகாசியா, எட்டாவது வடக்கு அரசன். (22:51-53,

## அமைதியான வருடங்கள்:

### ஆவிக்குரிய யுத்தம் (1:1–11:25)

**1:1-4** . அரசனைச் சுகமாகவைத்திருத்தல்.

தாவீது ராஜா மரணப்படுக்கையில் இருந்தபடியால், அவரைப் பராமரிப்பதற்கும், அவரைச் இரவில் சூடாகவைத்திருப்பதற்கும், ஒரு இளம் பெண்ணை அவரது ஊழியர்கள் கண்டுபிடித்தார்கள். அவர் அவளுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ளவில்லை.(1:4).

**1:5-10** . **புரட்சி செய்வதற்கு அதோனியா வந்தார்**.

தாவீதின் மூத்தமகனாகிய அதோனியா, தன்னைத் தானே ராஜா என்று அறிவித்தார். அவர் இராணுவத் தலைவனாகிய யோவாப்பினதும்,

ஆசாரியனாகிய அபியத்தாரினதும் ஒத்தாசையைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் தீர்க்கதரிசியாய நாத்தான் வேலினதும், சாலொமோனினதும் உதவியைக் கேரவில்லை. இவர் தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய அப்சலோமைப் போல கிளர்ச்சியில் ஈடுபட்டார். (2சாமு. 15–18), அதோனியா மிகவும் அழகுள்ளவர். (1:6).

1:11-27 **இறந்து கொண்டிருக்கும்** தாவீதிற்கு இந்த புரட்சிபற்றி நாத்தான்வேலும் பத்சேபாளும் அறிவித்தார்கள். இதனால் தாவீது தனக்குப்பின்பு சாலொமோனே ராஜா என்று அறிவித்தார்.

**1:28-40 *எனக்குப்பின்பு சாலொமோன் அரசன்***

தனக்குப்பின்பு சாலொமோன்தான் அரசன் என்று தாவீது ராஜா பத்சேபாளுக்கும் நாத்தான்வேலுக்கும் உறுதியளித்தார், அத்துடன் உடனடியாக சாலொமோனை முடிசூட்டும்படியும் அறிவித்தார். முடிசூட்டுவிழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. (1:38-40 தாவீதுடைய சொந்த கழுதையிலேயே சாலமோன் முடிசூட்டு விழாவிற்கு வலம்வந்தார்.(1:33, 38), இந்தச் செயற்பாடு, தான்தான் தாவீதின் வாரிசு என்பதற்கான அடையாளமாகும். ( 1:44). கழுதையில் வலம்வருதல் என்பது கனத்துக்குரியதும், அரச இராஜ்ஜியத்தின் ஆரம்பத்திற்கான அடையாளமாக மேற்கத்திய கலாச்சாரம் உள்ளது.

**1:41-49. மற்றய கொண்டாட்டாங்கள் பயத்தை உருவாக்கின.**

அதோனியாவும் அவரது உதவியாளர்களும் முடிசூட்டுவிழாவில் இருந்த போது, சாலொமோனுடைய முடிசூட்டுவிழாவின் ஆர்ப்பரிப்பின் சத்தத்தைக் கேட்டனர். சாலொமோனுக்குப் பயந்ததினால், அதோனியாவின் உதவியாளர்கள் அனைவரும் அதோனியாவை விட்டு ஓடிவிட்டார்கள் சாலொமோனின் முடிசூட்டுவிழா, தாவீது இறந்தபின்பு நடந்திருந்தால், அதோனியாவின் புரட்சி வெற்றிபெற்றிருகக்கூடும். **1:50-53. கிளர்ச்சி செய்தவன் மனம்திரும்பியபடியால் நன்னடத்தையில் விடப்பட்டான்.**

அதோனிய சாலொமோனுக்குப் பயந்ததினால், தன்னுடைய பாதுகாப்புத் தேடி தேவாலயத்திற்குள் ஓடினான். சாலொமோன், அவன் பிரச்சனை ஒன்றும் செய்யாமலிருக்கும் காலம் வரை அவன் கொல்லப்படமாட்டான் என்று வாக்களித்தான். சாலொமோன் அதோனியாவுக்கு முழு மன்னிப்பையும் கொடுக்கவில்லை.

**2:1-12 பூமியில், தாவீதின் கடைசி வார்த்தை**.

மரணம் நெருங்குவதை அவதானித்த தாவீது, சாலொமோனுக்கு சில அறிவுரைகளை வழங்கினார். நியாயப்பிரமாணத்தைக் காத்துக் கொள்ளும்படி தாவீதின் குடும்பத்தாருக்கு கர்த்தர் கொடுத்த வாக்குறுதிகளை வைத்து, தாவீது, சாலொமோனுக்கு நியாயப்பிரமாணத்தைக் காத்து நடக்கும்படி வேண்டிக் கொண்டார். அத்துடன் யோவாப்பையும், சீமேயியையும் தண்டிக்கும்படியும், ஆனால் பர்சிலாயின் குடும்பத்திற்கு இரக்கம் காட்டும்படியும்வேண்டிக் கொண்டார்.(2சாமு. 17:27-29; 19:31-39). அதன்பின்பு தாவீது தன்னுடைய 70வது வயதில் மரித்தார்.( 2சாமு. 5:4-5). 40 வருடங்கள் (2:11) சிறப்பான ஆட்சி இடம்பெற்றது. சாலொமோனின் ஆட்சிக்காலம் 40 வருடங்களாகும். (971–931 கி.மு), ஆனால் சில அரசர்கள் அந்த அளவுக்கு அரசாண்டார்கள். சாலொமோன் அரசாட்சி செய்யத் தொடங்கியபின் நல்ல ஆட்சி இடம்பெற்றது. (2:12).

**2:13-25 தன்னுடைய முரட்டாட்டத்தினால் வாளினால் மரணமடைந்தான்**.

அதோனியா, பத்சேபாளிடம், அபிஷாகை விவாகம் செய்து தரும்படி சாலொமோனிடம் கேட்கும்படி வேண்டிக் கொண்டான். (1:1-4). இதை ஒரு சதியாகக் கருதி சாலொமோன் அதோனியாவைக் கொலை செய்தான்.

**2:26-27 தாவீதின் நிமித்தம் பாதுகாக்கப்பட்டார்**.

ஆசாரியனாகிய அபியத்தார் அதோனியாவுக்கு உதவி செய்திருந்த போதிலும் சாலொமோன் அபியத்தாரின் உயிரை தாவீதிற்கு நீண்டகாலம் ஒத்தாசையாக இருந்தபடியால் தப்பவிட்டார். ஆனால் அப்படியே கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக்குறித்துச் சொன்ன

வார்த்தையை நிறைவேற்றும்படியாக, சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப்போட்டான். ( 1சாமு. 2:30-36).

**2:28-35** இவரும் அதோனியாவைப் போலவும் யோவாப்பைப் போலவும், தேவாலயத்தில் அடைக்கலம் தேடிக் கொண்டார். (1:50). ஆனால் சாலொமோன் தகப்பனாரின் ஆலோசனைப்படி (2:5-6), அவர் பெனாய்யாவைக் கொலைசெய்து, அந்த இடத்திற்கு யோவாப்பை இராணுவத் தலைமையாக நியமித்தார், ஆனால் சாதோக் என்பவரை அபியத்தாரின் ஆசாரியப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (2சாமு. 15:23-29)." நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப் பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம் பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான். (1சாமு. 2:35). சாதோக்கின் சந்த்தியினர் பற்றி எசேக்கியேலின் குறிப்புகள். இதை ஏற்றுக் கொள்கிறது.எசேக். 40:46)

**2:36-46. அவர் கீழ்ப்படியாமல், வெளியேறி, மரித்தார்.**

அதோனியாவின் கிளர்ச்சியில் சீமேயி பங்கு கொள்ளாதிருந்த போதிலும், இவரைக் குறித்து தாவீது சாலொமோனை எச்சரித்திருந்தார். ஏனெனில் அவன் தாவீதைத் தூஷித்திருந்தான். (2:8-9) சீமேயிக்கு குறிக்கப்பட்ட எல்லைக்குள் நடமாடுவதற்கு சாலொமோன் அனுமதி அளித்திருந்தார், அவர் எல்லையைக் கடக்கும் நேரத்தில் கொல்லப்படுவான்.

**3:1 பல மனைவியர்களில் முதலாவதனவள்.**

சாலொமோன் எகிப்தின் ராஜாவுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி, அவரின் மகளைத்திருமணம் செய்தான், இவளே வெளிநாட்டு மனைவிகளில் முதலாவதானவள். அவர்களின் விக்கிரக ஆராதனையின் நிமித்தம் தீர்க்கதரிசிகள் இந்தத் திருமணைத்தை எதிர்த்தர்கள். இதற்கு ஏற்றாற்போல இந்தப் பெண் கர்த்தரின்

விசுவாசியாக ஒருபோதும் வரவேயில்லை. இந்தக் கல்யாணம் வியாபார நோக்கத்தையும், இராணுவ நோக்கத்தையும் கொண்டதாக இருந்தது.

**3:2-4 அவன் கர்த்தரை நேசித்தான் ஆனால்....3:1**

இது சாலொமோன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று விரும்பினான் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. அந்நாட்கள் மட்டும் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயம் கட்டப்படாதிருந்ததினால், ஜனங்கள் மேடைகளிலே பலியிட்டு வந்தார்கள்.3:2 பலியிடுவதற்கு வேறு இடம் இல்லாதபடியால் அங்கு பலியிட்டார்கள் என்று சாட்டுப் போக்குச் சொன்னார்கள். (3:3)இந்தச் செயற்பாடுகள் கர்த்தருக்கு வெறுப்பை உண்டுபண்ணியது. ஆனால் உண்மையான விசுவாசிகள் அங்கு பலியிடவில்லை. (எண்ண. 33:50-56).

**3:5-15** “இது உங்களுடையது, இதற்குப் பெயரிடுங்கள்”.

சாலொமோன் விரும்புவதைக் கர்த்தர் கொடுத்து வந்தார், அத்துடன் சாலொமோன் தேசத்தை ஆளுவதற்கான ஞானத்தைக் கேட்டார். செல்வத்தைவிட ஞானம் பெரியது என்பதை ஏற்றுக் கொண்டார்.(பிரச. 7:11). ஏனெனில், கர்த்தரிடம் அவர் செல்வத்தைக் கேட்காமல் ஞனத்தைக் கேட்டார், ஆனாலும் அவர் கேட்காத செல்வத்தையும் கர்த்தர் அவருக்குக் கொடுத்தார்.l (3:13-14).

**3:16-28. அந்த நாளில் ஞானம் குழந்தையைக் காப்பாற்றியது**.

இரண்டு தாய்மார் ஒரு குழந்தைக்கு உரிமை கொண்டாடிய போது, குழந்தையை இரண்டு துண்டுகளாக வெட்டி, ஆளுக்கு பாதி கொடுக்கும் வண்ணம் கூறிய போது, உண்மையான தாய் கண்டு பிடிக்கப்பட்டாள். சாலொமோனின் இந்தத் தீர்மானம் கொடூரமாகத் தோன்றிய போதிலும், அந்த வழக்கைப் பொறுத்தமட்டில் மிகவும் ஞானமுள்ளதாகக் காணப்பட்டதால் இஸ்ரவேல் முழுவதும் இவரைப் பாராட்டியது.

**4:1-19. அவருயைடய அமைச்சர் குழுவும், குசினி அமைச்சர் குழுவும்**.

4:1-6 தாவீதின் காலத்தைப் போல சாலொமோன், அரச, போர்ச்சேவகர்கள், மதத் தலைவர்களைப் பட்டியலிட்டான். (2சாமு.8:15-18), அந்தப்பட்டியில் இராஜ்ஜியத்தின் உறுதியையும், ஒழுங்கையும் பிரதிபலித்தது. 4:7-19. சாலொமோனுடைய 12 ஆளுநர்களும், மற்றப் பொறுப்புக்களையும் கொண்டவர்களாய் இருந்தார்கள், தன்னுடைய வீட்டிற்குத் தேவையான உணவுகளை மேற்பார்வை செய்து வழங்கினார்கள். தாவீது இஸ்ரவேலின் தலைநகரின் எல்லைகளை விஸ்தரித்த போது, சாலொமோன் கட்டிடவேலைகளை நிர்மாணித்தார்.

**4:20-28** ***எல்லோரும் சமாதானத்துடனும் ஆசீர்வாதத்துடனும் இருந்தார்கள்***.

இந்தக்காலத்தில் சாலொமோன் குடும்பமும், தேசத்தார் அனைவரும் சமாதானத்துடனும் மகிழ்சியுடனும் இருந்தார்கள். இது உண்மையில் இஸ்ரவேலின் பொற்காலமாகும், ஆலயமும், இன்னும் பல கட்டிடங்களும் இதனைக் கூறுகின்றன.

**4:29-34** ***சாலொமோனின் புகழ் எங்கும் பரவியது.***

சாலொமோன் எல்லோரைப்பார்க்கிலும் ஞானமுள்ளவராக இருந்தார். அவருடைய ஞானத்திற்காகவல்ல, ஆனால் அவருடைய இயல்பான அறிவிற்காக எல்லாத் தேசத்தாராலும் அறியப்பட்டிருந்தார். 4:32. வேதாகமத்திலுள்ள நீதிமொழிகளில் அனேகமானவற்றை சாலொமோன் எழுதியிருந்தார். அவர் மேலும் இரண்டு வேதாகமப் புத்தகங்களான பிரசங்கி, உன்னதப்பாட்டு என்பவைகளையும் எழுதியுள்ளார்.

**5:1-12** ***எனக்கு உம்முடைய உதவி தேவை.***

தீருவின் ராஜாவாகிய ஈராமிடத்தில் ஆலயம் கட்டுவதற்கும் தேவையான சகல மரத்தளபாடங்களைச் செய்வதற்கான மரங்களைத் தந்துதவுமாறு கேட்டிருந்தார், அவைகள் யாவும் சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டன. ஈராம், சாலொமோனை ஒரு சிறந்த அரசனாக எற்றுக்

கொண்டார். (5:7), இவற்றிற்குப் பதிலாக உணவுவகைகளைத் தந்துதவுமாறு கேட்டுக் கொண்டார். சாலொமோன் அவருக்கு வருஷம் தோறும், கப்பலில் தானியங்களை அனுப்பினார், இரண்டு தேசத்தாருக்குமிடையில் சமாதானம் இருந்தது.

**5:13-18.** ***180,000 வேலையாளர்கள் , 3,300 மேற்பார்வையாளர்கள்.***

வேலைகாரரும், 3,300 மேற்பார்வையாளரும், அதனுடன் ஆலயக் கட்டிடத்திற்கான கற்களும், மரங்களுடன் வேலைகள் தொடங்கப்பட்டன. இந்தப் பெருந் தொகையான வேலைகாரரைக் கொண்டு வேலை செய்வதை இராஜாக்களின் குணங்களுக்கான சாமுவேலின் எச்சரிக்கையை ஞாபகப்படுத்துகின்றது. (1சாமு.8:10-18,14:47-52) கொத்தடிமைத்தனம் கர்த்தருக்கு அருவருப்பானது, இஸ்ரவேலின் பகுதிகளில் இது இடம்பெற்றது. இந்த கொத்தடிமை வேலை செய்தவர்களில் பெரும்பாலானோர் இஸ்ரவேலர்கள் அல்லாதவர்கள் என்று 2 நாளாகமப்புத்தகம் கூறுகின்றது. (2 நாள2:17-18; 8:9,)

**6:1-13** ***கட்டிட அடித்தளம், பகுதி 1.***

சாலொமோனின் ஆலயத்தின் நீள அகலத்தை எழுத்தாளன் விபரிக்கின்றார், அவர் அடித்தளத் திட்டத்தை விளக்குகின்றார். ஆலயம் ஏறக்குறைய 90 x 30 x 45 அடி உயரத்தைக் கொண்டது, –இது ஆசாரிப்புக் கூடாரத்தின் இரண்டுமடங்கு அளவினைக் கொண்டதாகும். சாலொமோன் ஆலயத்தைக் கட்டிமுடித்தபோது, கர்த்தர் இஸ்ரவேலர்களுடன் உடன்படிக்கையைப் புதுப்பித்தார். ஜனங்கள் யாவரும் கர்த்தருக்கு விசுவாசமாக இருந்தால், அவர் வாக்களித்த யாவற்றையும் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருந்தார்.(6:11-13).

**6:14-38** ***கட்டிட அடித்தளம், பகுதி 1.*** இப்போது, எழுத்தாளர் ஆலயக் கட்டிடத்தின் உள்பகுதியின் அலங்காரப் பொருட்கள் பற்றி எழுதுகின்றார். ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம் தொடங்கிச் சுவர்களின் மேல்மச்சுமட்டும், கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தை தேவதாரி

விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்தினான். அதைப் பசும்பொன் தகட்டால் மூடினான்; கேதுருமரப் பலிபீடத்தையும் அப்படியே மூடினான். சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது. ஏழுவருடங்களுக்குப் பின்பு கட்டிடவேலைகள் யாவும் 960 கி.மு.இல் செய்து முடிக்கப்பட்டன. (6:37-38). இது பாபிலோனியர்கள் கி.மு. 586 இல் தீக்கிரையாக்கப்படும்வரை 374 வருடங்களுக்கு நிலைநின்றது.

**7:1-12 அவருடைய தனிப்பட்டதும், பொதுவானதுமான மாளிகைகள்**.

சாலொமோன் தனக்கு இரண்டு மாளிகைகள் உட்பட பல வீடுகளைக் கட்டினான். (7:1-2), முதலாவது மனைவிக்கு தனியாக ஒரு வீடு கட்டினான். (7:8), தன்னுடைய அரச வேலைகளுக்காக படைவீரருக்காக பல வீடுகளைக் கட்டினான். (7:7), and a “Hall of Pillars” அத்துடன் ஒரு பெரிய மண்டபத்தைத் தூண்கள் நிறுத்திக் கட்டினான். (7:6).

**7:13-51. கைவினைஞர்களும் அவருடைய கைத்திறனும்**.

ஆலயத்தினதும், கட்டிடத்தினதும் கைவேலைகளனைத்தும் ஈராம் என்பவனால் செய்யப்பட்டது, இவன் இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன்; இவன் தகப்பன் தீருநகரத்தானான கன்னான்; இவன் சகலவித வெண்கல வேலையையும் செய்யத்தக்க யுக்தியும் புத்தியும் அறிவும் உள்ளவனாயிருந்தான்; (7:13-14, 40, 45). இவருடைய வேலைகள் 7 : 15–50 இல் கூறப்பட்டுள்ளது. இவ்விதமாய் இராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிந்தது; அப்பொழுது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம் பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டுவந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைத்தான். (7:51). தாவீது, தானே ஆலயத்தைக்கட்டுவதற்கு யோசித்திருந்தான், (2சாமு. 7:1-17) அதன் தேவைக்காகப் பல பொருட்களைச் சேகரிக்கவும் தொடங்கினான் (2சாமு. 8:11).

**8:1-11 ஆசாரிப்புக் கூடாரத்திலிருந்து ஆலயத்திற்கு**.

சாலொமோனினால் வழிநடத்தப்பட்ட ஆராதனை நிகழ்வின்போது உடன்படிக்கைப் பெட்டியானது ஆசாரிப்புக் கூடாரத்திலிருந்து ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த இடமாற்றம் எருசலேமிலுள்ள ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்காகும்,— தாவீதின் நகரத்திலிருந்து, வடக்குப்பக்கமாக தற்போது ஆலய பர்வதம் என்று சொல்லும் பகுதிக்காகும். புதிய ஆலயத்தில் உடன்படிக்கைப் பெட்டிவைக்கப்பட்ட போது, மேகம் ஆலயத்தை நிரப்பிற்று, இதன் நிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாமற் போயிற்று; கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. (8:10-11), இது ஆசாரிப்புக்கூடாரம் பிரதிஸ்டை பண்ணப்பட்ட போது இருந்ததுபோல் இருந்தது. (யாத்திராகமம். 40:34-35).

**8:12-21. *அவர் அவர்களை ஆசீர்வதிக்கத் தொடங்கினார்.***

சாலொமோன் ஆலயத்தைக் கர்த்தருக்கு ஒப்புவித்தான். (8:12-13), அதன்பிற்பாடு கூடி இருந்தவர்களை ஆசீர்வதித்தான். அவர் கர்த்தர் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை ஞாபகப்படுத்தினார். அவர் ஆலயத்தையும் அதனுள்ளே வைக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியையும் அடையாளப்படுத்தினார்.

**8:22-53 *இந்த இடத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபங்களைக் கேள்பீராக.***

இதன் பிற்பாடு சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம் செய்யத் தொடங்கினார் கர்த்தரை இந்த ஆலயத்திற்குள் அடக்கிவிட முடியாது என்று அவர் இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? ஜனங்கள் யாவரும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் ஜெபம் செய்தார். ஆனால் அவர்கள் பாவம் செய்யும் போது கர்த்தர் அவர்களை மன்னிக்கிறார். (8:31-32) அத்துடன் கர்த்தாவே அவர்களை அவர்கள் பாவத்தின் நிமித்தம் முற்றுமுழுவதுமாக

அழித்துப் போடாதிரும். (8:35-36, 46-52). இஸ்ரவேலர்கள் அல்லாத அந்நிய ஜாதிகள் உடது நாமத்தை விசுவாசித்து ஜெபம் செய்தால், அவர்களுக்கு உமது இரக்கத்தைக் காண்பிக்க வேண்டும் என்று வேண்டுதல் செய்தார். (8:41-43). இஸ்ரவேலின் கர்த்தர் தன்னுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருக்க வேண்டும் என்று ஜெபம் செய்தார். (8:53; யாத்தி. 19:5-6).

**8:54-61 அவர் உண்மையுள்ளவர், ஆகவே நீங்களும் உண்மையுள்ளவர்களாய் இருங்கள்.**

சாலொமோன் பிற்பாடு, மக்களுடன் பேசினார், கர்த்தர் உண்மையுள்ளவராக இருக்கிறபடியால், நீங்களும் உண்மையுள்ளவர்களாய் இருங்கள். 8:56 அவர் யோசுவாவின் வார்த்தைகளை ஞாபகப்படுத்தினார். பல தீர்க்கதரிசிகளின் விளக்கங்களையும் ஞாபகப் படுத்தினார். (யோசு. 21:45; 23:14). 8:22, 8:54, பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் இரண்டு கரங்களையும் வானத்து நேராக நீட்டி ஜெபம் செய்வார்கள். (யாத். 9:29-33; எஸ்றா 9:5; ஏசா. 1:15).

**8:62-66. 14 நாட்கள் பிரதிஸ்டை.**

ஆலயம் அலுவலக ரீதியாக பிரதிஸ்டை பண்ணப்பட்டது, ஆயிரமாம் தகனபலிகளைச் செலுத்தினார், இதனைத்தொடர்ந்து 14 நாட்கள் பண்டிகை கொண்டாடினார்கள். எல்லா இடமும் மிகுந்த சந்தோசமாக இருந்தார்கள். அக்காலத்தில் தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லை தொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்துவந்து, அவனோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரித்தார்கள். 8:65

**9:1-9 இந்த ஆலயம் நீடிக்குமா, இது உங்களைப் பொறுத்தது.**

கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டாம் முறை தோன்றினார்.(3:5-14), இஸ்ரவேலர்கள் கர்த்தரைத் தேடினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்குப்பண்ணினார். அவர்கள் வேறே

தெய்வங்களை வணங்குவாராயின் இந்த புதிய அழகான ஆலயம் இடிக்கப்படும் என்றார். மீண்டுமாகக் கர்த்தர் சாலொமோனுக்கு 11:9-13. இலு காட்சியளித்தார்.

### 9:10-14 *அவனுடைய 20 நகரங்களை அவர் விரும்பவில்லை.*

தன்னுடைய விருப்பத்தின்படியெல்லாம் தனக்குக் கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், பொன்னையும் கொடுத்துவந்த தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, ராஜாவாகிய சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான். ஈராம் தனக்குச் சாலொமோன் கொடுத்த பட்டணங்களைப் பார்க்கிறதற்குத் தீருவிலிருந்து புறப்பட்டு வந்தான்; அவைகளில் அவன் பிரியப்படவில்லை. ஈராம் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தான்.

### 9:15-25 இந்தச் செயற்பாட்டுக்கு என்ன விலை?

(9:15), சாலொமோனின் கட்டிட வேலைத்திட்டத்தில் அதிகமான வேலைக்காரர் வலுக்கட்டாயமாக வேலைவாங்கப்பட்டார்கள், என்பது குறித்து குற்றம்பிடிக்கின்றார்கள். 9:20-22 இதன்படி அந்நியர்கள் மட்டும்தான் இந்த வேலைத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றது, ஆனால் இஸ்ரவேலர்களும் இதில் அடிமைப்படுத்தப்பட்டார்கள் என்று 5:13 ம் 11:28 கூறுகின்றன. இப்படியான சாலொமோனின் செயற்பாடுகள் அவருடையா ராஜ்ஜியத்தில் பிளவுகள் ஏற்பட வழிசெய்தது. (12:4).

### 9:26-28 சாலொமோன் மாலுமி.

சாலொமோன் தன்னுடைய சாம்ராஜ்ஜியத்தை செங்கடல்வரை விரிபுபடுத்தினார். அங்கு அவர் கப்பல்களைக்கட்டி ஆபிரிக்கா, அராபியா என்ற நாடுகளுக்கு சேவையில் அமர்த்தினார். ஏற்கனவே யோப்பா பட்டணத்தில் துறைமுகம் இருந்தது. (2நாளா. 2:16), இஸ்ரவேல் இப்போது இரண்டு துறைமுகத்திலிருந்து வியாரங்களை நடத்தினார்கள்.

**10:1-13 இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை**

சாலொமோனின்பெரும் ஞானத்தையும் செல்வத்தையும் பற்றிக் கேள்விப்பட்டபோது, இராணி சோபா வந்து பார்த்தபோது பிரமித்துப் போனார்கள்.

**10:14-29** ***உலகத்திலேயே அதிக ஞானவானும் செல்வந்தனும்***.

**11:1-8. அவர்கள் கர்த்தரிடமிருந்து அவரது இருதயத்தைத் திரிப்பினார்கள்**.

சாலொமோன் நூற்றுக்கணக்கான மனைவிகளைத் திருமணம் செய்துள்ளார், பெரும்பாலனவர்கள் அரசியல் நோக்கங்களைக் கொண்டவையாகும். இந்தத் திருமணங்கள் யாவும் கர்த்தருடைய விருப்பத்திற்கு விரோதமாக நடந்தவையாகும்.(11:2) இவர்கள் சாலொமோனின் இருதயத்தைக் கர்த்தரிடமிருந்து பிரித்து அசரின் மனைவிமாரின் கடவுள்களை ஆராதிக்கச் செய்தார்கள். சாலொமோனின் அரசியல் திருமணங்கள், அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டது. இப்படிப்பட்ட திருமணத்தால் ஆவிக்குரிய பிரச்சனைகள் எற்படும். கர்த்தரை நம்பாமல் எகிப்தின் இரதங்களை நம்புகிறவர்களுக்கு ஐயோ என்று கர்த்தர் கூறுகின்றார். (ஏசாயா. 30:1-3; 31:1).

**11:9-13 பாகால் வணக்கத்திற்கான பரிசுகள்**.

கர்த்தர் மூன்றாம் முறை சாலொமோனுக்கு காட்சி கொடுத்தார், மதநம்பிக்கையைக் கைவிட்டதற்காக தன்னுடைய கோபத்தை சாலொமோன் மீது காண்பித்தார். அத்துடன் இராஜ்ஜியம் அவரது குடும்பத்தை விட்டுப் பறிபோகும் என்றும் கூறினார். உன்னுடைய தகப்பனாகிய தாவீதின் நிமித்தம் ஒரு கோத்திரம் தப்பும் என்றார். ஒருவருடைய இருதயத்தை வேறு தெய்வத்தின் பக்கமாக மாற்றுவது, (11:4)ஒருவருடைய இருதயத்தை கர்த்தரிடமிருந்து பிரிப்பதற்குச் சமமானதாகும். (11:9).

**11:14-25 எதிரிகள் வரத் தொடங்கினார்கள்**.

சாலொமோனைக் கைவிட்ட பிற்பாடு, கர்த்தர் அவனை எதிர்ப்பதற்கான தலைவர்களை உருவாக்கினார். கர்த்தர் ஏதோமியனாகிய ஆதாத் என்னும் ஒரு விரோதியைச் சாலொமோனுக்கு எழுப்பினார்; இவன் ஏதோமிலிருந்த ராஜகுலமானவன். ஆதாத் பொல்லாப்புச் செய்ததுமல்லாமல், ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரவேலைப் பகைத்தான். **(11:25).** இவர் சாலொமோனின் ஆட்சிக்காலம் முழுவதும் பிரச்சனைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தான். **(11:23-25).** கர்த்தர் அன்னிய ஜதிகள் மூலமாக இஸ்ரவேலை நியாயம் தீர்க்கின்றார் என்பதை சாலொமோன் அறிந்திருந்தார். 8:46), அந்த நியாயத்தீர்ப்பிலே தான் அகப்படவதை சாலொமோன் அறியாதிருந்தான். ஒழுங்கீனமான வருடங்கள். : இஸ்ரவேலின் உள்நாட்டு யுத்தங்கள்.**(11:26–22:53)**

**11:26-40. துண்டாக்கப்பட்ட சால்வை கிளர்ச்சியைக் கொண்டு வந்தது.**

யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான் (11:28), இவர் சாலொமோனால், தன்னுடைய அடிமை கூலியாட்களை மேற்பார்வை செய்வதற்கு நியமித்தான். ஒரு தீர்க்கதரிசியானவன் ஒருநாள் சாலொமோனை கர்த்தர் கடிந்து கொள்ளத் தொடங்கிவிட்டார் என்று யெரொபெயாமிற்குக் கூறினான். ஒரு சால்வையைப் 12 துண்டுகளாக வெட்டி , அதில் 10 துண்டுகளை யெரெபெயாமிடம் கொடுத்து, யெரொபெயாம் ஒருநாளில் இஸ்ரவேலின் 10 கோத்திரங்களுக்கு அரசனாக இருப்பான் என்று முன்னறிவித்தார். கர்த்தருடைய நேரத்திற்குக் காத்திராமல் யெரொபெயாம் புரட்சி செய்தான். (11:26) சாலொமோன் கொலை செய்யத் தேடின போது எகிப்திற்கு ஓடிப் போனான். (11:40).

**11:41-43**. சாலொமோனின் மரணம்.

40வருட ஆட்சிக்குப்பின்பு சாலொமோன் மரணமடைந்தார். அவருடைய மகனாகிய ரெகொபெயாம் அரசனானான். அவர் 931-913 வரை அரசாண்டார்.

**12:1-15 உண்மையான வேண்டுகோளுக்கு இரக்கமற்ற பதில்**.

சாலொமோன் மரித்த செய்தியையும், ரெகொபெயாம் அரசனானார் என்ற செய்தியையும் யெரொபெயாம் கேள்விப்பட்ட போது, அவன் எகிப்திலிருந்து திரும்பிவந்து, தன்னுடைய ஜனங்களைச் சேர்த்துக் கொண்டு, சாலொமோனின் அடக்குமுறையைக் குறைப்பதாக அறிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ரெகொபெயாமின் வயது முதிர்ந்த ஆலோசகர்கள் நல்லவார்த்தைகளாக அறிவிக்கும்படி ஆலோசனை பண்ணினார்கள், ஆனால் இளம் நண்பர்கள் அதற்கு எதிர்மாறாக பாரமான வார்த்தைகளை அறிவிக்கும்படி கூறினார்கள். அதன்பிரகாரம் ரெகொபெயாம் பாரமான வார்த்தைகளை அறிவித்தான்.

**12:16-20** தங்களுடைய வேண்டுதலுக்கு இகழ்ச்சியான பதிலை ரெகொபெயாம் கூறிய போது, அவர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி யெரொபெயாமைத் தங்கள் அரசனாக அறிவித்தார்கள். யூதா, ரெகொபெயாமின் கோத்திரத்தார், அவருடைய சந்த்தியினர், அவனுக்கு விசுவாசமாக இருந்தனர். தாவீதின் கோத்திரத்தில் கர்த்தரால் வாக்குப்பண்ணப்பட்ட ஒரு கோத்திரம் இதுவாகும், (11:13).பென்ஜமின் கோத்திரத்தாரும் தாவீதின் அரசர்களுக்கு விசுவாசமாக இருந்தார்கள். (11:13). ஆனால் தெற்கு ராஜ்ஜியம் எப்போதும் யூதா என்று அழைக்கப்பட்டதற்கான காரணம், அவர்களின் பலமும், மதஸ்திரத் தன்மையுமாகும். (2சாமு. 19:40-43 எஸ்றா 1:5.)1406 இல் கானானுக்குள் நுழைந்தபோது, 350 வருடங்களாக அரசன் இல்லாமல் இஸ்ரவேல் பிழைத்திருந்தது. இப்போது 931 இல் 120 வருடங்களுக்குப்பின்பாக தங்களுக்குரிய முதலாவது அரசனை 1051 இல் பெற்றுக் கொண்டார்கள், இஸ்ரவேல் ஒரு பிளவுபட்ட தேசமாக இருந்தது.

### 12:21-24 "யுத்தம் செய்யவேண்டாம், இது என்னுடைய செயல்"

யெரொபெயாம் தன்னுடைய 10 கேத்திரத்து மத நம்பிக்கையற்ற ஜனங்களைச் இணைத்துக் கொண்டு, யுத்தத்திற்குத் தயாராகினான். ஆனால் அவர்களின் திட்டத்திற்கு கர்த்தர் முற்றுப்புள்ளியை வைத்தார். பிளவுபட்ட இராஜ்ஜியம் தன்னுடைய விருப்பம் என்றும் கூறினார். கர்த்தர் வீணாக இரத்தம் சிந்துதலை விரும்பவில்லை.

**12:25-33** *புதிய தேசத்திற்கு புதிய மதம்.*

யெரொபெயாம், சீகோமை தலைநகராக விஸ்த்தரித்தான். அவர்கள் எருசலேமிற்கு ஆராதனைக்குப் போனால் ரெகொபெயாமால் கெடுக்கப்பட்டுப் போவார்கள் என்று பயந்து,யெரொபெயாம் தாண், பெத்தேல் என்பவற்றை மத ஸ்தானங்களாக விஸ்தரித்தான்., அங்கு தன்னுடைய ஆலயத்தை (கன்றுக்குட்டிகளை) நிறுவினான், லேவியர்கள் அல்லாதவர்கள் ஆசாரியர்களாகவும், பண்டிகைகளையும் அறிவித்தான். யெரொபெயாம் 931–909 வரை அரசாண்டான்.

**13:1-10. பலிபீடம் இடிந்தது, கை முடங்கியது**.

புதிய பலிபீடத்தில் யெரொபெயாம் ஆராதிக்கும் நேரத்தில் கர்த்தருடைய மனுஷன் பெத்தேலுக்கு வந்தார். இந்தப்பலிபீடத்திற்கு அழிவு வரும் என்று தீர்க்கதரிசனம் கூறினார். அந்த தீர்க்கதரிசனம் உடனடியாக நிறைவேறி, பலிபீடம் உடைந்தது, யெரொபெயாமுடைய கையும் மரத்துப் போயிற்று. (13:9), அவரை தன் சினேகிதனாக்க அவர் முயற்சி செய்தார். ஆனால் அவரின் அழைப்புக்கு செவி கொடுக்காமல் அந்த மனிதன் கடந்து போய்விட்டார். 200 வருடங்களுக்குப்பின்பு இந்தத் தீர்க்கதரிசனம், .(13:2) அப்படியே யோசியாவின் நாட்களில் நிறைவேறியது (2இராஜ 23:15-16). தீர்க்கதரிசிகளால் பெயரிட்டுக் கூறப்பட்ட வேதாகம மனுஷரில் யோசியா முதலாமாவர், அடுத்தவர் கோரேசு இவருடைய பிறப்பிற்கு 100 வருடங்களுக்கு முன்பாகவே தீர்க்கதரிசனம் கூறப்பட்டவர். (ஏசா. 44:28).

**13:11-34 . பழைய தீர்க்கதரிசி, இளம் தீர்க்கதரிசி, சுயநலம் பொருந்திய அரசன்.**

கர்த்தருடைய மனுஷன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, அவருடைய தீர்க்கதரிசம்பற்றி ஒரு வயதான தீர்க்கதரிசி கேள்விப்பட்டு, அவரை வழியில் சந்தித்து, பெத்தேலுக்குத் தன்னுடன் திரும்பி வரும்படி அழைத்தான். கர்த்தருடைய மனுஷன் அதனை மறுத்த போது, அந்த வயதான பொய்த்தீர்க்கதரிசி, கர்த்தர்தான் தன்னை அனுப்பியதாக பொய் கூறினார். அதனால், கர்த்தருடைய மனுஷன் அவருடைய அழைப்பிற்கு இணங்கினான், அதனால் அவர் திரும்ப வீட்டிற்குப் பேகும் வழியில் சிங்கத்தினால் கொலை செய்யப்பட்டார் கர்த்தருடைய மனுஷன்

புதைக்கப்பட்டான், வயதான தீர்க்கதரிசி, தான் மரித்தபின்பு இந்த மனுஷன் புதைக்கப்பட்ட இடத்திலேயே தன்னையும் புதைக்கும்படி தன்னுடைய பிள்ளைகளுக்கு கூறினார்.

இந்த வயதான தீர்க்கதரிசி பெத்தேலுக்கு எதிரான தீர்க்கதரிசனம் கூறிய இந்த கர்த்தருடைய மனுஷன் மீது கோபங் கொண்டான். உண்மையில் வயதான தீர்க்கதரிசிக்கூடாக கர்த்தர் பேசியிருந்த போதிலும், (13:20-24 அவர் பெத்தேலுக்கு எதிராகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை நம்பத் தொடங்கினார், (13:32) அதனாலேதான் தன்னை கர்த்தருடைய கல்லறையிலே புதைக்கும் வண்ணம் வேண்டிக் கொண்டதற்கான காரணம் யெரொபெயாமினுடைய பொய்யான மதநம்பிக்கைக்கான நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவதற்காகவாகும். சிங்கம் அந்த கர்த்தருடைய மனுஷனை கொலை செய்ததிலிருந்து இதன் தாக்கத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும். (13:28). இந்த சம்பவங்கள் இடம் பெற்ற பின்பும் யெரொபெயாம் மனம் திரும்பாமலே இருந்தான். இந்த எழுத்தாளன் யெரொபெயாமுடைய வீழ்ச்சி அவரது மதசெயற்பாடுகளினால் ஏற்படுவதைக் குறிப்பிடுவதை நாம் பார்க்கமுடியும். (14). அரசியல் வெல்வாக்கும், செல்வங்களும் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போதுதான் கிடைக்கின்றது.

**14:1-18 தன்னுடைய தகப்பனின் பாவத்திற்காக மரித்தார்**.

யெரொபெயாமினுடைய மகன் சுகவீனமடைந்தபோது, அவன் தன்னுடைய மனைவியை, யெரொபெயாம் ஆட்சிக்கு வருவார் என்று கூறிய தீர்க்கதரிசியாகிய அகியாவிடம் அனுப்பினான், அகியா, அபியா மரணமடைவார் என்று முன்னறிவித்தார், அதுமட்டுமல்லாமல் யெரொபெயாமுடைய ஆண்மக்கள் யாவரும் மரிப்பார்கள் என்றும், அவருடைய குடும்பத்திலிருந்து அரசபாத்திரம் யெரொபெயாமின் தவறான மத வழிபாடுகளின் பிரகாரம் பிடுங்கி எடுக்கப்படும் என்றும் முன்னறிவித்தான். முன்னறிவித்தது போலவே பிள்ளைகள் யாவரும் மரித்தார்கள். தன்னுடைய ஜனங்கள் பிரிந்திருந்த போதிலும், யாவரும் 12 கோத்திரத்தாரும் ஒன்றாக வேண்டும் என்று கர்த்தர் விரும்பினார். ஆலயமும், தாவீதின் அரசர்கள் யூதாவில் இருந்த போதிலும், கர்த்தர் வடக்கு ராஜ்ஜியத்திலுள்ள யெரொபெயாமிற்கூடாகச் செயற்பட விரும்பினார்.

**14:19-20** ***யெரொபெயாமுடைய பதிவுகள். : 22 வருட மீறுதல்கள்.***

யெரொபெயாம் 22 வருட ஆட்சிக்குப்பின்பு மரித்தார், அவருக்குப்பின்பு அவரது மகன் நாதாப் அரசனாகினார். 200 வருடங்களுக்குப்பின்பும் யெரொபெயாமுடைய கெட்ட ஆட்சி பற்றி ஜனங்கள் பேசுகிறார்கள்.(2இராஜ 17:22).

**14:21-31** . ***விக்கிரகம், ஒழக்கக்கேடு படையெடுப்பு , யூதாவில் இருக்கும் போது***.

வடகோத்திரத்தாருடைய 10 கோத்திரங்களும் விக்கிரகத்திற்குள் மூழ்கியிருந்த போது, தெற்குக் கோத்திரம் அதிக நன்மையானவற்றைச் செய்யவில்லை. எருசலேமும், ஆலயமும் அவருடைய அதிகாரத்தில் இருந்த போதிலும், ரெகொபெயாம் புண்ணிய ஸ்தலங்களை கட்டுவித்து, நீதியற்ற செயற்பாடுகளை ஊக்குவித்தான். இந்தக்காலப்பகுதியில் எருசலேம் படையெடுக்கப்பட்டு, பலவகையான சாலொமோனின் பொக்கிசங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. (14:25-28). ரெகொபெயாம் மரித்து அவருடைய மகன் அபியா அரசனானான்.

**15:1-8 தாவீதின் நிமித்தம் அபியாம் ஆட்சி செய்தான்**. *(*913–911), அபியாம் மூன்று வருடங்கள் அரசாண்டான். அவன் தன்னுடைய தகப்பனாரைப் போல கொடுமையானவனாக இருந்தான். அபியாம் ரெகொபெயாம் மாதிரியாகவே அரசாண்டான். யூதாவுக்கும் இஸ்ரவேலுக்குமிடையே யுத்தம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருந்தன. (14:30; 15:6-7)

**15:9-15 அவன் தன்னுடைய சொந்த பெரிய தாயாரை பதவியிலிருந்து நீக்கியது**!

யூதாவின் அடுத்த அரசன். ஆசா. (911–870), அவன் அனேக விக்கிரக வணக்கங்களையும் அநீதிச் செயற்பாடுகளையும் இல்லாது அழித்தான். விக்கிரக ஆராதனையின் நிமித்தம் தன்னுடைய சொந்த பெரிய தாயாரை பதவியிலிருந்து நீக்கினான்.

**15:16-24 பெனாதாத்துடன் தவறான உடன்படிக்கை செய்தல்**

இஸ்ரவேலுடன் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவரக் கூடியவனாக ஆசா இருந்தான். ஆனாலும் ஆவிக்குரிய வண்ணமாக சிரியாவின் அரசனான பொனாதாத்துடன் ஒரு  உடன்படிக்கையை மேற்கொண்டான். ஆலய பொக்கிசசாலையிலிருந்து கொடுக்கப்பட்ட ஆசாவினுடைய கொடையானது கர்த்தரை அவமதிக்கிறதாக அமைந்தது. (2இராஜ16:7-9). ஆசா 41 வருட அரசாட்சிக்குப்பின்பு மரித்தான். (15:10), அவருடைய மகன் யோசபாத் அவருடைய இடத்திற்கு அரசனானான். (873–848) யோசபாத் விரும்பிய ஆவிக்குரிய அத்திபாரத்தை ஆசா கட்டியிருந்தார், ஆனாலும் அவருடைய அரசாட்சியில் நன்மையும் காணப்பட்டது தீமையும் காணப்பட்டது. (22:41-50).

**15:25-32** *நாதாப் (இஸ்ரவேல், 911–909): தன்னுடைய தகப்பன் போலவேகெட்டதையே செய்தான்.*

(வடக்கு ராஜ்ஜியக்குறிப்புகள்22:41.). நாதாப் தகப்பனாகிய யெரொபெயாம் மாதிரியே கெட்ட அரசியல் செய்தான். இவரே முதலாதும் கடைசியானதுமான யெரொபெயாமின் சுதந்திரவாளியாகும். இரண்டு வருடங்களுக்குப் பின்பு, அவரும், அவரது சகோதரங்கள் யாவரும் பாஷாவினால் கொல்லப்பட்டார்கள். பிற்பாடு அவன் அரசனானான். பாஷா கொலைகள் தீர்க்கதரிசனத்தை நிறைவு செய்தது. 14:7-16.

**15:33–16:7 பாஷா (இஸ்ரவேல் 909–886): நாய்களினால் விழுங்கப்பட்டார்கள்.**

பாஷா 24 வருடங்கள் அரசாண்டான். யெரொபெயாமுடைய வீட்டை நியாயந்தீர்க்கும் ஆயுதமாகப் பாவிக்கப்பட்ட போதிலும், பாஷா தானும் அதே பாவங்களையே செய்தான், அதனால் அவனுக்கும் அதே நியாயத்தீர்ப்புத்தான் கிடைத்தது. பாஷாவுக்கு எதிரான சாபமும் (16:2-4), ஆனானின் குமாரனாகிய யெகூவினால் கர்த்தர் எச்சரித்தார், யெரொபெயாமுக்கு எதிரான சாபம் போலவே காணப்பட்டது. (14:7-11).

***16:8-14 எல்லா (இஸ்ரவேல், 886–885): இரதமோட்டியினாலே கொல்லப்பட்டான்.***

பாஷாவின் இடத்திற்கு ஏலா அரசனான் அவன் மது போதையில் இருந்த போது, சிம்ரி என்னும் அவனுடைய இரதமோட்டியினால் ஏலா கொல்லப்பட்டான். சிம்ரி, பாஷவின் ஆண்சந்ததியார் அனைவரையும் கொன்று போட்டான். இது 16:3 இல் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவு செய்தது.

தெற்கில் தவீதின் சந்ததியினர் உயிர்தப்பி இருந்தபோது, வடக்கில் இப்படியான சதிகள் இடம்பெற்றன.

**16:15-20*சிம்ரி (இஸ்ரவேல், 885):ஏழுநாள் அதிசயம்..***

ஏலாவை சிம்ரி கொலைசெய்துவிட்டான் என்ற செய்தியை ஜனங்கள் கேட்ட போது, அவர்கள் தங்கள் படைத் தலைவனாகிய உம்ரியை தங்கள் அரசனாக அறிவித்தார்கள், அத்துடன் சிம்ரியின் மாளிகையை முற்றுகையிட்டார்கள். தனக்கு அழிவு வரப்போகின்றது என்று உணர்ந்த சிம்ரி தற்கொலை செய்து கொண்டான். (16:18-19).

**16:21-28 *உம்ரி (இஸ்ரவேல், 885–873): நல்ல கட்டிட கலைஞர், கெட்ட அரசன்.***

சிறிய காலப் போட்டியில், உம்ரி அரசனாக வந்தான். ஒத்றி, ஒரு குறிப்பிட்டளவு ஸ்திரத் தன்மையையும், செழிப்பையும் இஸ்ரவேலுக்கு கொண்டுவந்தார். அவர் மூன்று பரம்பரைக்குத் தேவையான அளவு சாம்ராஜ்ஜத்தை விஸ்தரித்தார். அவர் சமாரியாவைக்கட்டினார், அது வடக்கு ராஜ்ஜியத்தின் நீண்ட காலமாக தலைநகராக இருந்தது. உம்ரி தனக்கு முன்பிருந்த இராஜாக்களைப் பார்க்கிலும் அதிக கெட்டவனாக இருந்தார்.

**16:2516:29-34 ஆகாப் *(இஸ்ரவேல், 874–853): கர்த்தர் இல்லாத வழிகள், கர்த்தர் இல்லாத மனைவி***

ஆகாப் அரசனாகி, 22 வருடங்கள் ஆட்சி செய்தான். உம்ரியைப் பார்க்கிலும் ஆகாப் கெட்டவனாக இருந்தான். அவன் அதிகமாக கடவுள் இல்லாத மத குழப்பங்காரருடன் இணைந்து, யோசபேலைத் திருமணம் செய்தவுடன், அவளுடைய பாகால் வணக்கத்தை அதிகரித்தான். வடராஜ்ஜத்தின் அரசர்கள் அந்நிய தெய்வங்களை வணங்கிய போதிலும், யெகோவா தேவனுக்கு அதிக கனத்தைக் கொடுத்தார்கள். ஆனால் ஆகாப் தன்னுடைய ஆராதனையில்

பாகால் தெய்வத்தையே மேன்மைப்படுத்தினான். 16:34 இதனால் யெகோவா தேவனின் சாபம் எரிக்கோ மீது வந்தது. (யோசு. 6:26).

**17:1-7 எலியா : நான் சொல்லும்வரை மழை பெய்யாது.**

கர்த்தர் எலியாவை ஆகாப்பினிடத்தில் அனுப்பி தான் சொல்லும் வரை இனிமேல் மழைபெய்யாமல் வறட்சியே காணப்படும் என்று தீர்க்கதரிசனம் கூறினான். அதன்பின்பு கர்த்தர் எலியாவை ஆற்றங்கரையில் இருக்கும்படியும் உணவும் தண்ணீரும் அங்கே கிடைக்கும் என்று கட்டளையிட்டார். வறட்சி அதிகமான போது, அந்த ஆறும் வற்றிவிட்டது.

**17:8-16 பஞ்சம் முடியும்வரை எண்ணெய்யும் அப்பமும் குறையவில்லை**.

தண்ணீர்வற்றியவுடன், எலியாவுக்கு சாறீபாத் ஊருக்குப் போகும்படி கட்டளை பிறந்தது, அங்கே ஒரு விதவை அவரைப் போசித்தாள். எலியா அங்கே போன நேரத்தில், அந்த விதவையின் உணவும் ஒளியும் நிலையில் இருந்தது, ஆனால் வறட்சி முடியும்வரை அந்த உணவின் விதவையின் குடும்பமும் எலியாவும் பசியாறினார்கள். (மத்தேயு. 14:14-21; 15:32-38) .

**17:17-24 உயிரற்ற மகன் மேலறைக்கு கெண்டு போகப்பட்டான், உயிருள்ளவனாக கீழே கொண்டுவரப்பட்டான்.** விதவையின் மகன் மரித்தான், ஆனாலும் எலியாவின் ஜெபத்திற்குப் பிற்பாடு கர்த்தர் அவனுக்கு மீண்டும் ஜீவனைக் கொடுத்தார், இதனால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பது நிருபணமாயிற்று. மரணமடைந்த ஒருவரை உயிரோடி எழுப்பிய முதல் சம்பவம்.

**18:1-16 மழை வரும் என்பதை ஆட்சியாளருக்குச் சொல்லு.**

எலியா ஆகாப்பினிடத்தில் சென்று வறட்சி நின்று போயிற்று, மழைவரும் என்று கூறினான். வழியிலே கர்த்தருக்குப் பயந்த ஒபதியா என்ற ஆகாப்பின் வேலைக்காரனைக் கண்டான். இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல் என்றான். அதற்கு அவன்: ஆகாப் என்னைக் கொன்று போடும்படிக்கு, நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன். உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் மனுஷரை அனுப்பாத ஜாதியும் ராஜ்யமும் இல்லை என்று உம்முடைய தேவனாகிய கர்த்தரின்

ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; நீர் இல்லையென்று அவர்கள் சொன்னபோது, அவன் அந்த இராஜ்யத்தையும் அந்த ஜாதியையும் உம்மைக் காணவில்லை என்று சத்தியம் வாங்கிக் கொண்டான். இப்போதும் நீ போய், உன் ஆண்டவனுக்கு, இதோ, எலியா வந்திருக்கிறான் என்று சொல் என்று நீர் சொல்லுகிறீரே. நான் உம்மை விட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்த பின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்று போடுவானே; உமது அடியானாகிய நான் சிறுவயது முதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன். ஒபதியா எலியா வந்திருப்பதை ஆகாப்பிற்கு அறிவித்தான். ஆகாப் எலியாவைச் சந்திக்கப் புறப்பட்டான்.

**18:17-19 நான் பிரச்சனையல்ல, ஆனால் பிரச்சனையைத் தேடுகிறேன்**.

ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள். இப்போதும் கார்மேல் பர்வதத்திலே இஸ்ரவேலனைத்தையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பதுபேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும் என்றான். 18:19

**18:20-30 உம்முடைய தேவன் வருவாரா**

கார்மேல் பர்வதத்தில் ஜனங்கள் கூடிவந்திருக்கும் போது பாகாலா, யெகோவா உண்மையான தேவன் என்பதை கூறுங்கள் என்று கூறினான். அவர்கள் அமைதியாக இருந்தார்கள். யாருடைய கடவுள் இந்த பலியை பட்சிப்பதற்கு அக்கியை அனுப்புவது என்று பார்ப்போம் என்று எலியா கூறினான். உண்மையான தெய்வம் யார் என்று பார்ப்பதற்கு இது நல்ல சோதனை தான் என்றார்கள். முதலில் தங்கள் தெய்வத்தைக் கூப்பிடுமாறு பாகாலுடைய தீர்க்கதரிசிகளை வேண்டிக் கொண்டார். அவர் ஜெபித்தார்கள்

ஆனாலும் எந்தபதிலும் இல்லை. எலியா அவர்கள் தெய்வத்தை இழித்துரைத்தான். (18:27)

**18:31-40 அவன் பலிபீடத்தை நிறுவினான், ஜெபம் செய்தான், அக்கினி இறங்கியது.**

இஸ்ரவேலின் உடைந்த பலிபீடத்தை எலியா திரித்தினான், தண்ணீரால் நிரப்பினான். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள். (18:37) அப்பொழுது எலியா அவர்களை நோக்கி: நீங்கள் பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு அவர்களைப் பிடித்து கொலை செய்தான்.

**18:41-46 சிறியமுகில் கூட்டம், பிற்பாடு பெரும் மழை**

வறட்சி முடிகிறது என்று எலியா ஆகாப்பிற்குக் கூறினான். சிறியமேகம் காணப்பட்டு, பெரும் மழையாக மாறியது, ஆகாப்பும், எலியாவும் கார்மேல் பர்வதத்திலிருந்து யெஸ்ரயோலுக்கு ஓடினார்கள். எலியா கால்நடையாகவும், ஆகாப் இரதத்திலும் சென்றார்கள்.

**19:1-8 உன்னுடைய தலையை வெட்டிப் போடுவேன்.**

எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச் சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன்

பிராணனைக்காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்தார்.
பாலைவனத்தில் ஒரு தேவதூதன் அவனுக்கு ஊழியம் செய்தான். அங்கிருந்து எலியா ஓரேப் பர்வதத்திற்குகே சென்றார். தான் சாகவேண்டும் என்று கர்த்தரை வேண்டிக்கொண்டான். சாக விரும்பிய எலியா அதற்கு பின் இன்றுவரை சாகாமல் இருக்கிறார்.

**19:9-18.** ***அமைதி,மெல்லிய சத்தம், 7000 பரிசுத்தவான்கள்.***

கர்த்தர் அவரோடு மெல்லிய சத்தத்தில் பேசினார் இஸ்ரவேலில் நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்று கர்த்தரிடத்தில் முறையிட்டான்.(19:12), கர்த்தர் எலியாவைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்தரத்திற்குத் திரும்பிப்போய், ஆசகேலைச் சீரியாவின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி, ஆபேல் மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ணு. (19:15-17). புதிய ராஜாக்களும், எலிசாவும் நியாயத்தீர்பின் பாத்திரங்களாக கர்த்தரால் உபயோகிக்கப்பட்டனர். (19:17). பெனதாத்தைக் கொலை செய்தபிற்பாடு ஆசகேல் அரசனானான். (2இராஜ8:15), ஆகாப்பினுடைய மகன் யியோபெராமிற்குப் பிற்பாடு ஜெகூ அரசனானான். 2இராஜ 9:1-10).

**19:19-21** ***மண்ணை உழுதவன் கர்த்தரின் தீர்க்கதரிசியானான்.***

எலியா, எலிசாவை அவருடைய பண்ணையில் வேலை செய்து கொண்டிருக்கும் போது கண்டு, அவரைத் தீர்க்கதரிசியாக கட்டளையிட்டார். தாய் தகப்பன்மார்களுக்கு பிரியாவிடை வைத்துவிட்டு எலியாவைப் பின் தொடர்ந்து சென்றான்.

**20:13-22. குடிகாரரின் தோல்வி**

பெனாதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு இராஜாக்களாகிய மற்ற இராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபிடத்தில் வந்து: அந்த ஏராளமான ஜனக்கூட்டத்தையெல்லாம் கண்டாயா? இதோ, நானே கர்த்தர்

என்று நீ அறியும்படி  இன்றைக்கு அதை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். யாரைக் கொண்டு என்று ஆகாப் கேட்டான்; அதற்கு அவன்: மாகாணங்களுடைய அதிபதிகளின் சேவகரைக்கொண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்; பின்பு அவன், யுத்தத்தை யார் துவக்கவேண்டும் என்று கேட்டதற்கு; அவன், நீர்தான் என்றான். அவர்கள் அவரவர் தங்களுக்கு எதிர்ப்படுகிறவர்களை வெட்டினார்கள்; சீரியர் முறிந்தோ டிப்போனார்கள்; இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தினார்கள்; சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், குதிரையின் மேல் ஏறிச் சில குதிரைவீரரோடுங்கூடத் தப்பியோடிப் போனான். (20:20),

**20:23-30 அவர்களுடைய தெய்வம் மலைப்பிரதேசத்துக்குரியது.**

அவர்களுடைய தேவர்கள் மலைத்தேவர்கள், அதினால் அவர்கள் நம்மை மேற்கொண்டார்கள்; நாம் அவர்களோடே சமபூமியிலே யுத்தம்பண்ணினால் நல்லது; அப்பொழுது அவர்களை மேற்கொள்வது நிச்சயம். அந்தக் காலத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு கடவுளின் ஆட்சி என்று கருதப்பட்டது. பாகால், உதாரணமாக, காலநிலையின் தெய்வம், அல்லது செழிப்பின் தெய் வமாகும். இங்கு ஒரு தெய்வ வழிபாடு இல்லை.

**20:31-34. அவர்களின் எதிரிகளுடன் சினேகம் கொள்ளுதல்.**

அவர்கள்  தோல்வியடைந்ததைப் பார்த்து, சிரியாவின் தலைவர்கள் சாக்கு உடுத்து, இரக்கத்திற்காக தங்கள் ராஜாவை மன்றாடினார்கள், ஆகாப் அவர்களுக்குச் செவிமடுத்து. பெனாதாத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். அந்த உடன்படிக்கை உண்மையில் தேவையில்லை. ஏனெனில் கர்த்தர் ஏற்கனவே சிரியாவை  இஸ்ரவேல் வெல்லும் என்று கர்த்தர் வெளிப்படுத்தியுள்ளார். (20:28).

**20:35-43. நீ அவன் ஜீவனைத் தப்புவித்தாய்,**

அந்த இடத்தில் நீ சாவாய். தனக்கு இணையானவனைக்  காட்டிக் கொடுத்த பிற்பாடு, (20:35-36), ஆகாப், கர்த்தர் கூறியதுபோல் பெனாதத்துடன் உடன்படிக்கை செய்யத் தவறியதன் நிமித்தம், ஒரு தீர்க்கதரிசி  ஆகாப் பிரயோசனமற்றவன் என்று கூறினான். தீர்க்கதரிசியின் உவமையும் ஆகாப்பின் வெறுப்புணர்ச்சியும்.(20:39-40) நாத்தான்வேலின் உவமையும் தாவீதின் பிரதிபலிப்பையும் ஞாபகப்படுத்திக் கொள்வோம். (2*சாமு*.12:1-7 2*சாமு*.14:1-20).

**21:1-4 விற்பனைக்கில்லை**.

அயல் வீட்டுக்காரனுடைய வீட்டுத் தோட்டத்தை விலை கொடுத்து வாங்க ஆகாப் விரும்பினான். தன்னுடைய குடும்பச் சுதந்திரமான திராட்சைத் தோட்டத்தை விற்பதற்கு விரும்பவில்லை என்று நாபோத் கூறினான். நாபோத்தின் இந்த மறுப்புக்காக ஆகாப் அதிககோபமும் வெறுப்பும் அடைந்தான். இஸ்ரவேலர்களின் குடும்பத்தில் வெளியாருக்கு நிலம் சொந்தமாகப் போனால், அந்த சந்ததியிலுள்ளவர்கள் அதைமீட்டுக் கொள்வார்கள்.(லேவி. 25:25-28; ரூத் 4:1-4).

**21:5-16 யோசபேலின் மரணத்திற்கான கடிதம்**.

யோசபேல், ஆகாப் மனத்துக்கமாக இருப்பதைக் கண்டு, நாபோத்தின் மரத்துக்கான கடிதத்தை எழுதி அனுப்பினாள். அந்த சதிவெற்றியளித்தது. யோசபேல், நாபாத்தின் மரணத்தை ஆகாப்பிற்கு அறிவித்தான். நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக ஆகாப் ஆயத்தப்பட்டான்.

**21:17-26 அவருடைய மரணத்தில் நாய்கள் சந்திக்கும்**.

நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

**21:27-29** ***வஞ்சகமான மனம் திரும்புதல்.?***

ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பைவரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன் என்றார். இவருடைய நியாயத்தீர்ப்பு யெகூவினால் நிறைவேற்றப்படும். (2இராஜ10:1-11). ஆகாப்புடைய பிற்காலக் கொடுமை மிகாயா பக்கமாகத் திரும்பியது.(22:26-27பின்பு அவரது துயரம் யோசபாத் பக்கமாகத்திரும்பியது. (22:29-33), அவருக்கு விருப்பம் இல்லாத கர்த்தரின் எச்சரிக்கை மிகாயாவுக்கூடாக வந்தது. 22:13-28) அவருடைய மனம் திரும்புதல் உண்மையானதா?

**22:1-12 நீ மற்றத் தீர்க்கதரிசிகளைப் போலல்லாதவன்.**

சிரியாவின் கட்டுப்பாட்டிலுள்ள கில்காத்திலுள்ள ராமாத்தை விடுவிப்பதற்கு உதவி செய்யும்படி யூதாவின் இராஜாவாகிய யோசபாத்தை ஆகாப் அழைத்தான். யேசபாத் இந்த உதவியைச் செய்வதற்கு இது கர்த்தருக்குச் சித்தமா என்று யோசித்தான். ஆகாப் 400 தீர்க்கதரிசிகளை அழைத்தார், அவர்கள் யாவரும் யுத்தம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். யோசபாத் இவர்களின் வார்த்தையில் சந்தேகம் கொண்டு கர்த்தருடைய உண்மையைக் கூறும் தீர்க்கதரிசியை அனுப்பி வைக்கும்படி ஆகாப் அரசனிடம் கோரிக்கைவிடுத்தான். (22:7), அப்படியான ஒரு தீர்க்கதரியை மிகாயாவை அனுப்புவதற்கு ஒத்துக் கொண்டான். ஆனால் உண்மையில் மிகாயாவின்மேல் அவனுக்கு விருப்பமில்லை, அவர் எப்போது அவனுக்கு எதிராகவே தீர்க்கதரிசனம் சொல்லுவார்.

**22:13-28 மேய்பன் இல்லாத ஆடுகள்**.

ஜனத்தோடு போவதற்கு மறுத்தான், ஆகாப் யுத்தத்திற்கு அழிவு என்று மீகாயா தீர்க்கதரிசனம் சொன்னான். பொய்த்தீர்க்கதரிசிகள் 400 பேரைக் கூப்பிட்டார்கள். (22:19-23), கர்த்தர் என்ன செய்யப் போகின்றார் என்பதைக்குறித்து மீகாயா நம்பிக்கையாக இருந்தான். ஆகாப், மீகாயா கூறிய ஆரம்ப தீர்க்கதரிசனம் பொய்யானது என நம்பினான். (22:15-16)

**22:29-40 வஞ்சகமாக இராஜாவும், இலக்கின்றி எய்யப்பட்ட அம்பும்**

மீகாயாவை விடுத்து, ஆகாப்பும் யோசபாத்தும், சிரியாவுடன் யுத்தத்திற்குப் போனார்கள். மீகாய்யாவின் தீர்க்கதரிசனம் சரியா எனத் தேடினார்கள். ஆகப் தன்னை வெறுத்து யோசபாத்தின் எதிரிகளின் கவனத்தை கவர்ந்தார். யோசபாத் சாவுக்கு நெருங்கினார், ஆனால் ஆகாப் அம்பு பட்டு மரித்தார்.

**22:41-50. யூதாவின் இராஜாக்கள் அனேகமானோர் நல்லவர்கள்**.

யோசபாத்தின் ஆட்சி பெரும்பாலும் நன்றாகவே இருந்தது, தன்னுடைய தகப்பனாராகிய ஆசாவின் சீர்திருத்தத்தை அவர்தொடர்ந்து செய்ய தவறிவிட்ட போதிலும், அவர் ஒரு நல்ல அரசனாக இஇருந்தார் ( 15:16-24).

**22:51-53 இஸ்ரவேலின் அடுத்த இராஜா கெட்டவன்.**

அகசியா தன்னுடைய தகப்பனாராகிய ஆகாப்பின் இடத்திற்குப் பின்பு அரசனாகி இரண்டுவருடங்கள் அரசாண்டான். (853–852). அவருடைய கெட்டவழிகள் ஆகாப், யோசபேல், யெரொபெயாம் என்பவர்களுடன் ஒப்பிடக் கூடியதாகவே இருந்தது. அவர் தன்னுடைய சகோதரனாகிய

யெரொபெயாமுடைய வழிகளில் நடந்தான், இவரே ஆகாப்பின் அரசாட்சி செய்தவரில் இறுதி சந்ததியாவார் (அகாசியாவின் கதை 2 ராஜாக்களில் தொடர்கின்றது )

## சாலொமோன்

இஸ்ரவேலின் மிகச் சிறந்த இராஜா,(1 இரா1-11; 2நாள. 1-9).

A. தன்னுடைய எதிரிகள் யாவரையும் வெற்றி கொண்டவர். (1இரா. 1:1-2:46).

1. **அதோனியாவை வெற்றி கொள்ளல்**.
    - மரணப்படுக்கையில் தாவீது இருக்கும் போது, அவனுடைய மூத்த மகனாகிய அதோனியா தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய சாலொமோனின் சிங்காசனத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தான், இதற்கு அபியத்தாரும், யோவாப்பும் உதவினார்கள். (1:7).
    - சாலொமோனுக்கு, தீர்க்கதரிசியாகிய நாத்தான்வேலும், அவனுடைய தாயாகிய பத்சேபாளும், பிரதான ஆசாரியனான சேதோக்கும், தாவீதின் யுத்தவீரரான பெனாய்யா என்பவர்களும் உதவியாக இருந்தார்கள். (1:8-11).
    - மரணமடைந்து கொண்டிருக்கும் தாவீதை அவன் மனைவியாகிய பத்சேபாள் சந்தித்து சாதேக்கினால் அபிஷேகம் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்தாள். (1:39).
    - அதோனிய பயிற்சிக்காலத்தில் இருந்தான், அவன் தாவீதின் கடைசி மறுணையாட்டியாகிய அபிஷாக் என்பளை திருமணம் செய்வதற்கும், தாவீதின் சிங்காசனத்தைக் கைப்பற்றுவதற்கும் முயற்சித்தபடியால் தூக்கிலிடப்பட்டான். (1:3; 2:17, 25).

2. அபியத்தார் தாவீதிற்கு விசுவாசமுள்ளவனாக நடந்தபடியால், அபியத்தாரைக் கொலை செய்யாமல் உயிருடன் வாழ அனுமதித்தான், ஆனாலும், ஆசாரியனாக இராதபடி தள்ளிப் போடப்பட்டார். (2:26, 27).

3. **யோவாப் கொலை செய்யப்படல்**. (2:28-34). இரத்தம் சிந்தின தலைவர்கள் யாவரும் இறுதியில் கொலை செய்யப்பட்டார்கள். அதோனியாவின் புரட்சியில் பங்குபற்றியது மல்லாமல், அப்னோர், அமாசா ஆகியோரின் கொலைகளுடனும் யோவாப் சம்பந்தப்பட்டுள்ளார்.

4. சீமேயியும், அதோனியாவும் நன் நடத்தைக் காலம் நியமிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள், ஆனால் அதனை தகர்த்தெறிந்து மரணத்தைத் தழுவிக் கொண்டான். சீமேயின் மரணத்தின் போது தாவீதின் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. அதாவது சீமேயும், யோவாப்பும் சாலொமோனின் கையால் தீர்ப்புப் பெற்று கொலை செய்யப்பட்டார்கள். (2:5, 8).

**B. அவருடைய திறமைகள் கர்த்தரிடமிருந்து பெறப்பட்டவை. (3:4-28).**

1. கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில்கேள் என்று தேவன் சொன்னார். (3:6-9).

2. எருசலேமிற்கு வந்தபோது புதிதாக பெற்றுக் கொண்ட ஞானத்தைப் பரீட்சிக்கும் வகை ஏற்பட்டது. இரண்டு வேசிகள் இரண்டு பிள்ளைகளின் விடயமாக அவரைச் சந்திக்க வந்தார்கள், ஒருபிள்ளை உயிருடன் இருந்தது, மற்றப் பிள்ளை மரித்து இருந்தது., உயிரோடு இருக்கும் பிள்ளை தன்னுடையதே என்று இரண்டு பெண்களும் கூறினார்கள். சாலொமோன், உயிரோடு இருக்கும் பிள்ளையைப் பாதியாக வெட்டி இரண்டு பெண்களுக்கும் ஆளுக்கொரு பாதியைக் கொடுக்கும் வண்ணம் யோசனை கூறினார். உண்மையான தாயார் மிகவும் பயந்து அழுதாள் தான் உண்மையான தாயார் என்ற அடையாளத்தைக் காண்பித்தாள். (3:16-28).

**C. இஸ்ரவேலில் அமைதியான ஆட்சி.**(1இரா. 4:1-34). சாலொமோனின் அரசாட்சி, கிறிஸ்த்துவின் ஆயிரம் வருட அரசாட்சிபோல் மிகவும் அமைதியாக இருந்தது. கீழ்க்கண்டவாறு அதனை நாம் பார்க்கலாம்.

1. சாலொமோன் 12 அமைச்சரவை உறுப்பினர்களைக் கொண்டிருந்தார். (1இரா. 4:7 இயேசுவும் தம்முடைய 12 சீடர்களோடும் கலந்துரையாடுவார்.(மத் 19:28).

2. சாலொமோன் பரிசுத்த பூமி முழுவதையும் அரசாண்டார். (1இரா. 4:21), இயேசுக் கிறிஸ்து சகல இடங்களையும் அரசாளுவார். ( .வெளி 11:15).

3. நாம் கிறிஸ்த்துவைச் சேவிப்பதுபோல, சாலொமோனை ஜனங்கள் யாவரும் சேவித்தார்கள்.(1இரா. 4:21; வெளி. 22:3).

4. சாலொமோன் உள்ளூரில் சமாதானத்தைக் கொண்டுவந்தார், (1இரா. 4:24), கிறிஸ்த்து உலகம் முழுவதையும் சமாதானத்திற்குள் கொண்டுவருவது போல.(எச 2:2-4).

5. சாலொமோனுடைய நாளெல்லாம் தாண் துவக்கிப் பெயெர்செபா மட்டும், யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சச் செடியின் நிழலிலும், தங்கள் தங்கள் அத்திமரத்தின் நிழலிலும் சுகமாய்க் குடியிருந்தார்கள்(1 இரா4:25).கிறிஸ்த்துவின் காலத்திலும் இதைப்போலவே இருக்கும். (எரே23:6; மீக 4:4; சகரி.3:10).

**D. அவருடைய ஆலய ஆராதனை. (**1இரா. 5-8; 2நாள. 2-7).

1. ஆயத்தம்

- சாலொமோனின் நான்காவது வருடத்தில் மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு பதினோராம் வருடம் நவம்பர் மாதம் நிறைவு பெற்றது மொத்தமாக ஏழு வருடங்கள் சென்றன. (1இராஜ. 6:38).
- மோசேயினுடைய ஆசாரிப்புக் கூடாரத்தைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு பெரியது. 90 அடி நீளம், 30 அடி அகலம், 45 அடி உயரம் கொண்டது. (யாத்தி. 26:16, 18.)
- இது அடிமைகளைக் கொண்டு கட்டப்பட்டது, இந்த செயற் திட்டத்தை சாலொமோன் ஆரம்பித்து வைத்தார். 100,000 இஸ்ரவேலர்களும், 80,000 கல்லு வெட்டு பவர்களும்,மேலும் 3,600 கண்காணிப்பவர்களும் பங்கு பற்றினார்கள்.
- தளப்பகுதியும், சுவரும் கல்லுப்பதிக்கப்பட்டு கேதுரு மரத்தால் மறைக்கப்பட்டு, அதைப் பொன்தகட்டால் மூடினார்கள்.(1இரா. 6:16, 21, 22).
- இது சுத்தியலின் சத்தமோ,கோடாரிகளின் சத்தமோ, அல்லது வேறு ஏதாவது ஆயுதங்களின் சத்தமோ இன்றிக்கட்டி முடிக்கப்பட்டது.(1இரா. 6:7).

- இது பத்து விளக்குத் தண்டையும்,மோசேயின் ஆசாரிப்புக் கூடாரத்தில் ஒன்றுக் கெதிராக ஒன்றுவைத்துபோல உருவாக்கப்பட்டது.
- தீருவின் ராஜாவாகிய ஈராமிற்கு, சாலொமோன் ஒரு மில்லியன் புசல் கோதுமையும், 840 கலன் ஒலிவ எண்ணெய்யையும் லீபனொன் காட்டிலிருந்து ஆலயம் கட்டும் மரங்களுக்காச் செலவு செய்தான் (5:8-11).
- **மகா பரிசுத்த ஸ்தலத்திலே இரண்டு பொன்னிலான சேரூபீன்கள் வைக்கப்பட்டன.(1இரா. 8:7).**

2. **பிரதிஷ்டை செய்தல்.** சாலொமோன் இந்த சந்தோஷமான நாளுக்காக , சுருக்கமாக இடம்பெற்ற சரித்திர நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்.(1இரா. 8:12-21; 2நாள. 6:1-11).

3. **வேண்டுதல்** (1இரா. 8:22-53; 2நாள. 6:12-42):பிரார்த்தனை(1இரா. 8:22-53; 2நாள. 6:12-42).

**சாலொமோன் இந்த அழகான ஆலயத்தின் மகிமைக்காக ஜெபம் பண்ணினான்**

**A. ஒவ்வொரு தனிப்பட்டவர்களுக்குமான ஜெபம். (1இரா. 8:31, 32).**

(1) பாவிகள் நியாயம் தீர்க்கப்படல் வேண்டும்.

(2) நீதிமான்களின் நீதி நியாயப்படுத்தப்படல் வேண்டும்.

**B. தேசத்திற்கான வேண்டுதல்**

(1) பாவங்கள் மன்னிக்கப்படல் வேண்டும்.(. 33-35).

(2) தேசத்தின் நிலங்கள் சுகமாக்கப்படல் வேண்டும். (. 36, 37).

(3) சிறையிருப்பிலுள்ள இஸ்ரவேலர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். (. 44-50).

**C. புறஜாதிகளுக்கான ஜெபம். (. 41-43).**

**4.ஆசீர்வாதமிடல்.(1இரா.8:54-61)**

5.**தரிசனம்**. (2நாள.7:1-3). சாலொமோன் தன்னுடைய ஜெபத்தை முடித்த

போது,வானத்திலிருந்து அக்கினி இறங்கி தகனபலியையும், பலியையும் பட்சித்தது, அத்துடன் கர்த்தரின் மகிமை ஆலயத்தை நிரப்பியது.

6. **அன்பளிப்பு** (1இரா. 8:62-66; 2நாள. 7:4-10). இந்தக் காணிக்கைகள், 120 ஆயிரம் ஆடுகளும், 22 ஆயிரம் எருதுகளும், என்பவையே வேதாகமத்தில் பெரிய காணிக்கையாகும்.

## E. அவனுடைய பொக்கிஷங்கள்.

1. அவருக்கு 700 மனைவிகளும், 300 மறுமணையாட்டிகளும் இருந்தார். (1இரா. 11:3).

2. அவரிடம் அதிகளவிலான சிறப்பான பொன்கள் இருந்தன.

- ஈராமிடமிருந்து 3-1/2 மில்லியன் பெற்றுக் கொண்டார் (9:14)
- **கடற்படையினர்** :- நானூற்றுஇருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவந்தார்கள். (9:27, 28)
- அரசி சீபாவிடமிருந்து 3-1/2 மில்லியன் பொன் பெற்றுக் கொண்டார்.**(10:10)**
- வருடாந்த வரிவருமானம் 20 மில்லியனுக்குமேல். (10:14)

3. அவரிடம் 40,000 குதிரைகள் இருந்தன. (4:26).

4. அவனுக்கு ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது, (10:26).

5. பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள்; (10:26).

6. அவருக்கு விசாலமான பெரிய கப்பல்கள் இருந்தன. (1இரா. 9:26-28; 10:22; 2நாள. 8:17, 18).

7. ராஜா தந்தத்தினால் பெரிய ஒரு சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப்பசும் பொன் தகட்டால் மூடினான். அந்தச் சிங்காசனத்திற்கு ஆறுபடிகள் இருந்தது; ஆறுபடிகளின் மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நின்றன.

8.அவர் இரும்பு உருக்கும் சாலையை கட்டினார்.(1இரா.9:17).

## F. எல்லா இடங்களிலும் நற்சாட்சி பெற்றார். (1இரா. 4:29-34; 10:1-13).

1. அரேபிய நாட்டின் ஆட்சியாளர் அவளுக்காக சாலொமோனிடம் வந்து அவனுடைய பொக்கிஷங்களைப் பார்த்துச் சென்று, அவனுடைய உலகறிந்த ஞானத்தையும் சோதித்தார்கள். நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமா யிருக்கிறது(1இரா. 10:7). ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின்பு இரட்சகர் அவருடைய விஜயத்தைக் குறித்து கூறினார். (மத். 12:42.)

2. கீழ் குறிப்பிட்ட விடயங்களினால் சாலொமோன் உலகப் பிரசித்தியடைந்திருந்தார்.

- நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளினஞானம் (1இரா. 3:28)
- நிர்வாகம் (1 இரா4:29; 5:12)
- அவருடைய பாடல்கள். (1இரா. 4:32)
- இயற்கை விஞ்ஞானம். (1 இரா4:33)
- கட்டுமான வல்லுனர்(1இரா. 5:1-7; 9:15-22)
- வர்த்தக வல்லுனர். (1இரா. 9:26-10:29)
- தத்துவ ஞானம் (புலம்பல் 2:3)
- தோட்டக்கலைவல்லுனர்.(புலம்பல்.2:5)

## G. கர்த்தருக்கு விரோதமான அக்கிரமங்கள்.:

1. அக்கிரமங்களுக்கு எதிரான எச்சரிப்புக்கள்.

- **தாவீதிடமிருந்து கூறப்பட்டவை.**

(1) முதலாம் எச்சரிப்பு (1 நாளா. 22:13) (2) கடைசி எச்சரிப்பு (1இரா. 2:3)

- கர்த்தரிடமிருந்து கிடைத்த எச்சரிப்புக்கள்.

(1) முதலாவது எச்சரிப்பு (1இரா. 3:14)

(2) இரண்டாம் எச்சரிப்பு (9:6, 7)

(3) கடைசி எச்சரிப்பு (11:11)

2. **சாலொமோனின் அக்கிரமங்களின் தன்மைகள்**.

இனிமேல் வரப்போகும் இஸ்ரவேலின் ராஜாவின் தகுதிகள் என்ன என்பதை கர்த்தர் 4-1/2 நூற்றாண்டுகளுக்கு சாலொமோனுக்கு முன்பாக கூறுகின்றார். உனக்கு கர்த்தர் கொடுக்கும் தேசத்தில் நீ வரும்போது, நீ அதைச் சுதந்தரித்துக் கொள்ளுவாய், அங்கே நீ வாழுவாய், நீ அங்கு கூற வேண்டியது, நான் எனக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்துவேன், என்னைச்சுற்றிலும் இருக்கின்ற தேசத்தாரைப் போலவே , ஞானவான்களை உனக்குச் சூழ உருவாக்குவாயாக, உன் சகோதரன் அல்லாதவனை அல்லாமல் உனக்கு அருகில்வேறு அந்நியனை ஏற்படுத்த வேண்டாம், எகிப்திற்கு உனது ஜனத்தைத் திரும்ப அனுப்ப வேண்டாம். முடிவு வரும் போது அவன் குதிரைகளைப் பெருகப் பண்ணுவான். அவன் கர்த்தரை விட்டு பின்வாங்கும்படி அனேக மனைவியரை ஏற்பாடு செய்ய வேண்டாம். அவன் பொன்னிலும், வெள்ளியிலும் ஆசைப்பட்டு அவற்றைப் பெருக்க வேண்டாம். கர்த்தர் சொல்லுவது என்னவென்றால், இவைகள் எல்லவற்றிலும் நீ உன் மனதை வைக்கவேண்டாம்.(உபா 7:14-17). ஆனால் சாலொமோன் இவை எல்லாவற்றிலும் கீழ்ப்படியாமல் போனான்

- அவருக்கு அதிகம் பொன்னும் வெள்ளியும் இருந்தன (1இரா. 10:14-27
- அவருக்கு ஆயிரத்திற்கு அதிகமான குதிரைகள் இருந்தன. (4:26).
- அவருக்கு நூற்றுக்கணக்கான மனைவிமாரும், வைப்பாட்டிச்சிகளும் இருந்தார்கள்.(11:3).

3. சாலொமோனின் அக்கிரமங்களின் முடிவு / விளைவு.:

- அவர் தன்னுடைய ஆட்சியில் முதல் முறையாக தொல்லைக்காரரினாலும், சிறிய புரட்சிக்காரரினாலும் சூழப்பட்டார் (11:14-25).
- அவருடைய மரணத்தின்பிற்பாடு, சாலொமோனுடைய மகனிடமிருந்து பெரிய பகுதியை எடுத்து இன்னுமொருவருக்குக் கொடுப்பேன். (11:9-13, 26-40).

**குழப்பமான இராஜ்ஜியத்தின் நிலமைகள்.**

1. இந்த நிலமை ஏறக்குறைய 325 வருடங்களைக் கொண்டது. கி.மு. 930–605கி.மு. வரையுள்ள காலப் பகுதிகளாகும். முக்கியமான நிகழ்வுகள் சமாரியாவிலும் எருசலேமிலும் இடம்பெற்றன

2. இந்தக் காலப்பகுதிகள் உள்ளூர் யுத்தத்துடன் ஆரம்பமாகியது, இது இஸ்ரவேல் தேசத்தை இரண்டாகப் பிளவுபடுத்தியது, இந்தக்காலப்பகுதி, இரு ராஜ்ஜியங்களும் இவர்களுடைய இரண்டு புறஜாதித் தேசத்தாரினால் கைப்பற்றப்பட்டன. (1இரா. 12; 2இரா. 17, 25). (1இரா. 12; 2இரா. 17, 25).

3. **இந்த குழப்பமானநிலையில் காணப்பட்ட முக்கிய நிகழ்வுகள்.**

- ஒரு ராஜா (யோசியா) ஆலயத்தில் கர்த்தருடைய வார்த்தைகளை கண்டு கொண்டான், இன்னுமொரு இராஜா (யோயாக்கீம்) அதனை நெருப்பிலிட்டு அழித்து விடுவதற்கு முயற்சி செய்தான். (2 இரா22; எரே. 36).
- இந்தக் காலப்பகுதிகளில்,பழைய ஏற்பாட்டுச் சில புத்தகங்கள் பதினொரு எழுத்தாளர்களால் எழுதப்பட்டன. அவையாவன, ஒபதியா,யோவேல், யோனா, ஆமோஸ், ஓசியா, ஏசாயா, நாகூம், செப்பனியா, ஆபகூக், எரேமியா( புலம்பலையும் (எழுதினார்) என்பவைகளாகும்.
- நாலு முக்கிய வேதாகம அற்புதங்களில் இரண்டாவது இந்தக்காலப்பகுதியில் இடம்பெற்றது.

1. முதலாவது அற்புதம் மோசே யோசுவா காலத்தில் இடம்பெற்றது.
2. இரண்டாவது, எலியா எலிசா காலப்பகுதிளில் இடம்பெற்றது.
3. மூன்றாவது தானியேல் எசேக்கியேல் காலத்தில் இடம்பெற்றது.
4. நான்காவது கிறிஸ்த்து அப்போஸ்தலர் காலத்தில் இடம்பெற்றது.

- பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மூன்று பேர் உயிருடன் எழுப்பப்பட்டார்கள்.

1. 1 இரா17, கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்; பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது; அவன் பிழைத்தான்.
2. 2 **இரா** 4, கிட்டேபோய், தன்வாயை பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன்

உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப்படுத்துக் கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது.

3. **2 இரா13.** அப்பொழுதுஅவர்கள், ஒருமனுஷனை அடக்கம் பண்ணப் போகையில், அந்தத் தண்டைக் கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள்; அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின் மேல்பட்ட போது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்

- பழைய ஏற்பாட்டல் ஒரேயோரு மனுஷன் குஷ்டரோகம் நீங்கிச் சுகமானான். (நாகமான்) 2.ராஜா.
- நான்கு குஷ்டரோகிகளால் சமாரியாவுக்கு இரட்சிப்பு வந்தது, மரண தூதனால் எருசலேமிற்கு இரட்சிப்பு வந்தது. (2இரா. 7, 19).
- சமாரிய ஜாதி உருவாகுதல்.(2இரா. 17).
- யோர்தான் நதியைக் கர்த்தர் மூன்று முறை பின்னோக்கி நகரச் செய்தார்,அதில் இது இரண்டாம் தடவையானது. (2இரா. 2). (யோசு. 3.) அப்பொழுது எலியா, தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இரு பக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள் எலியாவின் மேலிருந்து கீழேவிழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான். (2இரா. 2). (யோசு. 3.)

- அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான். பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனை பண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர்மலைத் தேசத்தாரையும்,

ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். (2நாள. 20:20-22).

- அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்கதகன பலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது (1இரா 18:38 )
- கோடாரி தண்ணீரில் மிதந்து வருதல். (2இரா. 6). தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக்காண்பித்த போது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணி, அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன்கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்.
- இருவரில் ஒருவர் மரணமடையாமலே வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படல்.(2இரா. 2). அவர்கள் பேசிக் கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினிரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாகவந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப் போனான். (2இரா 2:11
- தேவதூதர்களின் சேனையையைப் பார்ப்பதற்கு பழைய ஏற்பாட்டில் மனிதர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். (2இரா 6). தேவனுடைய மனுஷனின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக் கொண்டிருக்கக்கண்டான்; அப்பொழுது வேலைக்காரன் அவனை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம் என்றான். அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம் மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்தமலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். (2இரா 6:15-17).

➢ மலைப்பகுதியில் ஏழு முறை ஜெபம் செய்தல், ஏழுமுறை ஆற்றில் மூழ்கி எழும்புதல், ஏழு முறை படுக்கையில் தும்முதல். (1 இரா18; 2 இரா5; 4). எலியா மலையில் ஜெபித்தல், நாகமான் யோர்தான் ஆற்றில் மூழ்குதல், உயிர்த்த பிள்ளை சூனேமில் தும்முதல். (1இரா 18; 2இரா 5; 4).

| **ராஜ்ஜியத்தின் குழப்பநிலை.** | |
|---|---|
| **தெற்கு ராஜ்ஜியம்.** | **வடக்கு ராஜ்ஜியம்.** |
| 1. ரெகொபெயாம் | யெரொபெயாம் |
| 2. அபியாம் | நாதாப் |
| 3. ஆசா | பாஷா |
| 4. யோசபாத் | ஏலா |
| 5. யோராம் | சிம்ரி |
| 6. அகசியா | உம்ரி |
| 7. அத்தாலியா | ஆகாப் |
| 8. யோவாஸ் | அகசியா |
| 9. அமத்சியா | யோராம் |
| 10. உசியா | யெகூ |
| 11. யோதாம் | Jehoahaz யோவகாஸ் |
| 12. ஆகாஸ் | Jehoas *யோவாஸ்* |
| 13. எசேக்கியா | யெரொபெயாம்II |
| 14. மனாசே | சகரியா |

| | |
|---|---|
| 15. ஆமோஸ். | சல்லூம். |
| 16. யோசியா | மெனாகோம் |
| 17. யொகோகாஸ் | பெக்காகியா |
| 18. யோயாக்கீம் | பெக்கா |
| 19. யொகாசீன் | ஓசெயா |
| 20. சிதேக்கியா | |

**தெற்கு, வடக்கு இராஜ்ஜியங்கள்.**

| **தெற்கு ராஜ்ஜியம்** | **வடக்கு ராஜ்ஜியம்** |
|---|---|
| யூதா என்று அழைக்கப்படும் | இஸ்ரவேல் அல்லது எப்பிரகாமீம் என்று அழைக்கப்படும். |

| | |
|---|---|
| 931 கி.மு ஆரம்பமானது | 931 இல் ஆரம்பித்து. |
| முதலாவது அரசன் ரெகொபெயாம் | முதலாவது அரசன் யெரொபெயாம் |
| கடைசி அரசன் சிதேக்கியா | கடைசி அரசன் உசியா |
| மொத்த ஆடசியாளர்கள். 20 | மொத்த ஆடசியாளர்கள். 19 |
| இரட்சிக்கப்பட்டவர்கள் 8 | இரட்சிக்கப்பட்டவர்கள் ஒருவரும் இல்லை |
| இரண்டு கோத்திரங்களைக் கொண்டது. | பத்து கோத்திரங்களைக் கொண்டது. |
| தலைநகரம்,எருசலேம். | தலைநகரம்,சமாரியா |
| பாபிலோனியர்களால் 606. இல் சிறைப் பிடக்கப்பட்டார்கள். | அசீரியர்களால் 721. இல் சிறைப்பிடிக்கப்ப ட்டார்கள். |
| சிறையிருப்பிலிருந்து 3 தடவைகளாக மீண்டு வந்தார்கள். | சிறையிருப்பிலிருந்து ஒருவரும் மீண்டு வரவில்லை |
| 325 வருடங்களாக நீடித்தது. 931–606 கி.மு. | 210 வருடங்களாக நீடித்தது. 931–721 கி.மு. |

- இந்தக் குழப்பநிலை காலப்பகுதிகள் உள்ளூர் யுத்தத்துடன் ஆரம்பமாகியது, இது இஸ்ரவேல் தேசத்தை இரண்டாகப் பிளவுபடுத்தியது, இதில் இரண்டு இராஜ்ஜியங்கள் உருவாகின. வடக்கு, தெற்கு ராஜ்ஜியங்கள்.

A. **வட ராஜ்ஜியம்.**

1. 931. கி. மு இது தொடங்கி 210 வருடங்கள் நீடித்தது..
2. முதலாவது அரசன் யெரொபெயாம் ஆகும்
3. கடைசி அரசன் உசியாவாகும்.
4. மொத்த ராஜாக்களின் எண்ணிக்கை 19 ஆகும். இவர்களில் ஒருவரும் நீதிமானாக இருக்கவில்லை.

5. இதற்குள் 10 கோத்திரங்கள் இருந்தன

6. சமாரியாஇதன்தலைநகரமாகியது.

7 இது அசீரியர்களால் 721 இல் கைப்பற்றப்பட்டது.

8 இவர்களில் ஒருவரும் சிறையிருப்பிலிருந்து ஒருவரும் திரும்பி வரவில்லை.

B. **தெற்கு ராஜ்ஜியம்**.

1. இது 931 இல் ஆரம்பித்து 326 வருடங்கள் நீடித்தது.
2. முதலாவது அரசன் ரெகொபெயாம்.

3 கடைசி அரசன் சிதேக்கியாவாகும்.

4 மொத்த ராஜாக்களின் எண்ணிக்கை 20 ஆகும், இவர்களில் எட்டுப்பேர் மட்டும் நீதியாக அரசாண்டார்கள்.

5 இதற்குள் இரண்டு கோத்திரம் மட்டும் இருந்தார்கள். (பென்ஜமின், யூதா)

6 இதன் தலைநாரமாக எருசலேமே தொடர்ந்தும் இருந்தது.

7 இது பாபிலோனியர்களால் 606 இல் கைப்பற்றப்பட்டது.

8 சிறையிருப்பிலிருந்து மூன்று முறை தனித்தனிவிதமாக திரும்பி வந்தார்கள் குழப்பமான இராஜ்ஜியத்தை இரண்டு தனிப்பட்ட காலங்களாக வகுக்கலாம்

- பிரிக்கப்பட்ட இராஜ்ஜியங்கள் இரண்டும் வடக்கு, தெற்கு எனப்பட்டன.(931-721 கி.மு)
- தனிப்பட்ட இராஜ்ஜியம் தெற்கு மட்டும்(721-605 கி.மு.).

**வடராஜ்ஜிய ஆட்சியாளர்கள்**.

1. **யெரொபெயாம் (முதல் அரசன்)**

இவர் 930. கி.மு. இல் ஆரம்பித்து 22 வருடங்கள் ஆட்சி செய்தார் யெரொபெயாமின் ஆட்சிக்காலத்தைச் சரிவர நோக்குவோமாயின், ஏதோ ஒரு அவசியமான சூழ்நிலை அவரை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது. இவையாவும் சாலொமோனின் கெட்ட கடைசி மகன் ரெகோபெயாமுடன் ஆரம்பமானது.

1. யெரொபெயாம், சீகேமிற்கு இஸ்ரவேல் முழுவதற்குமான அரசனாக முடிசூட்டு வதற்கு வந்தான். (1இரா. 12:1; 2நாள. 10:1).
2. யெரொபெயாம், எகிப்திலிருந்து, தன்னுடைய தகப்பனாகிய சாலொமோனின் மரணத்திற்குப்பின்பு வந்து, ரெகொபெயாம் விடுத்த அறிக்கைக்கு எதிராக ,ஜனங்கள் ஒரு நல்ல ஆட்சியை எதிபார்க்கிறார்கள் என்று அறிக்கைவிடுத்தான். (1இரா 12:3, 4; 2நாள. 10:2-4).
3. மூன்றாம் நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, **யெரொபெயாமும்** சகலஜனங்களும் மூன்றாம்நாளிலே **ரெகொபெயாமிடத்தில்** வந்தார்கள். ராஜா முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடேபேசி: என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் உங்கள் நுகத்தை அதிகபாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவுகொடுத்தான். (1இரா. 12:14).
4. இதைக்கேள்விப்பட்ட 10 கோத்திரத்தாரும் அழுது கொண்டு தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினார்கள். இதிலிருந்து இஸ்ரவேலர்களின் துக்கமான கதை ஆரம்பமாகின்றது. (1இரா. 12:16).
5. பின்புராஜாவாகிய ரெகொபெயாம் பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அனுப்பினான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது இராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின் மேல்ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போனான். (1இரா. 12:18-24). ரெகொபெயாம் தொடர்ச்சியாக இந்தக்கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனான். 1இரா. 15:6.
6. யெரொபெயாம், 10 கோத்திரத்தாரின் அமைப்பின் புதிய தலைவர், உடனடியாக மிகவும் பயங்கரமான மிரட்டலுக்கு உள்ளானார். ஒரு வருடத்தில் மூன்று முறைகள், கர்த்தரால் கட்டளையிடப்பட்டது போல லேவி.23; யாத். 23:17), முழு தேசத்தாரும் எருசலேமுக்குச் சென்று

கர்த்தரை ஆராதித்தார்கள். யெரொபெயாம், சந்தேகமின்றி, ஆசாரியர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி **ரெகொபெயாம்** பிடிக்குள் முழு இஸ்ரவேலர்களையும் கொண்டு வருவார்கள் என்று ஊகித்திருந்தான்.

- அவர், இஸ்ரவேலர்களுடைய மத அடையாளத்தை மாற்றிக் கொண்டார்கள். உடன்படிக்கைப் பெட்டியின் மேல் இருக்கும் பொன்னினாலான இரண்டு சேரூபின்களுக்குப்பதிலாக , அவர் இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை உருவாக்கினார்.முதலாவது பிரதான ஆசாரியனாகவிருந்த ஆரோன் கன்றுக் குட்டியை உருவாக்கின கதையை உதாரணமாக அவர்களுக்கு கூறினான். ( உண்மையாக ஆரோனின் தொழிற்பாட்டையே இவர் பின்பற்றினார், (யாத். 32:4 உடன் ஒத்துப்பார்க்கவும். 1இரா. 12:28.)
- அவர் ஆராதனை செய்யும் இடத்தை எருசலேமிற்குப்பதிலாக பெத்தேலுக்கும் , தாணிற்கும் மாற்றினார்.( 1இரா. 11:36.)
- அவர் லேவியர்கள் அல்லாதவர்களை ஆசாரியர்களாக்கி அவர்களின் தரத்தைக் குறைத்தார். (12:31). இதன் பயனாக அனேக லேவியர்கள் யூதாவுக்குள் ஓடினார்கள், மதத்தைப் பாதுகாக்கும் வேலையை அவர்களிடம் விட்டுவந்தார்கள். இது துக்கரமான சம்பவத்தைக் கூறுகின்றது, 19 அரசர்களில் முதலாவது அரசனாக யெரொபெயாம், தன்னுடைய இராஜ்ஜியத்தையும், ஜனங்களையும் கர்த்தருக்கு விரோதமாகத் திருப்பினான், இது உசியா ராஜாவரை சென்று முடிவடைந்தது. இது 210 வருடங்களுக்கு நீடித்தது. 2நாள. 11:13-17.)
- இவர் மதக்கலண்டரையும், ஒக்ரோபர் மாதத்திலிருந்து நவம்பர்வரை மாற்றம் செய்தார். லேவியராகமம் 23 இன்படி, இஸ்ரவேலர்கள் ஆறு முக்கிய பண்டிகைகளைக் கொண்டாடுவார்கள். ஏப்ரல் மாதத்தில் தொடங்கி ஒக்ரோபர் மாதத்தில் முடிவடையும். இந்த ஆறு பண்டிகைகளில், மூன்று ஒக்ரோபர் மாதத்தில் வருகின்றது, இது சிலுவையை முன்நிலைப்படுத்துகின்றது ( புளிப்பில்லா அப்பம்) உயிர்தெழுதல் ( முதல் கனி) பெந்தகோஸ்தே நாள் (ஐம்பதாவது நாள்) யெரொபெயாம் இவைகளில் எந்த பிரயோசனமும் பெறாதபடி, தன்மனதிலேதானே நியமித்துக்கொண்டபடி நவம்பர் மாதத்தில் இவற்றை ஏற்பாடு செய்தான். (12:33.)

7. யெரொபெயாம் தூபம் காட்டுவதற்காக பெத்தேலுக்குப் போவான், ஆசாரியத் தொழிலைத் தங்களுடையதாக்கிக் கொண்ட மூன்று இஸ்ரவேல் இராஜாக்களில் இரண்டாவது இராஜாவாக இவர் இருக்கிறார். இந்த மூன்றுபேரும் பயங்கரமாகத் தண்டிக்கப்பட்டார்கள். மற்றய இருவரும்

- **சவுல்** (1சாமு. 13:9-14)
- **உசியா** (2நாளா. 26:16-21)

8. இந்த விக்கிரக செயற்பாட்டிற்காக, யெரொபெயாமுக்கு எதிராக தீர்க்கதரிசனம் கூறப்பட்டு, கர்த்தருடைய மனிதனால் தண்டிக்கப்பட்டான்.

- **தீர்க்கதரிசனம்**. அந்தப்பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒருகுமாரன் பிறப்பான்; அவன் உன்மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி; அன்றைய தினம் அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லி, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின் மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர் உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான். இந்தத் தீர்க்கதரிசனம் சரியாக 300 வருடங்களுக்குப்பின்பு நிறைவேறியது. (1இரா. 13:2 2இரா. 23:15, 16.)
- **தண்டனை.** யெரொபெயாம் பலிபீடம் அழிக்கப்பட்டது, அவருடைய கை வழங்காமலிருந்தது. இது யாவும் கர்த்தருடைய கிரியைகளே. (1இரா. 13:3-6) தீர்க்கதரிசி ஜெபம் செய்தபோது கை வழமைக்கு மாறியது.

9. அவன் வீட்டுக்குத் திரும்பும் போது, பெத்தேலிலுள்ள ஒரு பொய்த்தீர்க்கதரிசியின் சொல்லைக் கேட்டு, கர்த்தருக்குக் கிழ்ப்படியாமல் தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.

- கர்த்தர் வீட்டுக்கு உடனடியாகத் திரும்பும்படி கூறியிருந்தார்.
- பெத்தேலிலுள்ள வயதான தீர்க்கதரிசி, அவனது உள்ளத்தை மாற்றி, பெத்தேலில் தன்னுடன் தங்க வைத்து புசிக்க கொடுத்தான்.
- இறுதியாக அவன் வீட்டுக்குத் திரும்பிய போது, அவன் ஒரு சிங்கத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டான்.

10. இந்தச் சம்பவத்திற்குப் பிற்பாடு, யெரொபெயாமின் மகன், அபியாம், சுகவீனமுற்றான். அகியா, தீர்க்கதரிசி துக்கமாக கர்த்தருடைய செய்தியை யெரொபெயாம் மனைவியிடம் கூறியிருந்தார். அவனுடைய பயங்கரப் பாவத்தின் நிமித்தம், அவன் பயங்கர நியாயத்தீர்ப்பை அனுபவிப்பான். (14:10-14). இவை யாவும் நடந்து நிறைவேறின. அந்தப்பிள்ளை விரைவில் இறந்து போயிற்று. சில வருடங்களுக்குப்பின்பு, நாதாப் ,யெரொபெயாமின் மகன், அவனை வெற்றி கொண்டான், அவனையும் அவனது உறவினர்கள் யாவரையும், பாஷா என்ற பெயர் கொண்ட கிளர்ச்சியாளன் கொலை செய்து. சிங்காசனத்தைக் கைப்பற்றினான்.(15:29). இந்த வேளையில், அசீரியர்களின் சிறையிருப்பைப்பற்றிய எச்சரிக்கையை கர்த்தர் வெளிப்டுத்தினார். அது 200 வருடங்களுக்குப்பின்பு நிறைவேறியது. (14:15).

11. கர்த்தர் யெரொபெயாமுக்கு வாதையை அனுமதித்தார், 22 வருட கொடுங்கோல் ஆடசிக்குப்பின்பு அவன் அதினால் மரித்தார். 22 தடவைகளுக்குக் குறையாமல் அவர் இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணினார் என்று எழுதப்பட்டுள்ளது. நாதாப் என்ற மகன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். (1இரா 14:20; 2நாள. 13:20) பாஷா என்ற கிளர்ச்சியாளனால் நாதாப் இரண்டு வருட ஆட்சிக்குப் பிற்பாடு கொலை செய்யப்பட்டான். கொலை செய்யப்பட்ட ஆறு வடராஜ்ஜியத்தின் ராஜாக்களில் இவன் முதலாவதவராகும். அவர்கள் பின்வரு வாரவோராகும் (2).**ஏலா**, (3) **யோராம்** (4) **அசரியா** (5) **சாலூம்** (6)**பெக்காகியா**. அவனைக் கொலை செய்யும்பொது, பாஷா, தெரியாமலே யெரொபெயாம் மனைவியிடம் அபியா என்ற தீர்க்கதரிசியால் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார். (1இரா. 14:14, 15:29.)

2. **நாதாப்** (இரண்டாவது அரசன்) (1இரா. 15:25-28).

1.இவர் யெரொபெயாமினுடைய மகனாகும்.
2. இவர் பாஷா என்ற புரட்சியாளனினால் கொலைசெய்யப்பட்டான்.

3. காரியாலயத்தில் இருக்கும் போது கொல்லப்பட்ட ஆறு வடக்கு ராஜக்களின் வரிசையில் இவர் முதலாவது இராஜாவாகும்.

4. இவர் இரண்டு வருடங்களுக்கு ஆட்சி செய்தார்.(910-908).

3. **பாஷா (மூன்றாவது அரசன்)** (1இரா. 15:27–16:7; 2நாள. 16:1-6).

1. இவர் தனக்குத் தெரியாமலே யெரொபெயாமினுடைய மனைவியாகிய அகியா தீர்க்கதரிசி கூறிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றி நாதாப்பையும் அவருடைய உறவினர்களையும் கொலை செய்தான். ( 1இரா. 14:14 15:29.)

2. இவர் யூதாவின் மூன்றாவது அரசனிக்கு எதிராக யுத்தத்தைப் பிரகடனம் செய்தார், ராமாவில் அலங்கத்தைக் கட்டி யூதாவின் பாதையை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். இதனால் எருசலேமின் வியாபாரம் தடைப்படும் எனவும் அவர் நம்பினார். (2நாள. 16:1).

3. தன்னுடைய பாவத்தின் நிமித்தம் கர்த்தரால் தள்ளப்பட்டார். யெரெபெயாம் மீது கொடுக்கப்பட்ட அதே நியாயத் தீர்ப்பையே பாஷவின் சந்ததியினரும் அனுபவிப்பார்கள் என்று யெகூ என்னும் தீர்க்கதரிசியும் முன்னறிவித்திருந்தார.

4. பாஷா இருபத்து நான்கு வருடங்கள் ஆட்சி செய்தார். (909-885 கி.மு).

<u>4. ஏலா ( நான்காவது அரசன்) **(1இரா. 16:6-14).**</u>

1. இவர் பாஷாவின் மகனாகும்.

2. இவர் சிம்ரி என்று அழைக்கப்படும் இரத ஓட்டுனர்களின் கட்டளைத் தளபதியால் கொலை செய்யப்பட்டார்.

3. அந்த நேரத்தில் ஏலா குடி போதையில் இருந்தார்.

4. அவர் இரண்டு வருடங்களே அரசாண்டார். (885-883கி.மு).

<u>5 சிம்ரி (ஐந்தாவது அரசன்) **(1இரா. 16:6-14).**</u>

1. 7 நாட்கள் இராஜாவாயிருந்தான்.
2. அரண்மனையை தீக்கொழுத்தி அதற்குள் மரித்து போனார்.(16-18)

6. உம்ரி **ஆறாவது அரசன்).**

1. இவர் 885. கி.மு. ஆண்டு தன்னுடைய ஆட்சியை ஆரம்பித்தார்

2. உம்ரி சமாரியாவை வட ராஜ்ஜியத்தின் புதிய தலைநகராக மாற்றினார்.(1இராஜ. 16:24).

3. அவனே அந்த நாட்களில் அதிகம் கொடூரமான அரசனாக இருந்தான். (16:25).

**7. ஆகாப் ( ஏழாவது அரசன்)**

1. இவர் 874. கி.மு. ஆண்டு தன்னுடைய ஆட்சியைத் தொடங்கி 22 வருடங்கள் ஆட்சி செய்தார்.
2. ஆகாப் யோசபேல் என்பரைத் திருமணம் செய்தார், அத்துடன் பாகால் தெய்வத்திற்கான ஆலயத்தைச் சமாரியாவில் கட்டினார்.(1இரா. 16:31, 32).
3. இவர் தனது தகப்பானாரைப் பார்க்கிலும் மிகவும் கொடுமையானவர்.(16:33). (21:25, 26.)
4. எரிக்கோவை திரும்ப கட்டப்படும் என்ற 500 வருடத்திற்கு முன்பு கூறப்பட்ட தீர்க்கதரிசனம் இவருடைய ஆட்சிக்கால ஆரம்பத்தில் நிறைவேறியது. (16:34;, யோசு 6:26)
5. அவர் எலியாவினால் எச்சரிக்கப்பட்டார், அவருடைய பாவத்தின் நிமித்தம் , மூன்றரை வருடம் பஞ்சம் உண்டாகும் என்றும் கூறப்பட்டது.(1இரா. 17:1 யோசு 6:26).

6. எலியா தன்னுடைய பாகால் ஆசாரியர்கள் கொலை செய்யப்பட்டதையும் பாகல் உடைக்கப்பட்டதையும் கர்மேல் பர்வத்தில் கண்டான். (18:40).

7. யெகோவா தேவனே உண்மையான தேவன் என்று நிருபிப்பதற்காக, கர்த்தர் பொல்லாத சிரியர்களை இரண்டு தடவைகள் தோற்கடிப்பதற்கு அனுமதித்தார். (20:23, 28). இந்தக் காலத்தில் சிரியாவின் பெனாதாத் ராஜா ஆகாப் மீதான யுத்தத்தைக் கட்டளையிட்டான், சிரியர்களுக்கு லஞ்சம் தருவதாக ஆகாப் கூறினான், அதற்கு அவர்கள் இணங்க மறுத்தபடியால், ஆகாப் யுத்தம் செய்யத் தீர்மானித்தான். (1இராஜ. 20:1-11). ஒரு பெயர் குறிப்பிடாத ( சிலவேளை எலியாவாக இருக்கலாம்) தீர்க்கதரிசி, சிரியர்களை ஆகாப் வெற்றி கொள்ளுவார் என்று மீண்டும் உறுதியளித்தார். இது மிகவும் விரைவில் கிடைக்கும் என்றார்.(20:13-19). அவர்களுடைய தோல்விக்குப் பிறகு, இது மலைப்பிரதேசத்தில்

இடம்பெற்றபடியால், அவர்கள் எங்களை மேற் கொண்டார்கள் என்று தங்களைச் சமாதானப்படுத்திக் கொண்டார்கள். இஸ்ரவேலின் தேவன் மலைக்குத் தேவன் என்று சீரியர்கள் சொன்னார்கள். திரும்பவுமாய் ஒரு யுத்ததிற்கு ஏற்பாடு செய்து, அந்த யுத்தம் பள்ளத்தாக்கில் இடம்பெற வேண்டும் என்றும் கூறினார்கள். அவர் மலைப் பிரதேசத்திற்கும் தெய்வம் தான். ஆனாலும் அவர்

- அவர் பள்ளத்தாக்குக்கும் தேவன்.(யாத். 17:8-13; 1சாமு. 17:3, 49)
- மலைப்பிரதேசத்திற்கும் தேவன் (1இரா. 18:19, 40)
- அவர் சமவெளிக்கும் தேவன். (நியா. 11:33)
- அவர் தண்ணீருக்கும் தேவன் (யாத். 14:27, 28)
- **கர்த்தருடைய அக்கினி.-** (தானி. 3:19-26) சீரியர்கள் தாக்கினார்கள், ஆனால் தோல்வி கண்டார்கள், 127,000 பேர் மரித்தார்கள். வெற்றிபெற்ற ஆகாப், கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், பெனதாத்தைத் தப்புவித்தான்.( சவுல், ஆகாக்கைத் தப்பவிட்டது போல . 1சாமு. 15:31-33) ஆகாப் இதனைச் செய்தபடியால், பெனதாத்தின் ஜீவனுக்காக ஆகாப்பின் ஜீவனைக் கர்த்தர் அழிக்க நினைத்தார். (1இரா. 20:32-43). இது மூன்று வருடங்களுக்குப் பின்பு நிறைவேறியது. (1இரா. 22:29-37)

8. நாபோத் என்னும் பெயருள்ள யெஸ்ரயேல் தேசத்து மனிதனின் திராட்சைத் தோட்டத்தை ஆகாப் வாங்க முயற்சித்தான், ஆனால் அது தோல்வியில் முடிந்தது. சாமுவேல் இஸ்ரேலிய ராஜா நிலங்களைப் பறித்துக் கொள்ளுவான் என்று பல வருடங்களுக்கு முன்பு கூறியிருந்தார். (1 சாமு. 8:14.) நாபாத் இதனை விற்பதற்கு விரும்பியிருந்தாலும் கூட, லேவியச் சட்டம் இதனைத் தடைசெய்கின்றது. (லேவி. 25:23; எண்ணா.36:7; எசேக் 46:18.). ஆகாப் சினம் நிறைந்தவனாக வீட்டுக்குத் திரும்பினான். யோசபேலுக்கு, நாபாத் பற்றிக் கூறப்பட்டது. அவள் திராட்சைத் தோட்டத்தை தான் விரைவில் வாங்கிவிடுவேன் என்று கூறினாள். அவள் ஒரு கடிதத்தை ஆகாப்பின் பெயருக்கு எழுதி, அதனைத் தன்னுடைய முத்திரையினால் முத்திரையிட்டாள். அதனை நாபோத் வசிக்கும் யெஸ்ரயேலுள்ள அதிகாரிகளின் விலாசத்தை எழுதினாள். அவள் அதில் சகல குடியிருப்பாளர்களையும் உபவாச ஜெபத்திற்கு வரும்படி அழைப்பு விட்டிருந்தாள். அங்கு இரண்டு

பொய்ச்சாட்சிகளை கர்த்தரையும், அரசனையும் நாபாத் சபித்ததாக சாட்சிகூறும்படி ஒழுங்கு செய்திருந்தாள். அவன் வெளியில் கூட்டி செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டான். இந்த பாதகமான காரியம் அந்தக் கடிதம்மூலம் நிறைவேறியது.(1 இரா 21:4-14). அவனுடைய பிள்ளைகளும் கல்லெறியப்பட்டார்கள்.(2 இரா 9:26.) இந்தக் கொடூரமான யோசபேல், பாகால் வணக்ககாரியாகும், இப்போது புத்திசாலித்தனமாக குற்றம் சுமத்தப்பட்டவனுக்கு எதிராக இரண்டு சாட்சிகளை மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஏற்பாடுசெய்கிறாள்.(லே. 24:17). யேசபேல் இந்த செய்தியை ஆகாபிற்குக் கூறுகிறாள், ஆகாப் மிகவும் சந்தோஷத்துடன் சென்று திராட்சைத் தோட்டத்தை உரிமை கொண்டாடுகிறான். (1 இரா. 21:15, 16). கர்த்தர் எலியாவிடமும் நாகாப்பிடமும் சென்று நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை கைப்பற்றியதற்காக, பரலோகத்தின் சாபத்தை அவன்மீதும், அவன் குடும்பத்தார்மீதும் கூறும்படி கட்டளையிடுகிறார். கோபமடைந்துள்ள ஆகாப் இந்த நியாயத்தீர்பின் செய்தியைக் கவனமாகக் கேட்கின்றான்(21:19, 21-24). இவையாவும் உண்மையாகவே நிறைவேறின.

- ஒரு நாய் ஆகாப்பின் இரத்தத்தை நக்கினது, இது நாதாப்பின் இரத்தத்திற்கு நடந்து போலாயிற்று. (1இரா. 22:38).
  - அவருடைய சந்ததியினர் அழிக்கப்பட்டார்கள். அகசியா, அவனுடைய மூத்தமகன், விழுந்து செத்தான். (2இரா. 1:17), ஆனால் யோராம், அவனுடைய இளைய மகன், ஜெகூவினால் கொலை செய்யப்பட்டான். (2இரா. 9:24), நாபாத் அடக்கம் செய்யப்பட்ட அதே இடத்திலேயே அவனுடைய உடலும் எறியப்பட்டது.
  - யெஸ்ரயேலிலுள்ள நாய்கள், இந்த கெட்ட யோசபேலை சாப்பிட்டன. (2இரா. 9:30-36). இந்தப்பயங்கர தீர்க்கதரிசனங்களைக் கேட்ட போது, ஆகாப் தன்னைத் தாழ்த்தினான், அதனால் கர்த்தர் அவனுடைய மகன்களின் கொலையைப் பார்க்காமல் தடைசெய்தார்.ஆனால் அவனுடைய மனம்திரும்புதல் தற்காலிகமானதாகவே இருந்தது. (1இரா. 21:27-29).

9.தெற்கு இராஜ்ஜியத்திலுள்ள யூதர்களின் சக்கரவர்த்தியாக வேண்டும் என்று ஆசைப்பட்டான், சிரியா அரசனான

பெனதாத்துக்கு எதிராக யுத்தம் செய்ய இணங்கினான். அவன் மூன்று வருட உடன்படிக்கையை மீறினான். இப்போதும் ராமார் கீரேயத்தில் துருப்புக்கள் இருக்கின்றன. யோசபாத்தை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத்தின் மேல்யுத்தம் பண்ண என்னோடே கூடவருகிறீரா என்றுகேட்டான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான். பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் இராஜா நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச் செய்து: நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின் மேல் யுத்தம் பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டான். அதற்கு அவர்கள்: போம், தேவன் ராஜாவின் கையில் அதை ஒப்புக் கொடுப்பார் என்றார்கள். பின்பு யோசபாத்: நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறேயாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான் (தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக்கண்டேன் என்றுகர்த்தர் சொல்லுகிறார். (எரேமி. 23:21.) அப்பொழுது இஸ்ரவேலின் இராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்ல வேண்டாம் என்றான். (1இரா. 22:8). மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடன் பேசி: இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் இராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒரு வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும் என்றான் அதற்கு மிகாயா: கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான். அவன் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப்பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின் மேல்யுத்தம் பண்ணப்

போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக் கொடுப்பார் என்றான். ராஜா அவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனை தரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும் என்று சொன்னான் (22:16). அப்பொழுது அவன்: இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன். அப்பொழுது கர்த்தர். இவர்களுக்கு எஜமான் இல்லை. அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: இவன் என்னைக்குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்லவில்லையா என்றான். (22:18). ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான். அப்பொழுது கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியாகிட்டே வந்து, மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி எந்த வழியாய் என்னை விட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றான் இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று இராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான். அப்பொழுது மிகாயா. நீர் சமாதானத்தோடே திரும்பி வருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக் கொண்டு பேசினதில்லை என்று சொல்லி; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள் என்றான். பின்பு இஸ்ரவேலின் இராஜாவும், யூதாவின் இராஜாவாகிய யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போனார்கள். இஸ்ரவேலின் இராஜா யோசபாத்தை நோக்கி, நான் வேஷம் மாறியுத்தத்தில் பிரவேசிப்பேன். நீ இராஜவஸ்திரம் தரித்திரும் என்று சொல்லி, இஸ்ரவேலின் இராஜாவேஷம் மாறி, யுத்தத்தில் பிரவேசித்தான். சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் நோக்கி: நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும்

யுத்தம் பண்ணாமல் இஸ்ரவேலின் இராஜா ஒருவனோடே மாத்திரம் யுத்தம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டிருந்தான். ஆதலால் இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், இவன் தான் இஸ்ரவேலின் இராஜா என்று சொல்லியுத்தம் பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்து வந்தார்கள். அப்பொழுது யோசபாத் கூக்குரலிட்டான். இவன் இஸ்ரவேலின் இராஜா அல்ல என்று இரதங்களின் தலைவர் கண்டு அவனை விட்டு, விலகிப் போனார்கள் ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான். அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்துகளுக்குள்பட்டது; அப்பொழுது அவன் தன் சாரதியைப்பார்த்து, நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம் பட்டது என்றான். அன்றைய தினம் யுத்தம் அதிகரித்தது. இராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்திவைத்தார்கள்; சாயங்காலத்திலே அவன் இறந்து போனான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிந்தது. பொழுது போகும்போது அவரவர் தம்தம் பட்டணத்திற்கும், அவரவர் தம்தம் தேசத்திற்கும் போகலாம் என்று இராணுவத்தில் பறைசாற்றப்பட்டது. அப்படியே ராஜா இறந்த பின்பு, சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டான். ராஜாவைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள். (அந்த இரதத்தையும் அவனுடைய கவசத்தையும் சமாரியாவின் குளத்திலே கழுவுகிற போது, கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கினது). ஆகாபின் குமாரனாகிய அகசியா யூதாவின் ராஜாவாகினான். அவர் தன்னுடைய தகப்னைப் போலவே கெட்ட வழிகளிலேயே நடந்தான்.

**8. அகசியா( எட்டாவது அரசன்)** (1இரா. 22:40–2இரா. 1:18; 2நாள. 20:35-37).

1. **இவர் ஆகாபின், யோசபேல் என்பவர்களின் மூத்த மகனாகும்.**

2. **யோசபாத் எசியோன் கேபேரிலே கப்பல்களைச் செய்யும் வேலையில் ஈடுபட்டான்.** (2நாள. 20:35-37).

3. **சமாரியாவிலுள்ள அரண்மனையில் விழுந்து வியாதிப்பட்டான்.**

4. அவன் பாகால் சேபூப்பின் ஆராதனைக்கரனாக மாறினான், இதனால் எலியாத் தீர்க்கதரிசியின் கண்டிப்புக்கு ஆளானான், எலியாவை அவன் சிறைப்பிடக்கவும் முயற்சி செய்தான்.

5. அவர் இரண்டு வருடங்களே அரசாண்டார். (853-851கி.மு).

**9. யோராம்.(ஒன்பதாவது அரசன்) (2இரா. 3:1–9:25; 2நாள. 22:5-7).**

1. இவர் ஆகாப்பின் கடைசி மகனும் அகசியாவின் சகோதரனுமாவார்.

2. இவரும் தன்னுடைய தகப்பனைப் போலவும் சகோதரனைப் போலவே யோசபாத்தை கூட்டுச் சேர்ந்தார், இந்தமுறை மோவாப்பியருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையாக இருந்தது. யுத்த களத்தில் எலிசா தீர்க்கதரிசி ஒரு அற்புதத்தைச் செய்தான்.இதனால் மோவாப்பியரை வெற்றி கொண்டார்கள்.

3. சிரியர்களின் பல தாக்குதல்கள் திட்டங்கள் பற்றி எலிசா யெரொபெயாமிற்கு முன்கூட்டியே கூறி உதவி செய்தான்.

4. கர்த்தரால் குருட்டாட்டமாக்கப்பட்ட சிரியர்களின் இராணுவத்தை எலிசா கொலைசெய்யவிடாமல் தடுத்துவிட்டார்.

**10.யெகூ ( பத்தாவது அரசன்) (2 இரா. 9:1–10:36; 2 நாளா. 22:7-12).**

1. இவர் 842 கி. மு.இல் ஆட்சியைத் தொடங்கி, இருபத்துஎட்டு வருஷங்கள் ஆட்சி செய்தார்.

2. யெ கூவை அரசனாக அபிஷேகிக்கும்படி எலிசா கட்டளையிட்டார்.(1 இரா19:16), ஆனால் சில காரணங்களுக்காக அப்படிச் செய்யப்படவில்லை.அதனால் அவரை ஒரு சிறிய பிரசங்கி மூலமாக அரசனாக, எலிசா அபிஷேகம் பண்ணுவித்தார். (2 இரா9:1).

3 யெகூ இரதம் ஓட்டுவதில் வல்லவனானான். (9:20) அவன் இரத்தம் சிந்துகிறவனாக இருந்தான். அவன் கொலை செய்தான்.

- யூதாவின் ராஜா, அகசியா யோசபாத்தின் பேரனுமாவான். (9:27)

- வடராஜ்ஜியத்தின் அரசன், யோராம்,அந்த நேரத்தில் அவன் வல்லமையுடையவனாக இருந்தான். (9:24)
- யோசபேல். (9:30-37)
- ஆகாப்புடைய 70 பிள்ளைகள்.(10:1, 11)
- யூதாவின் 42 இளவரசர்கள்.(10:14)
- **பாகால் வணக்க காரர்.** (10:25) ஆகாப்பினுடைய. இராஜ பரம்பரையினரை அழித்துவிடும்படி கர்த்தர் கட்டளையிட்டார். யோசபேல் உள்ளடங்கலாக, அவளை நாய்கள் சாப்பிட்டன. (2இரா. 9:1-10), ஆனால் மற்றக் கொலைகளைக் கர்த்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவனுடைய இரத்தம் சிந்தும் நடவடிக்கைகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

அபிஷேகம் பண்ணிய பிற்பாடு, யெகூ தன்னுடைய இரதத்தில் ஏறி யோசபேலை நோக்கி மிக வேகமாக யோராம் அரசனைக் கொல்லும் வண்ணமாகச் சென்றான். ஆகாப்பினுடைய இளைய குமாரன், சமீபமாக உடலில் யுத்தத்தினால் ஏற்பட்ட காயம் குணமாகிக் கொண்டிருந்தது. அந்த நாளில் அவனிடம் ஒரு விருந்தினரான அகாசியா, அவர் யோசபாத்தின் பேரன், அத்துடன் யோராமுடைய மருமகனாகிய , யூதாவின் அரசன், வந்திருந்தார். இந்த சரித்திரத்தில் மிகவும் சந்தேகமாக இருக்கின்ற விடயம், இந்த இரண்டு தலைவர்களினதும் கெட்ட தாயார்கள் மிகவும் மோசமானவர்கள், யோராமுடைய தாயார் யோசபேல், அகாசியாவின் தாயார் அத்தாலியாவாகும். யெகூ பள்ளத்தாக்கின் பாதையில் சென்று கொண்டிருக்கும் போதே இதனை நினைவில் வைத்துக் கொண்டான், யோராமும் அகசியா ஆகிய இருவரும்,நிகழக்கூடிய புரட்சிக்காகப் பயந்து கொண்டிருந்தார்கள், யெகூவைச் சந்தித்து, என்ன கேள்வி வந்தாலும் அதனைக் கொடுப்போம் ,சமாதானமாகுவோம் என்று நம்பினார்கள்.

யெகூ, அவர்களின் வெறுத்துத் தள்ளிவிட்டு, மாமன், மருமகளாகிய இருவர் மீதும், அம்புகளை மழைபோல பாய்சினார். யோராமுடைய உயிரற்ற உடலை நாபோத் வயலில் எறிந்து போட்டார்கள், அங்கோ தான் ஆகாப்( மரித்தவரின் தகப்பன்) முன்பு நாபோத்தின் உடலை எறிந்தார். (2இரா. 9:25-29).

யோசபேலைக் குறிவைத்து, யெகூ யெஸ்ரேயலுக்குள் நுழைந்தான், யோசபேல் மேல்மாடியின் யன்னல் ஊடாக அவனைப் பழித்துரைத்தாள், அவன் அவளைத் தள்ளிவிடும்படி கட்டளை கொடுத்தான், அதனால்,

உடனடியாகவே அவள் நிலத்திற்கு தள்ளிவிடப்பட்டு ,இறந்து போனாள், நாய்கள் அவள் உடலைத் தின்று ,எலும்புகள் மட்டும்,காலும்,கையுமே மிகுதியாகின. ஆகாபைப்பற்றி , எலிசாவால் கூறப்பட்ட தீர்க்க தரிசனம் அப்படியே நிறைவேறியது. (1இரா. 21:23 ,2இரா. 9:30-36.)

சமாரியாவின் நகரசபை அங்கத்தவர்களுக்கு, யெகூ ஒரு நிருபத்தை அனுப்பினான், அதில், ஜீவிக்கும் ஆகாப்பின் பிள்ளைகளுடைய தலைகளை வெட்டி அனுப்பும்படி கேட்டிருந்தான். பயந்து போன அதிகாரிகள் உடனடியாக அந்தக் கடிதத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர்களுடைய தலைகளை வெட்டி கூடையில் வைத்து யெகூவிடம் அனுப்பிவைத்தார்கள். (10:6-8) யெஸ்ரயேலிலும் ஆகாபின் குடும்பத்தாரில் மீதியானயாவரையும், அவனுக்கு இருந்த எல்லா மந்திரிகளையும், அவனைச் சேர்ந்த மனுஷரையும், அவனுடைய ஆசாரியர்களையும், அவனுக்கு ஒருவரையும் மீதியாகவைக்காதபடிக்கு, யெகூ கொன்று போட்டான். 10:11-14)

யெஸ்ரேலில், பாகாலுக்கு ஒரு விஷேசித்த கொண்டாட்டம் ஏற்பாடு செய்து, அனைத்து பாகாலுடைய ஆசாரியர்களையும், தவறாது பங்குபற்றும் வண்ணம் கட்டளையிட்டான், அவன் தானும் அந்த பாகால் வணக்கத்தில் கலந்து கொள்வது போல பாஷாங்கு செய்தான். அந்த கூட்டம் கூடும் இடத்திலேயே சகல பாகலுடைய ஆசாரியர்களையும் மொத்தமாகக் கொலை செய்தான். பிற்பாடு யெகூ, அங்கிருந்த பலிபீடத்தையும் கொழுத்திப் போட்டான். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, ஆகாப்பினுடைய இராஜபரம்பரையினர் முழுவதையும் கொலை செய்தபடியால், யெகூவின் நான்கு பரம்பரையினர் தொடர்ந்து ஆட்சி செய்வார்கள் என்ற வாக்குறுதியைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டான். (2இரா. 10:30).

4. யெகூ, யெரொபெயாமால் வைக்கப்பட்ட பொன் கன்றுக்குட்டிகளை ஆராதிப்பதைத் தொடர்ந்து செய்தான். அவன் இரட்சிக்கப்படாத இராஜாவாகவே மரித்தான். (10:29-31),

**11. யோவகாஸ்.(பதினோராவது அரசன்) (2இரா. 13:1-9).**

- இவர் யெகுவின் மகனாவார்.
- இவர் ஆசகேல் ராஜாவினால் அவனுடைய ஆட்சிக்காலம் முழுவதும் துன்பப்படுத்தப்பட்டான், யோவாகாசுக்குச் சீரியாவின் ராஜா, ஐம்பது

குதிரைவீரரையும், பத்து இரதங்களையும், பதினாயிரம் காலாட்களையுமே அல்லாமல், ஜனங்களில் வேறொன்றும் மீதியாக வைக்கவில்லை;

- இவர் பதினேழுவருடங்கள் அசாண்டான். (814-797 கி.மு.).

12. **யோவாஸ்(பன்னிரண்டாவது அரசன்) (2இரா. 13:10–14:16; 2நாளா. 25:17-24).**

- இவர் யோவகாசின் மகனாவார்
- இவர் எசாசை அவரது மரணப்படுக்கையில் சந்தித்தார்.
- இவர் யூதாவின் ஆறாவது அரசனாகிய அமத்சியாவை யுத்தகளத்தில் வெற்றி கொண்டார்.
- இவர் பதினாறு வருடங்கள் அரசாண்டார். (795-752 கி.மு.).

13. **யெரொபெயாம் (பதின்மூன்றாவது அரசன்)**

- இவர் 793 இல் தொடங்கி நாற்பத்தியொரு வருஷங்கள் அரசாண்டார்.
- யெரொபெயாம் மிகவும் வல்லமையுள்ள வடக்கு இராஜ்ஜிய அரசனாக இருந்தான்.
- இவர், முன்பு அசீரியர்களால் அபகரிக்கப்பட்ட நிலங்கள் யாவற்றையும் மீட்டுக் கொண்டார்.(2இரா. 3:5; 14:25-27).
- **யெரொபெயாம் II** காலத்திலிருந்த யோனா தீர்க்கதரியினால் இவையாவும் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டிருந்தன.(14:25).

**14. சகரியா ( பதின்நான்காவது அரசன்) (2இரா. 14:19–15:12).**

- இவர் யெரொபெயாம் II இன் மகனாவார்.
- இவர் சல்லூம் என்ற கிளர்ச்சியாளனினால் கொலை செய்யப்பட்டார்.
- சகரியா யெகூவின் பூட்டப்பிள்ளையாகும். நான்காவது அரசனுமாவார். இவரது கர்த்தர் யெகூவிற்கூடாக தீர்க்கதரிசனம் கூறியபடியே மரணத்துடன் இந்தக் குடும்பத்தின் ஆட்சி நின்று போயிற்று. (2 இரா10:30; 14:29; 15:8-12.)

இவர் ஆறுமாதங்களே அரசாண்டான்.(753 கி.மு.).

**15. சல்லூம் அரசன் ( பதினைந்தாவது )(2இரா. 15:10-15).**

1. இவர் மெனாகோம் என்னும் யுத்தவீரனால் கொலை செய்யப்பட்டான்.

2. ஒருமாதமே இவர் ஆட்சி செய்தார்.

**16 மெனாகோம் (2இரா. 15:14-22).**

- வடராஜ்ஜியத்தில் அரசாண்ட மிக மோசமான சர்வாதிகாரியாக இருந்தார்.
- மெனாகேம் திப்சா பட்டணத்தையும், அதிலுள்ள யாவையும், திர்சா தொடங்கி அதின் எல்லைகளையும் முறிய அடித்தான்; அவர்கள் தனக்கு வாசலைத் திறக்கவில்லை என்று அவர்களை வெட்டி, அவர்களுடைய கர்ப்பவதிகளையெல்லாம் கீறிப்போட்டான்.
- அசீரிய ராஜாவாகிய திக்கத்- பல்சர், இஸ்ரவேலை முற்றுகையிட்ட போது, அவனுக்குப் பெருந் தொகையான பணத்தைக் கொடுத்து தப்பிக் கொண்டான்.
- இவர் பத்துவருடங்கள் அரசாண்டார். (752-742 கி.மு).

**17. பெக்காகியா ( பதினேழாவது அரசன்)(2இரா. 15:22-26).**

- இவர் மெனேகாமின் புதல்வராவார்.
- இவர் தன்னுடைய இராணுவத் தளபதி பெக்கா என்பவரால் கொலை செய்யப்பட்டார்.
- இவர் இரண்டுவருடங்கள் ஆட்சி செய்தர்.(742-741 கி.மு).

**18. பெக்கா (2இரா. 15:27-31;** 2நாளா**. 28:5-8).**

- அசீரியர்கள் எதிர்த்துவந்தபோது, அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்ய கூட்டிணையுமாறு கேட்டபோது மறுத்ததற்கு தண்டிப்பதற்காக இவர் சிரியர்களுடன் இணைந்து ஒரு வெற்றியளிக்காத ஒரு தாக்குதலில் யூதாவின் ராஜாவாகிய ஆகாசுடன் இணைந்து, ஈடுபட்டார்.

- இந்தக்காலத்தில், அசீரியன் ராஜா திகலத்-பல்சர் இஸ்ரவேலை முற்றுகையிட்டு, அவர்கள் சில வடக்கு , கிழக்கு நகரங்களையும் பிடித்துள்ளார்கள்.
- பெக்கா ஓசியா என்பவரால் கொலை செய்யப்பட்டார்.
- இவர் இருபது வருடங்கள் ஆட்சி செய்தார். (740-732 கி.மு).

- குறிப்பு :இங்கு எட்டு வருஷங்களே காண்பிக்கப்படகின்றது. (740-732). முதல் 12 வருடங்கள் மெனாகோம்,பெக்காகியா என்பவர்களுடன் இணைந்தே செயற்பட்டார். (752-740)

19 **ஓசெயா ( பத்தொன்பாவது ராஜா**)

- இவர் 732 இல் ஆளத் தொடங்கி ஒன்பது வருஷங்கள் அரசாண்டார். அசீரியன் ராஜாவான சல்மனாசருக்கு வரிகட்டுபவனானான், ஓசெயா எகிப்துடன் இணைந்து ராஜ்ஜியத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்கள்.
- இதனால் அவரை ,சல்மனாசர் சிறையில் வைத்திருந்தார்.(2இரா. 17:4, 5).
- சாமாரியா வீழ்ச்சிகண்டது, வடக்கு ராஜ்ஜியத்தின் குடிமக்கள் யாவரும் அசீரியாவுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டார்கள். (2இரா. 17:6).

**தெற்கு அரசர்கள்**

**1 ரெகொபெயாம் ( முதலாவது அரசன்**)

- இவர் 930 இல் ஆட்சிக்கு வந்தார் 17 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி செய்தார்.
- இஸ்ரவேல் தலைவர்களின் கேள்விகளை உதாசீனம் செய்வதும், கொடூரமாக நடத்தலும், குடிமக்களின் யுத்தத்தை ஆரம்பித்தார். (1இரா. 12:1-16).
- விசுவாசமுள்ள லேவிய ஆசாரியர்களை வடக்கிலிருந்து எருசலேமிற்கு யெரொபெயாம் அனுப்பிவைத்தது, அவர் தன்னையறியாமலே ரெகொபெயாமிற்குச் செய்த உதவியாகும். வடக்கு ராஜ்ஜியத்தை அசீரியர்கள் கைப்பற்றிய பிற்பாடு, இந்த கரத்தருடைய பிள்ளைகளை யூதாவின் யாப்புக்களை அமைப்பதற்குப் பொறுப்பாக இருந்தார்கள். (2 நாள11:16, 17
- ரெகொபெயாமின் செயற்பாடுகளினாலேயே அவருக்குத் தோல்விகள் ஏற்பட்டன, அவர் பலதெய்வ வணக்கம் செய்யத் தெடங்கினார், 18 மனைவிமார்கள் இருந்தார்கள் அத்துடன் 60 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். மாகாள் என்ற அவருக்கு மிகவும் பிரியமான மனைவியே இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தார். இந்தப் பெண் அப்சலோமின் மகாளகும், ரெகொபெயாம் மாகாளின் குமாரனாகிய அபியாவை அவன் சகோதரருக்குள்ளே தலைவனும் பெரியவனுமாக

ஏற்படுத்தினான்; அவனை ராஜாவாக்க நினைத்தான். (2நாள. 11:18-23; 12:1, 14; 2 இரா15:13).

- ரெகோபெயாமின் ஐந்தாவது வருட ஆட்சியில், யூதா தோசம் எகிப்தின் சிஷாக் அரசனின் வல்லமையுள்ள இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது, இது ரெகொபெயாமின் கொடூரத்தினால் ஏற்பட்டது. எருசலேம் முதல் முறையாக 100 வருடங்களில் அந்நிய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டது இதுவே முதல் முறையாகும், அவன் யூதாவுக்கு அடுத்த அரணானபட்டணங்களைப் பிடித்து, எருசலேம் மட்டும் வந்தான். அப்பொழுது செமாயா தீர்க்கதரிசி ரெகொபெயாமிடத்துக்கும், சீஷாக்கின் நிமித்தம் எருசலேமிலே வந்து கூடியிருக்கிற யூதாவின் பிரபுக்களிடத்துக்கும் வந்து, அவர்களை நோக்கி: நீங்கள் என்னைவிட்டுவிட்டீர்கள், ஆகையால் நான் உங்களையும் சீஷாக்கின் கையிலே விழும்படி விட்டு விட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது இஸ்ரவேலின் பிரபுக்களும் இராஜாவும் தங்களைத் தாழ்த்திக் கர்த்தர் நீதியுள்ளவர் என்றார்கள். அவர்கள் தங்களைத் தாழ்த்தினதைக் கர்த்தர் கண்டபோது, கர்த்தருடைய வார்த்தை செமாயாவுக்கு உண்டாகி, அவர் சொன்னது: அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள், ஆகையால் அவர்களை அழிக்கமாட்டேன். என் உக்கிரம் சீஷாக்கைக் கொண்டு எருசலேமின் மேல் ஊற்றப்படாதபடிக்கு, அவர்களுக்குக் கொஞ்சம் சகாயத்தைக் கட்டளையிடுவேன். ஆனாலும் என்னைச் சேவிக்கிறதற்கும், அந்நிய தேசங்களின் இராஜ்யங்களைச் சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்கள் அறியும்படிக்கு அவனைச் சேவிக்கிறவர்களாவார்கள் என்றார். அப்படியே எகிப்தின் இராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமணைப் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப்பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்புவித்தான்.(2நாளா12:2-12; 1சாமு4:21).

- ரெகொபெயாம் 17 வருட ஆட்சியின் போது மரணமடைந்தான், அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்தில் இராஜாவானான். (1இரா. 14:31).

- அபியாம் தன்னுடைய தகப்பனாரின் எதிரியான யெரொபெயாமோடு யுத்தம் செய்வதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அபியாவுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்தது. அபியா தெரிந்து கொள்ளப்பட்ட நாலு லட்சம் பேராகிய பராக்கிரமசேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணினான். யெரொபெயாம் தெரிந்து கொள்ளப்பட்ட எட்டுலட்சம் பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான். இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய இராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள். நீங்கள் ஏராளமான கூட்டம். யெரொபெயாம் உங்களுக்குத் தேவர்களாக உண்டாக்கின பொன்கன்றுக் குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே. நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசங்களின் ஜனங்களைப் போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டு பண்ணவில்லையோ? இளங்காளையினாலும், ஏழுகடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே. எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரை விட்டுவிலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே. அவர்கள் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின் மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள். நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம். நீங்களோ அவரைவிட்டு விலகினீர்கள். இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள். செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான். யெரொபெயாம் அவர்களுக்குப் பின்னாக வரத்தக்கதாக ஒரு பதிவிடையைச் சுற்றிப் போகப்பண்ணினான். அப்படியே அவர்கள் யூதாவுக்கு முன் இருந்தார்கள். அந்தப்பதிவிடை அவர்களுக்குப்பின் இருந்தது. யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும்

யுத்தம் நடக்கிறதைக்கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள். யூதா மனுஷர் ஆர்ப்பரித்தார்கள். யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்தார். இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தேவன் அவர்களை இவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். அபியாவும் அவனுடைய ஜனங்களும் அவர்களில் மகாசங்காரம் பண்ணினார்கள்; தெரிந்து கொள்ளப்பட்ட ஐந்து லட்சம் பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள். (2 நாள13:1-17).

- பரலோகத்தின் தேவன் பரத்திலிருந்து வெற்றியைக் கட்டளையிட்டபோதிலிலும், தன் தகப்பன் தனக்கு முன் செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.(1 இரா15:3, 4). அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் இராஜாவானான். (1இரா15:8).

3. **ஆசா (மூன்றாவது அரசன்)**

  - இவர் 911 கி.மு ஆண்டிலிருந்து 40 வருஷங்கள் அரசாண்டார்.
  - முதல் 10 வருஷங்கள் இவர் முகவும் புத்திசாலித்தனமாக ஆட்சி செய்தபடியால் அங்கு சமாதானம் நிலவியது.
- புதிய உற்சாகத்துடன் ஜனங்களை வழிநடத்தினார்.(2நாள. 14:2-5).
- யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டினான். அவன் யூதாவை நோக்கி: தேசம் நமக்கு முன்பாக அமர்ந்திருக்கையில், நாம் இந்த பட்டணங்களைக் கட்டி, அவைகளுக்கு அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள் உண்டுபண்ணி, தாழ்ப்பாள் போட்டுப் பலப்படுத்துவோமாக; நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடினோம், தேடின போது, சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார் என்றான். அப்படியே கட்டினார்கள்; அவர்களுக்குக் காரியம் வாய்த்தது. (14:6, 7).

- மில்லியன் கணக்கான எதியோப்பிய இராணுவத்தினர் யூதா தேசத்தை முற்றுகை செய்தபடியால், தேசத்தின் சமாதானம் முற்றாகச் சரிந்த்து. (14:9).
- ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராகவந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான். (14:11).
- அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள். (14:12).
- ஆசா நன்றியுள்ள இருதயத்துடன் திரும்பிவந்து, தன்னுடைய புது செயற்றிட்டங்ளைத் தொடந்து விஸ்த்தரித்தார். (15:8-15). தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தங்கள் முழுஇருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம் என்று உடன்படிக்கை செய்தனர் (15:12).
- தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டு பண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான். அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப் போட்டான். (1இரா. 15:13).
- ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே, இஸ்ரவேலின் இராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் வந்து, ஒருவரும் யூதாவின் இராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்கும் வரத்துமாயிராதபடிக்கு ராமாவைக் கட்டினான், இதனால் வியாபாரம் தடைப்படும் என எண்ணினான்.(2நாள. 16:1). ஆசா தம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்து கொள்ளாமல், சீரியாவின் இராஜாவைச் சார்ந்து கொண்டார். (2நாள. 16:2-6).
- அக்காலத்திலே ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்து கொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்து கொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத்தப்பிப் போயிற்று. (2நாள. 16:8, 9). தம்மைப்பற்றி உத்தம

இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும் படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. இந்தவிஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர். ஆகையால் இது முதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான். (16:9). அதினிமித்தம் ஆசா ஞானதிருஷ்டிக்காரன்மேல் சினந்து கடுங்கோபங் கொண்டு அவனைக் காவலறையிலே வைத்தான். இதல்லாமலும் அக்காலத்தில் ஜனங்களுக்குள் சிலரைக் கொடூரமாய் நடப்பித்தான். (2 நாளா16:10). தங்களுக்குச் சார்பாக ஒத்துழைக்காத பிரசங்கிமார்மீது பாவத்தைச் சுமத்துவது ஆட்சியாளர்களின் இயல்பாகும். ஆகாப் இதனை **மீகாயாமீது** காண்பித்தான்.(2 நாளா18:7), சிதேக்கியா இராஜா இதனை **எரேமியாவுக்குச்** செய்தார்.(எரே. 32:3), **எரோது யோவான் ஸ்நானனுக்குச் செய்தான்**.(மத். 14:3). அவன் தன் நல்ல ஆட்சியை விட்டுவிலகி, ஜனங்களைத் துன்ப்படுத்த தொடங்கினான். தன்னுடைய மரணத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக அவனுடைய காலில் மிகவும் பெரிய வியாதி ஏற்பட்டது, ஆனால் இந்த வியாதியைக் கர்த்தரிடம் கொண்டு போக மறுத்துவிட்டான், 41 வருட ஆடசியின்பின்பு அவர் மரித்தார், அவரின் இடத்திற்கு அவனது மகன் யோசபாத் இராஜாவானான். (2நாளா. 16:10-17:1).

**4. யோசபாத் ( நான்காவது அரசன்)**

- அவர் 183 இல் ஆட்சியைத் தொடங்கி 25 வருடங்கள் ஆட்சி செய்தார்.
- கர்த்தர் யோசபாத்தோடிருந்தார்; அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன் நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்து கொண்டான். (2நாளா. 17:3-6).

- தன்னுடைய மூன்றாம் வருஷத்தில், தேசிய மதக்கல்வி பரப்புதல் செய்வதற்காக, வேதாகம ஆசிரியர்களையும் போதகர்களையும் யூதாவின் முக்கிய பட்டணங்களில் போதிக்கும்படியாக அனுப்பினான், இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக் கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள் (17:7-9).

- அவர் வல்லமை பெருகியது, பெலிஸ்தர்களிடமிருந்து வரிவாங்கினான்.(17:11).
- அவருடைய ஆட்சியின் பிற்காலத்தில், அவர் கர்த்தர் இல்லாத வட ராஜ்ஜியத்தின் ராஜாக்களாகிய ஆகாப்பும் அவரது இரண்டு மகன்களாகிய அகசியாவுடனும், யெரொபெயாமுடனும் சினேகம் கொண்டதால் அவருடைய நடத்தையில் மாற்றம் காணப்பட்டது.

- ஆகாப் குடும்பத்துடன் திருமண உறவு ஏற்படுத்தப்படல். அவர் ஞானமில்லாமல் அவனுடைய மகன் யோராமை அத்தலியாவுக்குத் திருமணம் செய்துவைத்தான், அவள் ஆகாப்பினதும் யேசபேலினதும் மகளாவாள். (2 நாள18:1).
- சிரியாவுடன் யுத்தம் செய்வதற்காக ஆகாப்புடன் கூட்டுச் சேர்ந்தான்.(2 நாள18:2, 3).
- யூதாவின் ராஜாவாகிய யோசபாத் பொல்லாப்புச் செய்கிறவனான அகசியா என்னும் இஸ்ரவேலின் இராஜாவோடே தோழமை பண்ணினான். தர்ஷீசுக்குப் போகும்படிக்குக் கப்பல்களைச் செய்ய அவனோடே கூடிக் கொண்டான்; அப்படியே எசியோன் கேபேரிலே கப்பல்களைச் செய்தார்கள். மரேசா ஊரானாகிய தொதாவாவின் குமாரனான எலியேசர் யோசபாத்துக்கு விரோத மாகத் தீர்க்கதரிசனம் சொல்லி. நீர் அகசியாவோடே கூடிக் கொண்ட படியினால், கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப் போட்டார் என்றான். அந்தக் கப்பல்கள் உடைந்து போயிற்று, அவர்கள் தர்ஷீசுக்குப் போகக்கூடாமற் போயிற்று

- அக்காலத்திலே யோராம் என்னும் இராஜா சமாரியாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலையெல்லாம் இலக்கம் பார்த்துப்போய். மோவாபின் இராஜா எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான். மோவாபியர் மேல்யுத்தம் பண்ண, என்னோடே கூடவருகிறீரா என்று யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தைக் கேட்டனுப்பினதற்கு. அவன் நான்வருகிறேன். நான் தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்றான். (2 இரா3:6, 7).

  - யூதாவின் இராஜாவாகிய யோசபாத், எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமாதானத் தோடே திரும்பி வந்தான். அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன் புறப்பட்டு, அவனைச் சந்தித்து, இராஜாவாகிய யோசபாத்தை நோக்கி:

துன்மார்க்கனுக்குத் துணை நின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? என்று கடிந்து கொண்டான்.(2நாள19:1-3). திரும்பவுமாய் யோசபாத் கர்த்தருடைய செயற்பாடுகளையும், ஆவிக்குரிய செயற்பாடுகளையும் ஊக்குவித்தான், அவன் மக்கள் மத்தியில் தானும் சென்று கர்த்தரை ஆராதனை செய்யும்படி ஜனங்களை ஊக்குவித்தான். அத்துடன் கடவுளுக்குப் பயந்தவர்களை நியாயம் விசாரிப்பதற்காக நியமித்தான். உண்மையில் இந்தச் செயற்பாடுகள் மிகவும் நன்றாகக் கண்டது.( 2 நாள19:6, 7.)

- ஆசாரியனாகிய அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும், இஸ்மவேலின் குமாரனாகிய செபதியா என்னும் யூதா வம்சத்தின் தலைவன் ராஜாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் உங்களுக்கு மேலான நியாயாதிபதிகளாக நியமிக்கிறதாக யோசபாத் கூறினான். இவர்கள் சகல விதமான வழக்குகளையும் விசாரிப்பார்கள் என்றான். இங்கு அரசியலும் மதஸ்தாபனமும் வித்தியாசமானவை என்பதைக் காண்பிக்கின்றது.(2 நாள19:11).

- இந்தக் காலத்தில் மோவாப்பியரும் அவர்களுடன் சேர்ந்தவர்களும் யூதாவுக்கு எதிராக யுத்தத்தை அறிவித்தார்கள். அத்துடன் மிகப் பெரிய இராணுவம் எருசலேமை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அறிந்தார்கள். இந்த பயங்கரமான செய்தியால் யோசபாத் கலங்கிப் போனான். அதனால் உபவாச ஜெபத்திற்காக நேரத்தை யோசபாத் தேசத்தில் அறிவித்தான். ஆராதனையில் யோசபாத் தானே முன்னின்று நடத்திக் கொண்டிருந்தார் தேசத்தின் ஜனங்கள் யாவரும் அங்கு ஒன்று கூடினார்கள். அவரே தேவசமூகத்தில் ஜெபத்தை ஆரம்பித்தார்." எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன். தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர். உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது. எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்க மாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. *ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது என்றான்".* (2நாள. 20:6, 12).

- அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தனியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன் மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னது: சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின்குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்தயுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான். (2 நாளா 20:15, 17).

- அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப்பணிந்து கொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள். கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். (20:18, 19). பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனை பண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்து போய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ள தென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான். (20:21). அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கின போது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத்தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். உண்மையில் இந்த வெற்றியைப் போல சரித்திரத்தில் ஒரு வெற்றி கிடைக்கவில்லை. இங்கு பாடல்கள் ஈட்டிகளை வென்றது, ஓசன்னா, குதிரைளைவிட பலமுள்ளவை என்பதை நிரூபித்தன. யுத்தத்தின் நான்கு நாட்களுக்குப் பின்பு எதிரிகளால் கைவிடப்பட்ட சகல பொருட்களையும் கைப்பற்றினார்கள். இதில் பணம், நகை, உடுப்பு என்பன அடங்கியிருந்தன. நாலாம் நாளில்

பெராக்காவிலே கூடினார்கள்; அங்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர்தரித்தார்கள். (20: 22, 26-30).

7. **அத்தாலியா ( ஏழாவது அரசன்)** 1. 841 கி.மு. இல் அவள் ஆட்சிக்கு வந்து ஆறுவருடங்கள் ஆட்சி செய்தாள்.

- யோசபேலின் மகளாகிய அத்தாலியா எசேக்கியாவின் மகனாகிய யோறாம் என்பவரைத் திருமணம் செய்ததாக ஏற்கனவே பார்த்தோம். அவர்களுக்கு அகாசியா என்ற ஒரு மகன் இருந்தான். அவன் ஜெகூவினால் கொலை செய்யப்பட்டபோது, அத்தாலியா அந்த அரச பொறுப்பை பொறுப்பெடுத்தாள். (2நாள. 22:10).
- யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் அத்தாலியா சங்காரம் பண்ணினாள்.
- அத்தாலியாவின் சொந்த மகளான யோசேபியாத் (ஆசாரியனான யோய்தாவின் மனைவி), அந்த இரத்தக்களரியில் ஒரு சிறு பிள்ளையாகிய யோவாசைக் களவாயெடுத்துக் கொண்டு, அவனை ஒளித்துவைத்தாள் (22:11).
- அந்தப்பிள்ளையை ஆறுவருஷம் ஒளித்துவைத்த பிற்பாடு யூதாவின் ஒரோயொரு இராசாத்தியை பதவி கவிழ்ப்பதற்கான திட்டத்தைத் தீட்டினான். அவருக்கு உதவியாக லேவிய ஆசாரியனும், இராணுவமும் இருந்தன. எல்லோரும் ஆயத்தமான போது, யோவாஸ் வெளியே கொண்டுவரப்பட்டு இராஜாவாக அறிவிக்கப்பட்டான். ஆனால் அத்தாலியா குழப்பம் செய்தாள், ஆனால் அவள் கைது செய்து கொலை செய்யப்பட்டாள். அத்தாலியாளையோ இராஜாவின் அரண்மனையண்டையில் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள். அந்தப் பட்டயம் தாவீதினுடையது என்பது கவனிக்கப்படத்தக்கது.(2இரா. 11:4-16).

**8. யோவாஸ் ( எட்டாவது ராஜா)**

- 835 கி. மு. ஆம் ஆண்டிலிருந்து நாற்பது வருஷங்கள் அரசாண்டார்.
- இளம் இராஜா ஆசாரியனாகிய யோய்தாவினுடன் இணைந்து ஆவிக்குரிய வளர்சியை ஏற்படுத்தினான், அத்துடன் பாகால் ஆலயங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினான். (2நாள. 23:16-

21; 24:1, 2). யோவாஸ் ஆலயத்தின் திருத்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, அதனைச் செய்து முடிக்கும்படி யோய்தாவிற்கு கட்டளையிட்டான். யோய்தா அதனைச் செய்விப்பதற்காக, ஒரு விஷேசித்த காணிக்கைப் பெட்டியைச் செய்துவைத்தான். (2இரா. 12:4-16).

- ஆசாரியனாகிய யோய்தாவின் மரணத்திற்குப் பிற்பாடு, யூதா பிரச்சனைகளை எதிர் நோக்கியது. யோய்தா இருக்கும்வரை, யோவாஸ் மிகவும் நேர்த்தியாக நடந்து கொண்டான், ஆனால் அவரது மரணத்திற்குப் பிற்பாடு மிகவும் துக்கங்கள் ஏற்பட்டன. கர்த்தருடைய கிருபையினால் அந்த பிரதான ஆசாரியன் 130 வருஷங்கள் ஜீவித்தான். அதனால் அவர் மரித்தபின்பு யோவாஸ், ஆபிரகாம் இல்லாத லோத்துவைப் போலானான். (2நாள. 24:2, 15, 16).
- யோவாசுடைய ஆட்சி முடியும்வரை துக்கம் தொடர்ந்த்து.
- யோய்தா மரித்தபிற்பாடு, யூதாவின் தலைவர்கள், கர்த்தரை ஆராதிப்பதை விட்டு விக்கிரகங்களை ஆராதிக்கும்படி அரசனை வழிநடத்தினார்கள். யெரொபெயாம் செய்தது போலவே யோவாசும் இந்த மாபெரும் தவறைச் செய்தான்.அவன் அசுத்தமானவர்களின் ஆலோசனையைக் கேட்டுத் தன்னைக் கெடுத்துக் கொண்டான். (1இரா. 12:8; 2நாள. 24:17-19.)
- அதற்குப் பின்பு சீரியாவின் இராஜாவாகிய ஆசகேல் வந்து, காத்தூரின் மேல் யுத்தம் பண்ணி அதைப்பிடித்தான். அதின் பின்பு எருசலேமுக்கு விரோதமாய்ப் போக ஆசகேல் தன் முகத்தைத் திருப்பினான். அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய யோவாஸ், தன் பிதாக்களாகிய யோசபாத் யோராம் அகசியா என்னும் யூதாவின் ராஜாக்கள் பரிசுத்தம் பண்ணிவைத்த எல்லாவற்றையும், தான் பரிசுத்தம் பண்ணிவைத்ததையும், கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களில் அகப்பட்ட பொன்னையும் எடுத்துச் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலுக்கு அனுப்பினான்; அப்பொழுது அவன் எருசலேமை விட்டுத் திரும்பிப்போனான். (2இரா. 12:17, 18).

- அப்பொழுது தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனான சகரியாவின் மேல் இறங்கினதினால் அவன் ஜனத்திற்கு எதிரே நின்று. நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறது என்ன? விக்கிரக ஆராதனை செய்த பாவத்திற்காக மனம் திரும்புங்கள் என்றான். இறுதியில் யோவாஸ் அரசனின் கட்டளைப்படி சகரியா கல்லெறிந்து கொல்லப்பட்டான். இதுவோ யூதாவின் மிகவும் துக்கமான நேரமாகும், அவர்களுடைய சொந்த பிரதான ஆசாரினையே கொடூரமாகக் கொலை செய்தார்கள். எட்டரை நூற்றாண்டுகளுக்குப் பின்பு கர்த்தர் இதனை குறிப்பிட்டுக் காண்பித்தார். (மத். 23:35.) சகரியாவும் ஸ்தேவானும் கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள், அதனால் சகரியாவை பழைய ஏற்பாட்டு ஸ்தேவான் என்றும் அழைப்பார்கள்.(அப் 7:51-59.) இவன் சாகும்போது: கர்த்தர் அதைப்பார்ப்பார், அதைக்கேட்பார் என்று கூறியதே அவரின் கடைசி வசனமாகும். (2நாள. 24:22). இங்கு பிரதான ஆசாரியன் மரணிக்கும் போது கர்த்தர் பழிவாங் குவார் என்று கூறினார். ஆனால் ஸ்தேவான் மரிக்கும் போது கர்த்தாவே இவர்களை மன்னியும் என்று கூறினார். (அப்:60). பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணமும், புதிய ஏற்பாட்டில் கிருபையையும் காணமுடிகின்றது.
- சகரியாவின் மரணத்திற்குப் பிற்பாடு, கர்த்தர் சிரியாவின் இராணுவத்தை யூதாவுக்குள் அனுப்பினார், எருசலேம் கைப்பற்றப்பட்டது, பிரதான தலைவர்கள் கொல்லப்பட்டார்கள், பரிசுத்த நகரம் கொள்ளையடிக்கப்பட்டு துவம்ஷம் செய்யப்பட்டது. யோவாஸ் மிக அதிகமாக காயமடைந்தான், பிற்பாடு அவனுடைய அதிகாரிகளாலேயே கொல்லப்பட்டார்.

10. உசியா ( பத்தாவது அரசன்)

- கி.மு. 790 ஆம் ஆண்டு தொடங்கி ஐம்பத்தியிரண்டு வருடங்கள் அரசாண்டான்.
- யூதாவின் அரசர்களுள் இரண்டாவதாக அதிக நாள் அரசாண்டவர் உசியா ராஜாவாகும், உசியா மிகவும் நல்ல ஆட்சியாளனாகும், இவர் சகரிய என்ற தீர்க்கதரிசியினால் உதவி செய்யப்பட்டவராகும்.

(2நாள26:5). அவருடைய சிறப்பான செயற்பாடுகள் வியக்கத்தகுந்தவையாகும்.

- ஈலோத் நகரத்தைப் புதுப்பித்துக் கட்டி அதனை யூதாவுக்குக் கொடுத்தான்.
- பெலிஸ்தர்களின் நகரங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தான்.
- அராபியர்களை வெற்றி கொண்டான்.
- அம்மோனியர்களிடம் வரிப்பணம் வாங்கினான்.
- அவருடைய புகழ் எகிப்துதேசங்களிலும், மற்றய தேசங்களிலும் பரவியது.
- அவர் எருசலேமில் பாதுகாப்புக் கோபுரங்களைக் கட்டினான்.
- நிகேவ்வில் கொட்டைகைகளைக் கட்டினான்.
- அவர் பல குளங்களைக் கட்டினார்.
- பெரும் தொகையான மந்தைகளை வளர்த்தார்.
- பல பண்ணைகளையும், திராட்சைத் தோட்டங்களையும் உருவாக்கினார்.
- இராணுவத்தைப் பல பிரிவுகளாக உருவாக்கினார். இவருடைய இராணுவத்தில் 307,500 துருப்புக்கள் இருந்தார்கள்.இவர்களுக்காக 2600 கட்டளை அதிகாரிகள் இருந்தார்கள்.
- இவர்கள் யுத்தத்திற்குத் தேவையான திறமையான ஆயுதங்களும் இருந்தன.
- கோபுரங்கள் மேலும் அலங்கக் கோடிகள் மேலும் நின்று அம்புகளையும் பெரியகற்களையும் பிரயோகிக்கிறதற்கு நிபுணரான தொழிலாளிகள் கற்பித்த யந்திரங்களையும் அவன் எருசலேமில் உண்டாக்கினான்; (2நாள. 26:6-15).
- அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகு மட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகியது தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின் மேல் தூபங்காட்டக் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான்(26:16).

- ஆசாரியர்கள் செய்ய வேண்டிய கடமையாகிய தூபம் காட்டுதலை பலிபீடத்தின்மேல் நின்று செய்தது எந்தவிதத்திலும் ஞாயப்படுத்தக் கூடிய பாவம் அல்ல.
- இவ்விதமான பாவத்தைச் செய்ததற்காக அரசன் பிரதான ஆசாரியனாலும், மற்றும் ஞானமுள்ள 80 ஆசாரியர்களாலும்

வன்மையாகக் கண்டிக்கப்பட்டான். இந்தச் செயற்பாடுகள் ஆரோனின் பரம்பரையினரால் மட்டுமே செய்யப்படல் வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டான். சடுதியாக தெய்வீக தண்டனையினால் பாதிக்கப்பட்டான், தூபகலசத்தைக் காட்டும் போது குஷ்டத்தால் பாதிக்கப்பட்டான். (26:17-21) கர்த்தருடைய ஆலயத்தில் சாவுக்கேதுவான பாவம் செய்ததில் உசியா மூன்றாவது அரசனாவார், முதலாவது அரசனாகிய சவுலைத் கர்த்தர் தள்ளிவிட்டார். (1சாமு13:11-14) இரண்டாவதாக யெரொபெயாம் செய்த பாவத்திற்காக அவன் பிள்ளையை அடித்தார், அத்துடன் மூன்றாவதாகிய இவனை குஷ்ட ரோகத்தால் பாதிக்கப்பண்ணினார்.( 1இரா. 14:17)

- இராஜாவாகிய உசியாதன் மரணநாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியினால், ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணினான் (2நாள. 26:21).

## 12. ஆகாஷ் ( பன்னிரண்டாவது அரசன்)

- கி.மு. 735 ஆம் ஆண்டுமுதல் அரசனாகி பன்னிரண்டு வருஷங்கள் ஆட்சி செய்தான்.
- இந்த பொல்லாத அரசன், இருபதாவது வயதில் அரசனாகி, ஆரம்பத்திலிருந்தே பிரச்சனைகளையே அனுபவித்தார்

➢ அந்நாட்களிலே கர்த்தர் சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனையும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவையும் யூதாவுக்கு விரோதமாக அனுப்பத் தொடங்கினார். (2 இரா15:37; 16:5, 6).

➢ அவர் தனிபட்ட முறையிலும், இணைந்தும் தாக்கப்பட்டார். (2 நாள.28:5, 6; 2இரா. 16:5).

➢ இவ்வாறு கலங்கிப்போயிருந்த அரசனை ஏசாயா தீர்க்கதரிசி சந்தித்தார், சிரியன்–இஸ்ரவேலர்களின் சதி நீடிக்காது, அவர்கள் விரையில் அழிக்கப்படுவார்கள் என்றும், நீ கவலைப்படவோ, பயப்படவோ தேவையில்லை என்றும் கூறி அவனை உற்சாகப்படுத்தினார். (ஏசா. 7:1-9).

➢ இஸ்ரவேலர்கள் உண்மையில் அழிக்கப்படுவார்கள் என்பதற்கான ஒரு தெய்வீக அடையாளத்தைக் கேட்பதற்காக, ஆகாசை ஏசாயா வரழைத்தான். ஆகாஸ் அரசன் அதனை மறுத்துவிட்டான். முழுத்

தாவீதின் குடும்பத்தாருக்கும் நண்மை செய்வதற்காக கர்த்தர் தாமே ஒரு அடையாளத்தைக் கூறுவார் என்றார், இது ஆபிரகாமின் பரம்பரையை கர்த்தர் நேசிக்கிறார் என்பதற்கான அடையாளமாகும். ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; **இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒருகுமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.** (ஏசா7:14). ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இயேசுக்கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பைக்குறித்து ஏசாயா முன்னறிவித்தார், பின்பாக காபிரியேல் தூதன் இந்த வார்த்தைகளுக்கான தச்சன் நாசரேத்தூரில் இருக்கிறார் என்று கூறினார். (மத். 1:18-25.)

- ஆகாஷ் கர்த்தருடைய வார்த்தையின்படி நடவாமல், அவன் தன் பொல்லாத இருதயத்தை பாகால் ஆராதனைக்குத் திருப்பினான், அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரரை அக்கினியிலே தகித்துப்போட்டு, மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகலமரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங் காட்டிவந்தான். (2 நாளா.28:1-4).
- இதன் காரணமாக ஆகாஷுக்கு பல எதிரிகளை கர்த்தர் உருவாக்கினார்.
- ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நான் உம்முடைய அடியானும் உம்முடைய குமாரனுமாயிருக்கிறேன். நீர்வந்து, எனக்கு விரோதமாயெழும்பின சீரியராஜாவின் கைக்கும், இஸ்ரவேல் ராஜாவின் கைக்கும் என்னை நீங்கலாக்கிவிடும் என்று சொல்லச்சொல்லி; கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரண்மனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையும் பொன்னையும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் காணிக்கையாக அனுப்பினான். (2நாளா. 28:16-21; 2 இரா16:7, 8)
- திகிலாத் பிலேசர் உடன்பட்டு தமாஸ்குசைக் கைப்பற்றினான், ஆகாசின் எதிரிகளில் ஒருவரான ரேசீனைக் கொலை செய்தான். யூதாவின் ராஜா, அவசரமாக தமாஸ்கஸ் சிற்கு விரைந்து சென்று அசீரிய இராஜாவின் கைகளை முத்தம் செய்தான். அங்கு அவன் இருக்கும் போது ஒரு விஷேசித்த பாகாலின் பலிபீடத்தைக் கண்டான். அதன் அளவுத் திட்டத்தைக்குறித்து, அதனை பிரதான ஆசாரியனாகிய

உரியாவுக்கு அனுப்பி, அதைப் போல ஒரு பலிபீடத்தை ஆயத்தம் செய்து வைக்கும்படி கட்டளையிட்டான். இந்த தவறான பலிபீடத்தை, ஆலயத்திலுள்ள வெண்கல பலிபீடத்தை அகற்றிட்டு, அங்கு வைத்தார்கள். அங்கு அவன் பாகால் வணக்கத்தைத் தொடர்ந்து செய்தான்.(2இரா. 16:10-16).

- இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவின் நாட்களில் அசீரியாவின் இராஜாவாகிய திகிலாத் பிலேசர் வந்து, வடராஜ்ஜியத்தின் தேசமனைத்தையும் பிடித்து, குடிகளைச் சிறையாக அசீரியாவுக்குக் கொண்டு போனான். (2 இரா15:29).

### 13. எசேக்கியா ( பதின் மூன்றாவது அரசன்)

- கி.மு.715 ஆம் ஆண்டில் இராஜ்ஜியத்தை ஆளத் தொடங்கி தொடர்ச்சியாக இருபத்தொன்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான்.
- கர்த்தருடைய பார்வையில் யூதா தேசத்தில் எசேக்கியா ஒரு சிறந்த அரசனாகும் , அவருடைய ஆவிக்குரிய வாழ்கையிலும் பார்க்க அவரது பேரனாகிய யோசியாவின் வாழக்கை இதற்கும் மேலானதாகும். (2 இரா 18:5). அவன் மலைகள்மீது கட்டப்பட்டிருந்த ஆலயங்களை உடைத்தெறிந்தான், ஆசறேத்தின் விக்கிரகங்களை உடைத்தெறிந்தான், அத்துடன் வெங்கலச் சர்ப்பம் மோசேயினால் உயர்த்திவைக்கப்பட்டது, அது ஜனங்களால் ஆராதிக்கப்பட்டது. (எண்21:9)
- வடக்கிலும், தெற்கிலும் எசேக்கியாவின் செல்வங்கள் அதிகரிக்கப்பட்டது. (2நாள. 32:27-30).
- அவருடைய ஆட்சியின் முதலாம் மாதத்திலேயே, மோசேயின் நியாயப்பிரமாணத்தை நினைவிற் கொண்டு, எசேக்கியா, மிருகபலி செலுத்துவதை திரும்பவும் ஆரம்பித்தான், மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவி. 17:11; எபி. 9:22). அரசன், ஒரு வாத்தியம் வாசிக்கும் குழுவை உருவாக்கி தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான். அப்படியே லேவியர் தாவீதின் கீதவாத்தியங்களையும், ஆசாரியர் பூரிகைகளையும்

பிடித்து நின்றார்கள். அப்பொழுது எசேக்கியா சர்வாங்க தகனபலிகளைப் பலிபீடத்தின் மேல் செலுத்தக் கட்டளையிட்டான்; அதைச் செலுத்தத் துவக்கின நேரத்தில் கர்த்தரைத் துதிக்கும் கீதமும் பூரிகைகளும், இஸ்ரவேல் இராஜாவாகிய தாவீது ஏற்படுத்தின கீதவாத்தியங்களும் முழங்கத் தொடங்கினது. இதில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.(2நாளா. 29:20-30). ஒவ்வொரு பெரிய ஆராதனையிலும் இவ்வாறு செய்யப்பட்டது.

- அதன் பின்பு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆரிக்கும்படி, எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரவேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதும் அன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான். அவர்களை மனம் திரும்பும்படியும், இந்த அழைப்பபுக்காக அனோகர், நையாண்டி செய்தனர். எசேக்கியா பஸ்கா பண்டிகைக்காக பெரிய விழாவை ஆயத்தம் பண்ணத் திட்டமிட்டான், அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவே லுடைய ராஜாவின் நாட்கள் முதற் கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை. (2நாள. 30:26). (புதிய ஏற்பாட்டிலும் இப்படியான சம்பவம் ஏற்பட்டது லூக் 14:16-24), ஆனால் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்கள். (2நாள. 30:3-11). உண்மையில் இந்த வைபவம் ஏழு நாட்களுக்கு நடை பெறுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, ஆனால் இது இன்னும் ஏழு நாட்களுக்கு விஸ்தரிக்கப்படவேண்டி இருந்தது. இங்கு இருபதினாயிரம் இளம் காளைகள் பலியிடப்பட்டன, 17,000 செம்மறி ஆடுகள் பலியிடப்பட்டன, (2 நாள 30:21-27). ஆராதிப்பவர்கள் வீடு திரும்பியிருந்த போதிலும், உயிர் மீட்சி அங்கு இடம் பெற்றது, வீடுகளில் உள்ள விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன. (2நாள. 31:1) ஆசாரியரையும் லேவியரையும், சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தவும், கர்த்தருடைய பாளயத்தின் வாசல்களில் ஊழியஞ் செய்து துதித்து ஸ்தோத்திரிக்கவும் ஒழுங் குபடுத்தினான். ராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே அந்தி சந்திகளில் செலுத்த வேண்டிய சர்வாங்க தகன பலிகளுக்கும், ஓய்வு நாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் பண்டிகைகளிலும் செலுத்த வேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும்

தன் ஆஸ்தியிலிருந்தெடுத்துத் தன்பங்கைக்கொடுத்தான். (2நாளா. 31:2, 3).

பல வருஷங்களுக்கு முன்பாக தாவீது ஒரு பாட்டுக்குழுவை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல், கர்த்தரைத் துதிப்பதைமட்டுமே செய்யும்படி கட்டளையிட்டான். (1 நாளா16:4; 6:31, 32.)

- சாலொமோனின் ஆலயம் பிரதிஷ்டை பண்ணப்பட்டது போல இடம்பெற்றது. (2 நாளா5:12, 13).
- யோசாபாத்தின்தி கீழ் நடந்த யுத்ததில், இஸ்ரவேலர்களின் எதிரிகளைக் கர்த்தர் அழித்து போல நடந்தது. (2நாளா. 20:21).
- பிரதான ஆசாரியன் யொய்தா இராணி அத்தாலியாவைக் கொலை செய்வித்து போல.(2 நாளா23:13).
- எசேக்கியா காலத்தில் ஏற்பட்ட உயிர்மீட்சி போல. (2 நாளா29:25-28).
- யோசியாவின் கீழ் நடைபெற்ற பஷ்கா கொண்டாட்டம் போல.(2நாளா. 35:15, 16).
- எஸ்றாவுடன் மீண்டு வந்தவர்கள் ஆலயத்தின் அத்திவாரத்தை இட்ட போது, மீண்டு வந்த இந்த மக்களிடம் கர்த்தருடைய தசமபாகம் அவர்கள் கைகளில் இருந்தது. இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம் இன்னும் மிச்சமும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான். இது சம்பந்தமான இன்னும் விளக்கம் பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் உள்ளது. (மல். 3:8-10.)

- ஆகாசின் ஆட்சிக்காலத்தில், யூதா அசீரியக்களுக்கு வரி கட்டினான். ஆனால் எசேக்கியா ராஜாவின் நாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சல்மனாசார் சமாரியாவுக்கு விரோதமாய் வந்து அதை முற்றிக்கை போட்டான். அவன் பெலிஸ்தரைக் காசாமட்டும் அதின் எல்லைகள் பரியந்தமும், காவலாளர்காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான நகரங்கள் பரியந்தமும் முறியடித்தான். (2இரா. 18:8)

- எசேக்கியாவுக்கு மரணவியாதி ஏற்பட்டு அவஸ்தைப்பட்ட போது, கர்த்தர் ஏசாயாவுக்கூடாக நீ தப்பமாட்டாய் என்று செய்தியை அறித்தார்,

இவருடைய இந்த வியாதிக்கான காரணம் பெருமையாகக் கூட இருக்கலாம். (2நாள. 32:24, 25; ஏசா 38:17). எசேக்கியேல் தன்னைத் தப்புவிக்கும்படி தனது முகத்தைச் சுவர் ஓரமாகத் திருப்பி கர்த்தரிடம் மன்றாடினான். அந்த விண்ணப்பத்தைக் கர்த்தர் கேட்டு 15 வருடங்கள் ஜீவிய காலத்தைக் அவருக்கு கூட்டிக் கொடுத்தார். (2இரா. 20:1-6). மரிக்க இருந்த அந்த இரவிலே கர்த்தர் அவருக்கு இரங்கினபடியால் அடுத்த நாள் சூரிய உதயத்தை அவரால் காண முடிந்தது. ஏசாயா அவருக்கு இருந்த அந்த ஆறாத புண்ணில் காயத்தில் அத்திப் பழத்தினால் ஒரு குழம்பைத்தயாரித்து பூசும்படி கொடுத்தார். அதின் குணமாக்கும் வல்லமை புறப்பட்டு அவனைக் குணமாக்கியது. இயேசுவும் கழியை உண்டாக்கி கண்பார்வை அற்றவனின் கண்ணில் பூசிய போது அவன் கண்பார்வை திறந்தது. (யோவன். 9:6). கர்த்தருடைய வார்த்தையில் நம்பிக்கைவைத்து விசுவாசித்தபடியினால் அங்கு வல்லமை இறங்கி இரண்டுபேரையும் குணமாக்கியது. (2 இரா20:7). அதற்கு ஏசாயா: கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு, கர்த்தரால் உனக்கு உண்டாகும் அடையாளமாகச் சாயை பத்துப்பாகை முன்னிட்டுப்போக வேண்டுமோ, பத்துப்பாகை பின்னிட்டுத்திரும்ப வேண்டுமோ என்று கேட்டான். அதற்கு எசேக்கியா. சாயைபத்துப்பாகை முன்னிட்டுப் போகிறது லேசானகாரியம். அப்படி வேண்டாம். சாயை பத்துப்பாகை பின்னிட்டுத்திரும்ப வேண்டும் என்றான். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பாகைக்குப்பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார். (2இரா. 20:8-11).

- பாபிலோனியர்கள் எசேக்கியாவைச் சந்தித்தார்கள். இவர்கள் மிக விரைவில் அசீரியர் களைத் தோற்கடித்தார்கள். பாபிலோனியர் வந்ததற்கான காரணங்கள் பல காணப்படுகின்றன.

➢ மரணப்படுக்கையில் இருந்து தப்பிய அரசனைப்பார்பதற்காக வந்திருக்கலாம்.

➢ இது எப்படி நடந்தது என்பதை விசாரிப்பதற்காகவும்.பாபிலோனியர்கள் வானத்தின் அடையாளங்களையும், மற்றும் ஜோசியத்தையும்,, சாஸ்திரத்தையும் நம்புகிற வர்கள்(ஏச47:13; தானி. 2:27; எரே. 10:2.)

- தாங்கள் எருசலேமிற்கு வந்தால் எவ்வளவு பொருள்களைக் கொள்ளையடிக்கலாம் என்பதை கணக்கிடுவதற்காகவும். (2இரா. 20:12, 13) எசேக்கியா ஞானமில்லாமல் தன்னுடைய இராஜ்ஜியத்தின் பொக்கிஷங்கள் யாவற்றையும் காண்பித்தான். இதற்காக ஏசாயா இவரைக் கடுமையாக கண்டித்தார். ஏசாயா திர்க்கதரிசி எசேக்கியாவுக்கு முன்னறிவித்தது, இதோ, நாட்கள்வரும். அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாகவைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும். நீர்பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர் களிலும் சிலர் பாபிலோன் இராஜாவின் அரமணையிலே அரமணை வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (2இரா. 20:19).
- நாம் ஏற்கனவே கவனித்து போல, எசேக்கியா, அசீரியர்களுக்கு வரிகள் செலுத்துவதை தன்னுடைய நாலாவது ஆட்சிக்காலத்தில் எதிர்த்து வந்தான், ஆனால், அவரது நாலாவது ஆண்டைத் தொடங்கிய போது, மிகவும் வல்லமையான வெற்றியாளனான சல்மனேசர், எருசலேமை பயப்படுத்த ஆரம்பித்தார். சனகெரிப் விரைவில் எருசலேமை முற் றுகையிட்டான். (2 இரா 18:17; ஏச.36:1). அவன் திடன்கொண்டு, இடிந்து போன மதிலையெல்லாம் கட்டி, அவைகளையும் வெளியிலுள்ள மற்ற மதிலையும் கொத்தளங்கள் மட்டும் உயர்த்தி, தாவீது நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்தி, திரளான ஆயுதங்களையும் கேடகங்களையும்பண்ணி, ஜனத்தின் மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகரவாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச் செய்து, அவர்களை நோக்கி: நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். (2நாள. 32:1-8). சனகெரிப், தன்னுடைய பிரதான அலுவலரான ரப்சாக்கேயை அனுப்பி, எருசலேம் மதிலை உடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுத்தினான். அதிக யூதர்கள் வந்திருப்பார்கள் என்று எண்ணி, அவன் பயங்கரமான பயப்படுத்தும் காரியங்களைக் கூறினான், எருசலேம் உடனடியாக

சரணடைய வேண்டும் என்பதற்கான ஏழுவிதமான நியாயப்படுத்துதலை விபரித்துக் கூறினான். (2இரா. 18:17-35).

- அவர்களின் கூட்டாளிநாடான எகிப்து வல்லமையற்றது என்றும் கூறினான். (வ. 21).
- அவர்கள் யெகோவா தேவனின் ஆலயங்களை எருசலேம் தவிர்ந்த மற்றய இடங்களில் ஆலயங்களை உடைத்து அவருக்கு குற்றமிழைத்துள்ளார்கள். ( வச. 22) இதைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்கள் மனதிற்குள் சிரித்தார்கள். எசேக்கியா பாகாலின் தேவர்களின் ஆலயங்களை மட்டுமே உடைத்தான் என்பது அவர்கள் யாவரும் அறிந்திருந்தார்கள். (18:4)
- நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ அவைகள் மேல் ஏறத்தக்கவர்களைச் சம்பாதிக்கக் கூடுமானால் அசீரியா ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு. (வச 23).
- எருசலேம் வெற்றி கொள்ளப்படுவது கர்த்தரின் விருப்பமாகும். (வச. 25). பாலஸ்தீனத்தை அசீரியன் முற்றுகையிடுவான் என்று ஏசாயா முன்னறிவித்திருந்தார். (ஏச 10:5, 6) இது கர்த்தருடைய விருப்பமல்ல, அவர்களுடைய பாவத்திற்கான கர்த்தருடைய தண்டனையாகும்
- அசீரியர்களிடம் பெரிய இராணுவம் இருக்கிறது.(வச. 24).
- அவன் கூறியது எல்லாம் பொய்யாகும். அசீரியர்கள் தங்கள் சிறையாளிகளை மிகவும் மோசமான முறையில் நடத்தினார்கள்.
- யெகோவா தேவனால் எருசலேமைக் காப்பாற்ற முடியாது என்பதையும் சுட்டிக் காண்பித்தார்கள்.(வச 35). ரப்சாக்கே நின்று கொண்டு யூதபாஷையிலே உரத்தசத்தமாய்: அசீரியா ராஜாவாகிய மகா ராஜாவுடைய வார்த்தையைக் கேளுங்கள் எசேக்கியா உங்களை வஞ்சியாதபடிபாருங்கள்; அவன் உங்களை என்கையிலிருந்து தப்புவிக்கமாட்டான். ஆனாலும் ஜனங்கள் அவனுக்கு ஒருவார்த்தையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்; அவனுக்கு மறுஉத்தரவு சொல்ல வேண்டாம் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான். (2இரா. 18:27, 28, 36).

- மூன்று மனிதர்கள் எசேக்கியாவிடம் வந்து, ரப்சாக்கே கூறிய பயங்கர வார்த்தைகளை கூறினார்கள். இராஜா அவசரமாக கர்த்தரிடம் முறையிட்டான். ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி அசீரியா இராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரப்சாக்கே சொன்ன

வார்த்தைகளையெல்லாம் உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிறார். உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார். ஆகையால் இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ் செய்வீராக என்று எசேக்கியா சொல்லச் சொன்னார் என்றார்கள். அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: அசீரியாராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தை களினாலே பயப்படாதேயும். இதோ, அவன் ஒரு செய்தியைக் கேட்டு, தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள் என்றான். (2இரா. 19:1-7;பிலி. 4:6, 7.)

- அவருடைய பதில் கர்த்தரிடம் இருந்து வந்தவையாகும். ஏசாயா தீர்க்கதரிக் கூடாக கர்த்தர் எசேக்கியாவுடனும், சனச்கெரிப்புடனும் பேசினார்.(2 இரா19:20-33). எசேக்கியாவுக்கு கர்த்தர் சொன்னதாவது.

- ➢ நான் உன்னுடைய ஜெபத்தைக் கேட்டேன். (வச.20). இது ராஜாவின் இருதயத்தை ஆறுதல் படுத்தியிருக்கும். (சங். 20:1; 34:4; 120:1; யோனா 2:2; 1யோவான். 5:14.) காது கேட்காத பாகால் தெய்வங்கள் எவ்வளவு வித்தியாசமானவை. (சங்கீ. 135:15-21; 115:2-7.)
- ➢ உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப்பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். (வச. 29).
- ➢ மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.
- ➢ மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலும் இருந்து புறப்படுவார்கள்; சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச்செய்யும். (வச. 31). சனச்கெரிப்பிற்கு கர்த்தர் சொன்னதாவது.
- ➢ குமாரத்தியாகிய சீயோன் உனக்குப் பயப்படுவதில்லை. (வச. 21).
- ➢ சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை இகழ்ந்து, உன்னைப் பரிகாசம் பண்ணுவாள். (வச21).

- நான் இப்பொழுது நீ அரணான பட்டணங்களைப் பாழான மண்மேடுகள் ஆக்கும்படிக்கு நானே அதைச் சம்பவிக்கப் பண்ணினேன் (வச. 25).
- உன் இருப்பையும், உன் போக்கையும், உன் வரவையும், நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன். (வச. 27).
- நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம் பேசினது என் செவிகளில் ஏறினபடியினால், நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன்வாயிலும் போட்டு, நீ வந்தவழியே உன்னைத்திருப்பிக் கொண்டு போவேன் என்று அவனைக் குறித்துச் சொல்லுகிறார். ( 28).
- நீ இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை; இதின் மேல் அம்பு எய்வதுமில்லை; அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; (வச. 32).
- நீ உன்னுடைய குடும்ப அங்கத்தவராலேயே கொல்லப்படுவாய். (வச. 7). **குறிப்பு**- ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்பின் பிரகாரம், சனச்கெரிப்பு தன்னுடைய மகனாலே அடித்துக் கொலை செய்யப்பட்டான் என்பதாகும்.
- என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு, இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லியனுப்பினான். (வச. 34).
- நீ எருசலேமை அடித்தபோது என்னையே அடித்தாய். எருசலேம் பாதுகாக்கப்படும் என்று மாத்திரம் கர்த்தர் கூறவில்லை, ஒரு எதிரிகளின் அம்புகளும் தேசத்திற்குள் விழுவதுமில்லை என்றும் வாக்களித்தார். அன்றிரவு கர்த்தருடைய தூதனானவர், 185,000 அசீரியத் துருப்புக்களை கொன்று போட்டார், அவர்களின் உடல்கள் நிலம் முழுவதும் பரவிக்கிடந்தது. இது கிறிஸ்த்துவே என்று சிலர் நம்புகிறார்கள். நான் இப்பொழுது என்பிதாவை வேண்டிக் கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? மத்தேயு 26:53 எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக எகிப்தியர்கள் அனுபவித்த அதே நிலைப்பாட்டையே இப்போது அசீரியர்கள் அனுபவிக்கிறார்கள். (யாத். 12:29.) சனகெரிப் உடனடியாக நினிவேய்குத் திரும்பிப் போனான், அவன் அங்கு ஏற்கனவே கூறப்பட்டது போல கொலை செய்யப்பட்டான். (2இரா.19:36,37). இதன் பிற்பாடு எசேக்கியா இருபத்தொன்பது

வருடங்களாக மகிமையான ஆட்சியை நடத்தினார். அவருக்குப்பின்பு அவரது மகன் மனாசே ஆட்சியைப் பொறுப் பெடுத்தான். (2இரா. 20:20, 21; 2நாள. 32:32, 33).

## 14. மனாசே ( பதின்நான்காவது அரசன்)

- கி.மு.695 ஆம் ஆண்டுமுதல் ஆட்சியைத் தொடங்கி, ஐம்பத்தைந்து வருடங்கள் ஆட்சி செய்தான்.
- பதின்நான்காவது யூதாவின் அரசன், சந்தேகமில்லாமல், வடக்கு,தெற்கு ராஜ்ஜியத்தின் மிகவும் சிறந்த அரசன்.

கீழே கூறுவதைக் கவனியுங்கள்.

- ➢ அனைத்து இராஜ்ஜியத்திலும், இவரே அதிக நாள்கள் அரசாண்ட அரசனாகும்
- ➢ யூதாவிலே மிகவும் கர்த்தருக்குப் பயந்த ஒரு தகப்பனை உடையவர் இவராகும்.
- ➢ அவருடைய பேரனாகிய யோசிய எல்லாரையும் விட மிகவும் சிறப்பானவர்.
- ➢ தனது மரணத்திற்கு முன்பாக மனம்மாறிய கெட்ட அரசன் இவரேயாகும்
- ➢ இரட்சிப்புக்கு முன்பாக மிகவும் கெட்ட அரசனாக இருந்தவரும் இவரேயாகும்.

- இரட்சிப்புக்கு முன்னான ஆட்சி ( 2இரா21:2-6; 2நாள.33:1-20) இவர் ஸ்ராலினைப் போலவும், ஹிட்லரைப் போலவும் மோசமாக நடந்து கொண்டார். கீழே கூறப்படும் விடயங்களைக் கவனியுங்கள்.
- ➢ தன்தகப்பனாகிய எசேக்கியா தகர்த்துப் போட்டமேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, விக்கிரகத் தோப்புகளை உண்டாக்கி, வானத்தின் சேனையையெல்லாம் பணிந்துகொண்டான்.(2 நாள33:3)

- கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக் கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்.(சூரியன் சந்திரன் நட்சத்திர வணக்கம்) (2நாளா. 33:4, 5).
- தன்னுடைய பேரனாகிய ஆகாஷ் செய்தது போல தன்னுடைய பிள்ளைகளை சாத்தானின் தெய்வத்திற்கு கின்னோம் பள்ளத்தாக்கிலே பலியிட்டான். (2 நாளா33:6).
- நாளும் நிமித்தமும் பார்த்து, பில்லிசூனியங்களை அநுசரித்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான். (2 நாளா33:6).
- ஏசாயாவை வாளால் வெட்டி இரண்டு துண்டாக்கி கொலை செய்தான் என்று மரபுவழியில் கூறப்படுகின்றது. (எபி11:37).
- யூதாவின் ராஜாவாகிய மனாசே தனக்கு முன்னிருந்த எமோரியர் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக இந்த அருவருப்புகளைச் செய்து, தன் நரகலான விக்கிரகங்களால் யூதாவையும் பாவஞ் செய்யப் பண்ணினபடியினான் என்று கர்த்தர் கூறினார்.(2இரா. 21:11).
- கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும்படியாக, மனாசே யூதாவைப்பாவஞ் செய்யப் பண்ணின அந்தப்பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலுமூலைவரையும் இரத்தப்பழிகளால் நிரப்பத்தக்கதாய், குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான். (2இரா. 21:16).
- கர்த்தர் மனாசேயோடும் அவனுடைய ஜனத்தோடும் பேசின போதிலும், அவர்கள் கவனிக்காதே போனார்கள். (2 நாளா33:10).
- அவன் அசீரியா ராஜாவினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தான்.
- அவன் சிறைச்சாலையில் இருக்கும் போது மனம் திரும்பினான், அதனால் கர்த்தர் அவனை மன்னித்தார்.
- அவன் யூதாவின் ராஜாவாக வருவதற்கு அனுமதிக்கப்பட்டான்.
- அவன் ஐம்பத்தைந்து வருடங்கள் ஆட்சி செய்தான். அவனது மகன் அம்மோன் அவனுக்குப் பின்பு அரசனானான்.

16. **யோசியா ( பதினாறாவது அரசன்)**

- கி.மு. 640 ஆம் ஆண்டில் ஆட்சிசெய்யத் தொடங்கி முப்பத்தொன்பது வருடங்கள் ஆட்சி செய்தான்.

- சாலொமோனுக்குப் பிற்பாடு வந்த இராஜாக்களில் யோசியாவைப் போல் மிகத் திறமையான அரசன் ஒருவரும் இல்லை. கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழுபலத்தோடும் மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான்; அவனைப்போலொத்த இராஜா அவனுக்கு முன்இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் எழும்பினதுமில்லை. (2 இரா23:25).

- **யோசியாவின் மறுசீரமைப்பு**

➢ தன் இராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேடஆரம்பித்தான். (2நாளா. 34:3).

➢ அவருடைய இருபதாவதுவயதில் மிகப்பெரிய மாறுதல்களை தேசத்தில் கொண்டு வந்தார். (34:3).

➢ பாகால் தெய்வங்களுடைய பலிபீடங்கள் யாவற்றையும் தகர்த்துப் போட்டான். (34:4).

➢ அவனுக்கு முன்பாகப்பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள். அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டி, விக்கிரகத்தோப்புகளையும் வார்ப்பு விக்கிரகங்களையும் வீட்டு விக்கிரகங்களையும் உடைத்து நொறுக்கி, அவற்றை, அவைகளுக்குப் பலியிட்டவர்களுடைய பிரேதக் குழிகளின் மேல் தூவினான்.(34:4).

➢ பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின் மேல் சுட்டெரித்தான். (34:5).

➢ அப்படியே அவன் மனாசே எப்பிராயீம் சிமியோன் என்னும் பட்டணங்களிலும், நப்தலிமட்டும், பாழான அவைகளின் சுற்றுப்புறங்களிலும் செய்தான். (34:6).

➢ அவன் தன்னுடைய இருபதாவது வயதில் ஆலயபுணரமைப்பு வேலைகளில் ஈடுபட்டான். (34:8).

➢ ராஜாவும், அவனோடு யூதாவின் மனுஷர் யாவரும் எருசலேமின் குடிகள் அனைவரும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சிறியோர் துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள சகலரும் கர்த்தரின் ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்கவாசித்தான். (2இரா. 23:1-3, 18-21, 29-32).

- அதற்குப் பின்பு யோசியா எருசலேமிலே கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரித்தான் . தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக்கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை. (2நாளா. 35:1, 18).
- யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின் மேல்தூபங்காட்ட, யூதாவின் இராஜாக்கள் வைத்த பூசாரிகளையும், பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகலசேனைகளுக்கும் தூபங்காட்டினவர்களையும் அகற்றி கொன்று விட்டான். (2 இரா23:5)

- தோப்பு விக்கிரகத்தைக் கர்த்தரின் ஆலயத்திலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டு போய், அதைக் கீதரோன் ஆற்று ஓரத்திலே சுட்டெரித்து, அதைத்தூளாக்கி, அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக்குழிகளின் மேல் போடுவித்தான். (23:6).
- கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடத்திலுள்ள இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகளை இடித்துப் போட்டான். (23:7).
- அவன் யூதாவின் பட்டணங்களிலுள்ள எல்லா ஆசாரியரையும் யூதாவுக்கு வரச் சொன்னான். (23:8).
- ஒருவனும் மோளேகுக்கென்று தன்குமாரனையாகிலும் தன்குமாரத்தியையாகிலும் தீக்கடக்கப் பண்ணாதபடிக்கு, இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலிருக்கிற தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும் அவன் தீட்டாக்கி, அழித்துப் போட்டான். (23:10).
- கர்த்தரின் ஆலயத்திற்குள் போகிற இடந்தொடங்கி, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கிற நாத்தான் மெலெக் என்னும் பிரதானியின் அறை வீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றி, சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான். (23:11).
- யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினதும், ஆகாசுடைய மேல் வீட்டில் இருந்ததுமான பலிபீடங்களையும் இடித்தான்.. (23:12).

- மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்களையும் இராஜா இடித்தான். (23:12).
- எருசலேமுக்கு எதிரே இருக்கிற நாசமலையின் வலது புறத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும், மோவாபியரின்அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டியிருந்த மேடைகளையும் ராஜா தீட்டாக்கி இடித்துப் போட்டான். (23:13).
- இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் பெத்தேலில் உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்து, அந்த மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத்தோப்பையும் சுட்டெரித்தான்.(23:15), இதனால் 300 வருடங்களுக்கு முன்பு கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறியது. (1 இரா13:1, 2.)
- கர்த்தருக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேலின் இராஜாக்கள் சமாரியாவின் பட்டணங்களில் உண்டாக்கியிருந்த மேடைகளின் கோவில்களையெல்லாம் யோசியா தகர்த்தான். (23:19).
- யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும் வெளியேற்றினான். (23:24).

  - **யோசியாவின் வேதாகம ஊழியம்.**

- பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாகர்த்தரின் ஆலயத்திலே மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடித்தான். (2இரா. 22:8).
- இது குறித்து ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது, ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த் தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான். தன்னுடைய தகப் பனும்,பேரனும் இது குறித்து கவலையற்று இருந்தார்களே என்று கவலைப்பட்டான். (22:9-13). மனாசேயின் கெட்ட ஆட்சிக் காலத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் அழிக்கப்பட்டிருந்தன .மோசேயின் நியாயப்பிரமாணத்தின் பிரதிகளை வைத்திருப்பதே பாரியகுற்றமாக அந்தக் காலத்தில் இருந்தது. ஆனாலும் யாரோ ஒரு ஆசாரியன், காலம் வரும்போது தேவைப்படும் என்று நினைத்து ஒரு பிரதியை ஆலயத்தில் மறைத்து வைத்துள்ளான்.

- அப்பொழுது ஆசாரியனாகிய இல்க்கியாவும், சல்லூம் என்னும் வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாகிய உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்திற்குப் போய் அவளோடேபேசினார்கள். 2இரா. 22:14;

1. ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளுக் கூடாகவும் அவர் பேசினார். (யாத்15:20).

2. தெபோறாவுக் கூடாக கர்த்தர் கிரியை செய்தார்.(நியா. 5).

3. சகரியாவின் மனைவி ஒரு தீர்க்கதரிசி (லூக்கா. 2:36).

4. பிலிப்புவின் நான்கு பெண்பிள்ளைகளும் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப் பட்டார்கள். (அப்21:9).

- உல்தாளின் செய்திகள் இரண்டு மடங்கு தீர்க்கதரிசனமானவையாகும். இது சொல்லுவதாவது.

1 அவர்களின் ஆவிக்குரிய வாழ்வின் தோல்வியினால், கர்த்தர் அவர்களை நியாயம் தீர்க்க முடிவு செய்தார், அவள் கர்த்தருடைய பயங்கரமான வார்த்தைகளை கூறியிருந்தாள். *“அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக்கோப முண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் இந்தஸ்தலத்தின் மேல் பற்றியெரியும்; அது அவிந்துபோவது இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லுங்கள்”*.( 22:17).

2. யோசாயா கர்த்தர்மேல் வைத்த அன்பினால், இந்த நியாயத் தீர்ப்புக்களிலிருந்து அவர்களைக் காத்துக் கொண்டார். அவருடைய மரணம் வரும்வரை நியாயத்தீர்ப்பு வரவேயில்லை. அவர் மிகவும் சமாதானத்தோடு கல்லறையில் சேர்ந்தார்.(2இரா. 22:20). அவர் யுத்தத்தில் மரித்திருந்தாலும் சமாதானத்துடன் மரித்தார்.,

- அப்பொழுது இராஜா யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மூப்பரையெல்லாம் அழைப்பித்தான்; அவர்கள் அவனிடத்தில் கூடின போது, இராஜாவும், அவனோடு யூதாவின் மனுஷர் யாவரும் எருசலேமின் குடிகள் அனைவரும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சிறியோர் துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள சகலரும் கர்த்தரின்ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை புஸ்தகத்தின்

வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான். அப்பொழுது ராஜா, தூண் அருகே நின்று, கர்த்தரைப்பின் பற்றி நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழுஇருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக் கைபண்ணினான்; ஜனங்கள் எல்லாரும் உடன்படிக்கைக்கு உட்பட்டார்கள். (2இரா. 23:1-3).

5. **யோசியாவின் மிகப்பெரிய பஸ்கா பண்டிகைக் கொண்டாட்டம்**. இந்தக் கொண்டாட்டம் 900 வருடங்களுக்கு முன்பாக எகிப்தில் தொடங்கப்பட்டது.(யாத். 12) ஆனால் எசேக்கியாவின் காலம்வரை இது பெரிதாகக் கொண்டாடப்படவில்லை. இப்பொழுது இந்த தவறுதலை யோசியா திருத்த முயல்கின்றார். இங்கு பெருந் தொகையான மிருகங்கள் பலியிடப்பட்டு கொண்டாடப்பட்டதை அவதானிக்க முடியும். (2நாள. 35:7, 8).

- மிருகங்கள் (1) முப்பதாயிரம் ஆடுகள். (2) மூவாயிரம் காளைகள். (3) எழுபத்தாறாயிரம் செம்மறி ஆடுகள். (4) முந்நூறு எருதுகள்.
- **உடன்படிக்கைப் பெட்டி**

2 நாளா. 35-:18 இன் பிரகாரம் எல்லாக்காலத்திலும் பஸ்காக பண்டிகை பெரிய பண்டகையாகும். பஸ்கா பண்டிகையின் காலத்தில், உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்திலே அதற்குரிய இடத்தில்வைத்தான்.

(1) இது முதலில் யாத்திரகாமத்தில் கூறப்பட்டுள்ளது. 25:10.

(2) இது தேவாலயத்தில் மோசேயினால் வைக்கப்பட்டது. (யாத். 40:21).

(3) நாற்பது வருஷங்களாளக வனாந்தர அனுபத்தில் இஸ்ரவேலர்களால் கொண்டு செல்லப்பட்டது. (எண். 10:35; 14:44).

(4) யோர்தான் ஆற்றை இஸ்ரவேலர்களுடன் கடந்து வந்தது. (யோசு. 4:5).

(5) இது எரிக்கோவைச் சுற்றிக் கொண்டு செல்லப்பட்டது. (யோசு. 6:13).

(6) ஏபேல் பர்வதத்தில் யோசுவாவுக்கு அருகில் வைக்கப்பட்டது, அப்போது யோசுவா இஸ்ரவேலர்களுக்கு நியாயப் பிரமாணத்தை வாசித்தான். (யோசு. 8:33).

(7) சீலோவில் உருவாக்கப்பட்ட புதிய தேவாலயத்தில் இது வைக்கப்பட்டது. (யோசு. 15:1).

(8) பெலிஸ்தர்களுடன் யுத்தம் நடக்கும் போது, ஓப்னியும், பினேகேசினாலும், யுத்தம் நடக்கும் இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (1சாமு. 4:4).

(9) இது 7 மாதங்களால் பெலிஸ்தர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. (1 சாமு4:11; 6:1). இந்தக் காலத்தில்.

- பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, அதை எபெனேசரிலிருந்து அஸ்தோத்திற்குக் கொண்டுபோனார்கள். அங்கே தாகோனை வெற்றி கொண்டது(1சாமு. 5:1).
- இது எக்ரோனுக்கு கொண்டு செல்லப்பட்டது, அங்கு வாதை ஏற்பட்டது. (1சாமு. 5:10).

10இது வண்டிலில் வைத்து இரண்டு பசுக்களால் பெத்ஷிமேசுக்கு கொண்டு செல்லப்பட்டது,அங்கே உள்ளே பார்த்ததால் அனே குடிமக்கள் கொல்லப்பட்டார்கள். (1 சாமு6:12).

(11) அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின் மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்து, கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு, அவன் குமாரனாகிய எலெயாசரைப் பரிசுத்தப்படுத்தினார்கள். இது அங்கே இருபது வருஷம் இருந்தது. (1சாமு. 7:1).

(12) இது சவுலினால் கிபியாவுக்கு கொண்டுவரப்பட்டது. இங்கு இது பெலிஸ்தரிடமிருந்து இஸ்ரவேலர்களால் பாதுகாக்கப்பட்டது. (1சாமு. 14:18).

(13) கிபியாவிலிருந்து, புதிய வண்டியில் வைத்து, தாவீதினால் எருசலேமிற்கு கொண்டு செல்லப்பட்டது. வழியில் உசியா அதனைத் தொட்டதனால் கொல்லப்பட்டான். (2சாமு. 6:3).

(14) இது ஓபேத்-ஏதோம் வீட்டில் மூன்று மாதங்கள் இருந்தது. (2சாமு. 6:11).

(15) எருசலேமிற்கு இது தாவீதினால் கொண்டு செல்லப்பட்டது. (2சாமு. 6:16).

(16) சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவனோடே கூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்தார்கள். (2சாமு. 15:24).

(17) தாவீதின் கட்டளைப்படி இது எருசலேமிற்கு கொண்டு செல்லப்பட்டது. (2சாமு. 15:25, 29).

(18) இது சாலமோனின் ஆலயத்தில் வைக்கப்பட்டது. (1இரா. 8:1).

(19) இதனால் நடந்தது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

6. **யோசியாவின் துக்கரமான மரணம்**.

- எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐபிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின் மேல்யுத்தம் பண்ணவதற்கு, யூதாவிற்கூடாக பிரயாணம் செய்வதற்கு வந்தான். (2நாள. 35:20).
- அப்பொழுது யோசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப்புறப் பட்டான். அவன் இவனிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னோடே யுத்தம் பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன்; நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டு விடும் என்று சொல்லச் சொன்னான். (2 நாள35:20, 21)
- யேசியா அந்த சமாதான பேச்சை மறத்து நேகோபுக்கு எதிராக மெகிதோவின் பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணுகிறதற்கு வந்தான். எஸ்தரலோன் என்ற இடம் பல யுத்தங்களைக் கண்ட இடமாகும்.

.

1. இங்கே தான் தெபோராளும், பாராக்கும் கானானியரைத் தோற்கடித்த இடமாகும்.(நியா. 4-5).
2. இதுவே மீதியானிரைக் கிதியோன் வென்ற இடம்.(நியா. 7).
3. இதுவே கோலியாத்தை தாவீது வென்ற இடம்.(1சாமு. 17).
4. இதுவே பெலிஸ்தர்கள் சவுலைக் கொன்ற இடம்.(1சாமு. 31).
5. இதுவே யோசியாவும் கொல்லப்பட்டார்.(2 நாள35:22).

6. இதுவே ஒரு நாள் அர்மகதோன் யுத்தம் இடம்பெறும். (சக. 12:11;வெளி. 16:16).

- தன்னை மறைத்து யுத்தம் செய்த வேளையில் பரிதாபமாகக் கொல்லப்பட்டார், இன்னும் ஒரு இராஜா இப்படிச் செய்தார். (1 இராா22:30.) அவன் மரணமடைந்து தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டான். யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யோசியாவுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள். எரேமியா யோசியாவின் மேல் புலம்பல் பாடினான் (2நாாள. 35:23-25). இந்தக் காலத்தில் யோசியாவைப் போல் ஒரு அரசன் இருக்கவில்லை. இவரது மரணத்திற்குப் பின்பு யூதாவில் ஆவிக்குரிய வாழ்வு குறைந்து கொண்டே சென்றது.

## 19. யோயாக்கீம் ( பதனெட்டாவது அரசன்)

1. கி.மு.609 ஆம் ஆண்டில் ஆட்சியைத் தொடங்கி, பதினொரு வருடங்கள் ஆட்சி செய்தார்.

- விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விசாலமான மேலறைகளையும் கட்டினான், பலகணிகளைத் தனக்குத் திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்க வருணம் பூசினான் (எரே. 22:13, 14
- அவன் சுயநலவாதியாகவும், ஆவலுள்ளவனாகவும், நேர்மையற்றவனாகவும் இருந்தான். (22:17).
- அவன் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தைச் சிந்தினான், ஏழைளை ஒடுக்கினான், இரக்கமற்றவனாக நடந்தான். (22:17).
- இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து கொண்டுவந்து, அவனை யோயாக்கீம் ராஜாவினிடத்தில் விட்டார்கள்; அவன் உரியா என்ற தீர்க்கதரிசியை பட்டயத்தாலே அவனைவெட்டி, அவன் உடலை நீசஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்து விட்டான் என்றார்கள். (26:23)
- அவன் தீர்க்கதரிசிகளை(எரேமியா) சத்தம் போடாமல் இருக்கும்படி கட்டளையிட்டான். (26:24; 36:19, 26).
- அவன் எரேமியாவின் தீர்க்கதரிசனம் கொண்ட சுருளை எரித்துச் சாம்பலாக்கினான். ஆனால் இந்த எரிந்துபோன சுருளுக்குப் பதிலாக

புதிய சுருள் எழுதப்பட்டதுடன் யோயாக்கீமுக்கு எதிரான தீர்க்கதரிசனமும் உள்ளடக்கப்பட்டது.(36:22, 23, 27-32).

3. நேபுகாத்நேச்சர் எகிப்தையும் அசீரியர்களையும் வெற்றி கொண்டபின்பு யோயாக்கீமை தன்னுடைய சார்புடையவனாக வைத்திருந்தான். தன்னுடைய ஆட்சியின் கடைசிக் காலத்தில் எருசலேமைக் கைப்பற்றி ஆலயத்திலுள்ள பாத்திரங்களை பாபிலோனுக்கு கொண்டுசென்றான். யோயாக்கீமை தன்னுடைய கைப் பொம்மை அரசனாக யூதாவில் வைத்திருந்தான். (2இரா. 24:1; எரே25:1; 2நாளா.36:6, 7) சில வாலிபர்களையும் அடிமைகளாக அழைத்துச் சென்றான், அவர்களுள் தானியேலும் ஒருவனாக இருந்தான். (தானி. 1:3, 4).

4. மூன்று வருடங்களுக்குப் பிற்பாடு, எகிப்தைச் சேர்ந்தவர்கள் யோகாக்கீமை நோபுகாத் நேச்சாருக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டினார்.

5.நேபுகாத்நேச்சரால் இந்தக் கிளர்ச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியால் இருந்த போதிலிம், கர்த்தர் கல்தேயரையும், சீரியரியரையும், மோவாபியரையும், அம்மோன் புத்திரரையும் யோயாக்கீமுக்கு எதிராக வரவிட்டார்(2இரா. 24:2, 3).

6. எரேமியாவின் தீர்க்கதரிசனத்திற்கு ஒப்பாக யோயாக்கீம் மரித்தான். (22:18, 19; 36:30), ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்பட்டான். அவனுக்காகப் புலம்புவார் ஒருவரும் இருக்கவில்லை, அவனுடைய மகன் யோயாச்சீன் அரசனாக பொறுப் பேற்றான்.(2இரா.24:5, 6).

19. யோயாக்கீன்.( பத்தொன்பதாவது அரசன்) (2இரா. 24:6-16; 2நாளா. 36:8-10).

1. இவர் யோயாக்கீமுடைய மகனும் யோசியாவின் பேரனுமாவார். யோயாக்சீன் கோனியா என்றும் அழைக்கப்படுவார். (எரே. 22:24, 28; 37:1).

2. இவர் 18 வது வயதில் அரசாளத் தொடங்கினான். (2இரா. 24:8). குறிப்பு: 2 நாளாகமம் 36 : 9 இல் எட்டுவயதில் அரசாளத் தொடங்கினார் என்று எழுதப்பட்டுள்ளது.

(3. இவர் ஒரு கெட்ட அரசனாகும். (2இரா. 24:9). இதன் விளைவாக

- எசேக்கியலும்(19:5-9)எரேமியாவும்(22:24-26) ஆகிய இரண்டு தீர்க்கதரிசிகளும் அவர் பாபிலோனிய சிறையிருப்பிற்குக் கொண்டு போகப்படுவார் என்று தீர்க்கதரிசனம் கூறியிருந்தார்கள்.
- இவருக்கு குழந்தைகள் இல்லாதிருந்தது. அதனால் தாவீதின் சிங்காசனத்தில் அமரவோ அல்லது யூதாவை அரசாளவோ ஒருவரும் இல்லாமல் போயிற்று.

4. நேபுகாத்நேச்சரின் எட்டாவது வருட ஆட்சியில் யோயாக்கீன் சிறைப்பிடிக்கப்பட்டார். (2இரா. 24:12) அவரும் இன்னும் 10,000 யூத மக்களும் சிறைக்கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.(எரே. 24:1; 29; 2இரா. 24:14, 15). இவர்களுடன் எசேக்கியேலும் கொண்டு செல்லப்பட்டார். 5. அவர் அதன் பிற்பாடு சிதேக்கியா, (யோயாக்சீனின் பெரிய மாமனார்) யூதாவின் அரசனாக நியமித்தார். (2இரா. 24:17).

6.யோயாக்சீம் பாபிலோனியச் சிறைச்சாலையில், முப்பத்தாறு வருடங்கள் சிறைவைக்கப்பட்டார், அதாவது நேபுகாத்நேச்சார் மரணிக்கும் வரையாகும். அதன் பிற்பாடு புதிய பாபிலோனிய மன்னரான ஏவில் மெரொதாக் அவனுடைய சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்து ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து, அவனுடைய சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் தனக்கு முன்பாகப் போஜனம்பண்ணும்படி செய்தான். அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுடைய செலவுக்காக, ராஜாவினால் கட்டளையான அநுதினத் திட்டத்தின்படி, அநுதினமும் கொடுக்கப்பட்டுவந்தது. (2 இரா25:27-30; எரே. 52:31-34).

7. அவர் மூன்று மாதங்கள் அ 598 கி.(மு).

**20. சிதேக்கியா ( இருபதாவது அரசன்.)**

1. கி.மு.597 இல் அரசனாகி பதினோரு வருடங்கள் ஆட்சி செய்தார். யோசியாவின் கடைசி மகன், இவரே கடைசி அரசனாகும், தன்னுடைய இரண்டு சகோதரராகிய யோகாஸ், யோயாக்கீம் போலவே சிதேக்கியா கெட்ட அரசனாக இருந்தான். இவரும் கைப்பொம்மை அரசனாகவே இருந்தான். (2 இரா24:18, 19; 2 நாள36:12).

2. ஆரம்பத்தில் சிதேக்கிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிய விருப்பம் காண்பித்தான். (எரே. 34:8-10).

3. அவன் தன்னுடைய ஆட்சிக்காலத்தின் நான்காவது ஆண்டில் பாபிலோனுக்குச் சென்றான், தன்னுடைய உண்மைத்தன்மையை நேபுகாத்நேச்சாருக்கு காண்பிப்பதற்காகவேயாகும்.

4. அவன் திரும்பிவந்து பீரங்கி வாயையுடைய எரேமியாவை அடக்கி வைத்தான்.(எரே. 27-29).

5. சிதேக்கியாவின் காலத்தில், எரேமியா அதிக துன்பங்களை அனுபவித்தான்.

- எரேமியாவின் நியாயத்தீர்ப்பின் தெய்வீகச் செய்திகளைக் கேட்டு, அவனை வெறுத்து, அவனுக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்தான். (எரே. 11:8-10).
- எரேமியா இந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது, எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச் சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான். (20:1-3).
- அவருடைய செய்தியைக் கேட்ட பிற்பாடு, அவரைக் கொல்ல வேண்டும் என்று, யூதாவின் பொய்த் தீர்க்கதரிசகள் கூறினார்கள். (26:7-9).
- யூதாவுடைய ராஜாவாகிய சிதேக்கியா அரசாளத் துவங்கின நாலாம் வருஷம் ஐந்தாம் மாதத்திலே, அசூரின் குமாரனாகிய அனனியா என்னப்பட்ட கிபியோன் ஊரானாகிய தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவை கடிந்து கொண்டான். பாபிலோன் இன்னும் இரண்டுவருடத்தில் கவிழ்க்கப்பட்டுப் போகும் என்றும் கூறினான். (28:1-4).
- அவர்கள் எரேமியா அரச துரோகம் செய்தவர் என்று குற்றம் சாட்டி மறியலில் வைத்தார்கள். (37:11-16).
- அவன் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டு, அரச மாளிகையிலுள்ள மறியல் சாலையில், நிலையில்லாத சிதேக்கியாவால் சிறைவைக்கப்பட்டான். (37:21).
- அவர்கள் எரேமியாவைப்பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே

இறக்கிவிட்டார்கள். அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியாவை அமிழ்ந்தினார்கள். (38:1-6).

- அவரைத் திரும்பவுமாக வெளியில் விட்டார்கள், சிதேக்கியாவை கர்த்தருடைய தண்டனைக்கு தப்புவதற்கு பாபிலோனுக்குச் செல்ல வேண்டும் என்பதற்கான முயற்சி வீனாகியது. (38:14-26).
- சிதேக்கியாவின் கடைசி இரண்டு வருட மாறுபட்ட ஆட்சியில், திரும்பவுமாக எரேமியா சிறையில் வைக்கப்பட்டான். இந்தக்காலத்தில் அவருடைய சொந்தக்காரனான அனாமெயேல் என்பவரிடமிருந்து ஒரு பண்ணையை வாங்கும்படி கட்டளையிடப்பட்டார். (32:6-15).

6. தேவன் மேல் தன்னை ஆணையிடுவித்துக் கொண்ட நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு, தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான். (2நாள. 36:13). நேபுகாத்நேச்சார், சிதேக்கியாவுக்கு எதிராக வந்து எருசலேமை முற்றுகை போட்டான். நகரத்தின் மதில்கள் உடைக்கப்பட்டன. சிதேக்கியதப்புவதற்கு முயற்சி செய்தபோது, எரிக்கோவுக்கு அண்மையில் பிடிக்கப்பட்டார். அவர் நேபுகாத்நேச்சாரிடம் கொண்டுவரப்பட்டார். அவரது கண்களுக்கு முன்பாக அவரது இரண்டு பிள்ளைகளும் கொலை செய்யப்பட்டார்கள். அதன் பிற்பாடு அவரது இரண்டு கண்களும் பிடுங்கப்பட்டது. அவர் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மரித்தார். (எரே. 52:4-11; 39:1-7).

**குறிப்பு-**எரேமியா, நேபுகாத்நேச்சரின் கண்களை சிதேக்கியாவின் கண்களைக் காணும் என்றும், எசேக்கியேல், சிதேக்கியாவின் கண்கள், பாபிலோனைக் காணமாட்டாது என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். அவையாவும் அப்படியே இடம் பெற்றன. *( நீ அவன் கைக்குத்தப்பிப் போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக்காணும்; அவன் வாய் உன் வாயோடே பேசும்; நீ பாபிலோனுக்குப் போவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார். (32:4; 34:3), நான் என்வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்;*

*அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன்; அங்கே அவன் சாவான்; ஆகிலும் அதைக் காணமாட்டான். (12:6,12,13).*

7. ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற் சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது. அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமணையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான். 52:12-23).

8. நேபுகாத்நேச்சார், பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், அவருடன் சேர்த்து மேலும் எழுபத்து மூன்று முக்கிய அதிகாரிகளையும் கொன்று போடும்படி கட்டளையிட்டார். இத்துடன் யூதாவின் நாடு கடத்தப்படுதல் நிறைவுபட்டது. (எரே52:24-27). இந்த நாளில் இருந்து 1948/ 5/ 14 வரை இஸ்ரவேல் என்ற ஒரு நாடு இல்லாமல் இருந்தது.

**முக்கியமான தீர்க்கதரிசிகள்.**

A. எலியா.

**1. எலியாவும் ஆகாப் அரசனும்.**

- மூன்றரை வருடங்களுக்கு மழை பெய்யாது என்று தீர்க்கதரிசனம் கூறினார். (1இரா. 17:1)
- கர்மேல் பர்வதத்திலே போட்டிக்கு வரும்படி அழைத்தல். (18:17-20)
- வறட்சி அற்றுப்போகும் என்று முன்னறிவித்தல். (18:41-46)
- அவன் மீதும் அவனது மனைவி மீதும் மரண தண்டனையை முன்னறி வித்தல். (21:17-24)

2. கேரீத் ஆற்றண்டையில், எலியாவும் காகமும்.(17:2-7)

3. எலியாவும் சாரிபாத் விதவையும். (17:8-15)

4. எலியாவும் ஒபதியாவும். (18:1-16)

5. எலியாவும் இஸரவேல் ஜனங்களும்.(18:20-24)

6. எலியாவும் பாகாலின் ஆசாரியர்களும். (18:25-40)

7. எலியாவும் கர்த்தரும். (19:1-18)

8. எலியாவும், எலிசாவும்.

- விஷேசித்த சேவைக்கு அழைத்தல்.(1இரா. 9:19-21)
- அவரை விஷேசித்த சேவைக்கு ஆயத்தப்படுத்தல். (2இரா. 2:1-10)

9. எலியாவும் அகாசியா அரசனும். (2இரா. 1:1-17)

10. எலியாவும் அக்கினி இரதமும். (2இரா. 2:11)

**அவருடைய வாழ்வில் நடந்த சம்பவங்கள், வரிசைக்கிரமமாக**

1. திஸ்பியனாகிய எலியா தீடீரென தோன்றுகின்றார்.

2. ஆகாப் செய்த பாவத்திற்காக நீண்ட வரட்சி ஏற்படும் என்று அறிவித்தார். (1இரா. 17:1).

எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழை பெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. மழை பெய்யாமல் விட்டது கர்த்தருடைய தண்டனையாகும். இது மூன்றரை வருடங்கள் நீடித்தது. (யாத். 11:13-17; 28:24; 2நாள. 7:12-15.)

3. நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய். (17:2) அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று கர்த்தர் கூறினார்.

4. எலியா, யேசபேலின் பிரச்சனையால், சாறிபாத் ஊருக்குப் போகும்படி கட்டளை பெற்றார், அங்கே சாறிபாத் என்னும் ஊரிலே ஒரு விதவை அவரைப் போசிப்பதற்கு கட்டளை பெற்றாள். எலியா இந்த கேரீத் ஆற்றண்டையில் அனேக காரியங்களைக் கற்றுக் கொண்டார். கர்மேல் பர்வதத்திலும் அவர் பெற்ற அனுபவம் மிகவும் சிறப்பானதாகும். இங்கு தன்னுடைய தீர்க்கதரிசியை காகத்தைக் கொண்டு போசிக்கின்றார், இது ஒரு

பெரும் அதிசயமாகும், அதேபோல் மிகவும் வறுமையிலுள்ள விதவையைக் கொண்டும் அவரைப் போஷிக்கின்றார். (17:10-16).

5. ஒருவித காரணமுமின்றி விதவையின் மகன் சாகிறான், இந்த துக்கத்தில் விதவையின் துக்கத்தைப் பார்த்து எலியா உதவிசெய்கிறார். (1 இராா17:18):

6. எலியா அவனை அவள்மடியிலிருந்து எடுத்து, தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக் கொண்டுபோய், தன் கட்டிலின் மேல் வைத்து என்தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு. அந்தப் பிள்ளையின் மேல் மூன்று தரம்குப்புற விழுந்து. என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார். பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பி வந்தது. அவன் பிழைத்தான். இது எட்டு உயிர்தெழுதலில் முதலாவது உயித்தெழுதலாகும் ( இயேசுவின் உயரித்தெழுதல் இங்கு சேர்க்கப்படவில்லை)

**இவைகளே அவைகள் (உயிர்த்தெழுதல்கள்)**

- எலியா விதவையின் மகனை எழுப்பினார. (1இரா. 17:22).
- எலிசா சூனேமியாளுடைய மகனை எழுப்பினார்.(2இரா. 4:35).
- ஒரு மனுஷனின் பிரேதம் எலிசாவின் எலும்புகளின் மேல்பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான். (2இர. 13:21).
- இயேசு யாவீருவின் மகளை உயிர்த் தெழப்பண்ணினார்.(மத் 9:25).
- விதவையின் மகனை கிறிஸ்த்து உயிர்த் தெழப்பண்ணினார். (லூக். 7:14).
- கிறிஸ்த்து லாசறசை உயிர்த் தெழப்பண்ணினார். (யோவ11:43, 44).
- பேதுரு தபீத்தாளை எழுப்பினார்., (அப்9:40, 41).
- ஐத்திகு என்ற வாலிபனை பவுல் உயிர்தெழப்பண்ணனார். (அப்20:12).

7. அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி. நீ போய் ஆகாபுக்கு உன்னைக்காண்பி. நான் தேசத்தின் மேல் மழையைக்கட்டளையிடுவேன் என்றார். அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப் போனான். பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது. ஆனபடியால் ஆகாப் அரண்மனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவை அழைப்பித்தான். ஒபதியா கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான். யேசபேல் கர்த்தரின் தீர்க்க தரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்து வந்தான். நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனுக்குச் சொல் என்றான். ஒபதியா போய், ஆகாபைச் சந்தித்து அவனுக்கு அதை அறிவித்தவுடனே, ஆகாப் எலியாவைச் சந்திக்கப் போனான். (1இரா. 18:1-16).

8. இஸ்ரவேலின் பிரச்சனைகள் யாவற்றிற்கும் எலியாதான் காரணம் என்று ஆகாப் குற்றம் சாட்டினான்.

9. ஆகாபின் ஞானமற்ற குற்றச்சாட்டை எலியா மறுத்தான். கார்மேல் பர்வதத்தில் பலியிடுவதற்கு கீழே கூறப்படும் சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக் கொண்டான்.

- இரண்டு காளைகளைக் கொண்டுவந்து, பாகாலுக்குரிய பலிபீடத்தில் ஒரு காளையும், கர்த்தருக்குரிய பலிபீடத்தில் மற்றகாளையும் வைக்கப்பட்டது.
- இரண்டு பகுதினரும் தங்கள் தெய்வங்களை நோக்கிக் கூப்பிட்டார்கள், உண்மையான தெய்வமே வானத்திலிருந்து நெருப்பை அனுப்பி பலியைப் பட்சிக்கும். (1இரா. 18:23-25)

10. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம் பண்ணி. பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆனாலும் ஒருசத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். மத்தியான வேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி. உரத்தசத்தமாய்க் கூப்பிடுங்கள். அவன் தேவனாமே,

அவன் தியானத்தில் இருப்பான். அல்லது அலுவலாயிருப்பான். அல்லது பிரயாணம் போயிருப்பான். அல்லது தூங்கினாலும் தூங்குவான். அவனை எழுப்ப வேண்டியதாக்கும் என்றான். (1இரா. 18:27,)

11. அந்திப் பலிசெலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படிசெய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும் , என்னைக் கேட்டருளும் என்றான். (18:36, 37).

12. அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

- பலிபீடம், எங்களைக்குறித்துப் பேசுகின்றது.(ரோம. 12:1-3.)
- விறகு. இது எங்கள் முயற்சியைப் பேசுகிறது.
- கல்லுகள். இது பிரச்சனையான காரியங்களைக் குறித்துப் பேசுகின்றது.
- தூசி. இது எங்கள் வாழ்க்கையில் பிரயோசனமற்ற விடயங்களைப் பேசுகின்றது.
- தண்ணீர். இது எங்கள் வாழ்க்கையில் முடியாத காரியத்தைப் பேசுகின்றது. 18:38).

13. எலியா பாகாலின் ஆசாரியர்களை வெட்டிப் போட்டான்.

14. இறுதியாக, ஏழுமடங்கு ஜெபத்திற்குப் பிற்பாடு, அங்கு பெரும் மழை பெய்தது. (18:45). கர்த்தர் அடிக்கடி சுழற்சி முறையில் செயற்படுவார், அப்படி அவர் செய்வது சில காரியங்களைச் செய்து முடிப்பதற்காகவேயாகும். இவ்வாறான காரியங்கள் அதில் இடம்பெறும் விடயங்களாவன.

- எலியா பெறுமதியான பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்.
- மரியாதை கொடுக்கத் தெரியாத அரசன் கர்த்தருக்குப்பயப்படக் கற்றுக் கொண்டான்.

➢ புறஜாதிப் பெண் கர்த்தரை விசுவாசித்தாள்.
➢ மரித்த இளம் வாலிபன் உயிர்த்தெழுந்தான்.
➢ பின்வாங்கிப் போனவன் மீண்டும் கர்த்தரை விசுவாசித்தான்.
➢ இஸ்ரவேல் தேசம் தற்காலிகமான உயிர்மீட்சி அடைந்தது.
➢ பெருந் தொகையான கர்த்தரின் எதிரிகள் கொல்லப்பட்டார்கள்.

15. எலியாவின் செயற்பாடுகளை அறிந்த யோசபேல் அவனை இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் கொண்று விடுவதாக பொருத்தனை செய்தாள், அதனால் எலியா தன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடினான். (19:2). இது ஆவிக்குரிய உண்மையை வெளிப்படுத்துகிறது.

16. அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒருசூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாக வேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒருசூரைச் செடியின் கீழ்ப்படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான்; (19:4). இந்த ஜெபம் 24 நூற்றாண்டுகளுக்கு முன்பாக ஏறெடுக்கப்பட்ட ஜெபமாகும். இப்போதும் இப்படியான ஜெபங்களுக்கு கர்த்தர் மறுமொழி கொடுக்கின்றார். எலியா, ஏனோக்கைப் போல வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவராகும்.( ஆதி. 5:24, 2 இரா2:11.) ஆனால் ஒரு நாளில் தன்னுடைய உயிரை இயேசுவிற்காக கொடுப்பார். (மல். 4:5, 6. வெளி. 11:3-12.) மோசே (எண்.11:15), யோனா(4:3) ஆகிய இருவரும் பிரச்சனை நேரத்தில் தங்கள் உயிரை எடுத்துக் கொள்ளும்படி ஜெபித்தவர்களாகும்.

17. அவர் நித்திரை செய்து கொண்டிருக்கும் போது, ஒரு கர்த்தருடைய தூதுவன் அவரை எழுப்பி அவரைப் போஷித்தான். (19:5). சில நேரங்களில் கர்த்தர் தன்னுடைய தூதனை ,மனிதர்களுடன் தொடர்பு கொள்ளவைக்கின்றார். (எபி. 1:14; 1போது. 1:12.) எலியா, யெஸ்ரயேலிருந்து பெயர்செபாவுக்கு 150 மைல் பிரயாணம் செய்து மிகவும் சோர்வாக இருந்தார். அதனால் அவருக்கு உணவு மிகவும் தேவையாக இருந்தது. எங்களுடைய வாழ்விலும், சரீரப்பிரகாரமான சோர்வுகள், ஆவிக்குரிய தன்மையையும் பாதிக்கின்றது. அவருடைய உடலின் ஒரு பகுதியான ஆத்துமா, சரிரத்தை தவறாக நடத்தியபடியால் சோர்வுற்று இருக்கின்றது. வயிறு கூட ஆத்துமாவைத் தாங்கக்கூடியது. (சங்கீ. 127:2.)

18. இறுதியாக குகையின் அருகில் மெல்லிய சத்தத்தில் எலியாவோடு கர்த்தர் பேசினார். ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பாகவும் மோசே இவ்வாறு கர்த்தரின் மகிமைமையைக் கண்டார். (19:9யாத். 33:21-23.) எலியாவுக்கு கர்த்தர் நான்கு காரியங்களை செய்யும்படி கட்டளையிட்டார்.

- திரும்பிச் சென்று கர்த்தரின் செய்தியைக் கூறும்படியும் கட்டளையிட்டார். அவர் தனிமையில் இல்லை இன்னும் 7000பேர் பாகாலை வணங்காதவர்கள் இஸ்ரவேலில் உண்டு என்றும் காண்பித்தார். (19:15, 18).
- ஆசகேல் என்னும் பெயருடையவனை அசிரியாவின் இராஜாவாக அபிசேகம் பண்ணினான். (19:15).
- இஸ்ரவேலின் அரசனாக யெகூவை அபிஷேகம் பண்ணும்படி கூறினார். (19:16).
- எலிசாவை உன் இடத்திற்கு அபிஷேகம் செய்து பயிற்சி கொடு(19:16). கடந்து போகும் போது கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், ஒவ்வொரு இஸ்ரவேலர்களும் தங்களுடைய இஸ்ரவேல் தேசத்திற்கு எதிராகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை கர்த்தர் ஒருபோதும் கேட்கமாட்டார் என்று பரிசுத்த பவுல் கூறுகின்றார் (ரோம. 11:1-4)

19. எலியா திரும்பி வருகையில் எலிசா ஒரு வயலில் உழுது கொண்டிருப்பதைக் கண்டான், எலியா அவன்இருக்கும்இடமட்டும்போய், அவன் மேல் தன் சால்வையைப் போட்டான். எலிசா அதன்பின்பு தன்னுடைய பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் பிரியாவிடைவைத்து எலியாவைப் பின்பற்றிச் சென்றான். (19:19-21).

20. நாபோத்தின் திராட்சத் தோட்டத்தில் எலியா, கெட்ட ஆகாபைச் சந்தித்தான். நாபோத்தைக் கொலை செய்ததற்கான தண்டனையாக யேசபேலும், ஆகாப்பும் கொலை செய்யப்படுவார்கள் என்பதை முன்னறிவித்தான். (1இரா. 21:17-24).

21. அகசியா சமாரியாவிலிருக்கிற தன்மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று

எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான். (2 இரா1:1-3). கர்த்தருக்குப் பயப்படாத ஆகாப்பின் மகன் இஸ்ரவேலின் சரித்திரம் தெரியாதவன். பாகால் தெய்வத்தில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. கர்த்தரின் கோபத்திலிருந்து தன்னை ஆராதிக்கும் ஜனங்களைக் கூட அதனால் காப்பாற்ற முடியாதளவு வல்லமையில்லாதிருந்தது. (1சாமு 5:10-12). சமாரியாவுடைய எலியா தேவனுடைய தேவதூதனால் எச்சரிக்கை பெற்று, ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: ஆகாசுக்குத் தன்னுடைய தீர்க்கதரிசனத்தைக் கூறும்படி கட்டளையிட்டான் அவர் கூறியதாவது, அரசனின் விக்கிரக நம்பிக்கையின் நிமித்தம், அவர் விரைவில் மரித்து விடுவான் என்பதைக் கூறும்படி கூறி அனுப்பினான். (1:3-6) அவன் மயிர் உடையைத்தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக் கொண்டிருந்தான் என்று அறிந்து அவன் எலியாதான் என்பதை ஊகித்த அரசன், அவனை சிறைப்பிடித்து வரும்படி ஆட்களை அனுப்பினான். போர்வீரர்கள் எலியாசை' சிறைப்பிடிக்க அவரை நெருங்கி வருகையில், எலியா வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தான், அதில் அவர்கள் யாவரும் எரிந்துபோனார்கள். மேலும் ஐம்பதுபேர் அனுபப்பட்டார்கள் அவர்களுக்கும் அதுபோல நடந்தது. மூன்றாம் முறை அனுப்பப்பட்ட தலைவன் எலியாவை அண்மித்து முழங்கால்படியிட்டு, தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளும்படியும், தங்களுடன் வரும்படியும் வேண்டிக் கொண்டார்கள். தீர்க்கதரிசி அவர்களுடன் வருவதாகக் கூறி, அரசனுக்கு முன்பாக நின்று அகசியாவின் தகப்பனாகிய ஆகாப்புக் கூறிய அதே வார்த்தைகளயே கூறினார். இதன் பிற்பாடு அகசியா மரணமடைந்தான், அவனது இளைய சகோதரன் யோராம் அரசனான். (2இரா. 1:7-17) அவர் இரண்டு வருடகாலங்களுக்கே அரசனாக இருந்தார்.

22. **எலியாவின் மகிமையான ஊழியம் முடிவுக்கு வருகிறது**, இவர் மரணத்தை காணாமல் வானத்திற்கு சுழல் காற்றில் எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் இறுதியாக தன்னுடைய அலுவலகத்திற்கு இறுதித் தடவையாக சென்றார், அவர் மிகவும் விரைவாக கில்காலில் இருந்து பெத்தேலிற்கும், பெத்தேலிலிருந்து எரிக்கோவிற்கும், எரிக்கோவிலிருந்து யோர்தான் ஆற்றிற்கும் சென்றார். முதல் மூன்று தரிப்பிடத்திலும் எலிசா தான் தீர்க்கதரிசியின் வாழ்கையைக் கைவிட்டு தன்னுடைய பண்ணைக்குத்

திரும்ப முயற்சி செய்தார், ஆனால் ஒவ்வொரு தடவையும் கீழ்க்குறிப்பிட்ட வார்த்தைகளைக் கூறி மறுத்துள்ளார். (2:2, 4, 6) ரூத்தைப்போல நாம் உம்மைவிட்டுப் போக மாட்டேன் என்று கூறி கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற முயற்சி செய்தார். (ரூத்1:15-17.)

- அவர்கள் வஞ்சகத்துடன் செயற்பட்டார்கள். (1இரா. 18:4).
- எலிசாவை அதிருப்தியடையச் செய்தார்கள். (2 இரா2:3, 5)
- அவர்கள் குறைந்த விசுவாசத்தோடு இருந்தார்கள். (2 இரா2:16-18). அப்பொழுது எலியா, தன்சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்; அது இருபக்கமாகப் பிரிந்தது; அவர்கள் இருவரும் உலர்ந்த தரைவழியாய் அக்கரைக்குப் போனார்கள் (2:8).

23. அவர்கள் அக்கரைப்பட்டபின்பு, எலியா எலிசாவை நோக்கி: நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படு முன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின்வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படிவேண்டுகிறேன் என்றான். அதற்கு அவன்: அரிதான காரியத்தைக் கேட்டாய். உன்னை விட்டு நான் எடுத்துக் கொள்ளப் படுகையில் என்னை நீ கண்டால் உனக்குக்கிடைக்கும். இல்லாவிட்டால் கிடையாது என்றான். (2:9, 10).

24. அவர்கள் பேசிக்கொண்டு நடந்து போகையில், இதோ, அக்கினி ரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். (2:11).

| |
|---|
| **எலியா** |
| **எலியாவும் ஆகாப்பும்** |

| |
|---|
| **3.1/2 வரட்சி பற்றிய அறிவிப்பு(1 இரா17:1)** |
| **காமேல் பர்வத்த்தில் அவருடன் போட்டி(17:17-19)** |
| வறட்சி முடிந்து மழை வரும் என்பதை அறிவித்தான். (18:41-46) |
| அவனும் அவனது மனைவியும் மரிப்பார்கள் என்பதை நியாயத்தீர்ப்பாக அறிவித்தல். (21:17-24) |
| **எலியாவும்,கேரீத்திலுள்ள காகமும்.** |
| அற்புதவிதமாகா காகங்கள் மூலம் வறட்சியான ஆற்றங்கரையிலே போஷிக்கப்படல். (1இரா. 17:2-7) |
| **எலியாவும் சாரிபாத் விதவையும்.** |
| கர்த்தரால் அற்புதமாக விதவையைக் கொண்டு போஷிக்கப்படல்.(1இரா. 17:8-16) |
| மரித்துப் போயிருந்த விதவையின் மகனை எழுப்பினார். (17:17-24) |
| **எலியாவும் ஒபதியா என்கின்ற பின்மாற்றம் அடைந்தவனும்.** |
| ஒபதியா 100 தீர்க்கதரிசிகளுக்கு இரகசியமாக ஊழியம் செய்த விசுவாசியாகும். (1 இரா18:1-15) |
| ஆகாபையும் எலியாவையும் பயத்துடன் சந்திக்கவைத்தவர். (1 இரா18:16) |
| **எலியாவும் இஸ்ரவேல் தேசமும்** |
| இஸ்ரவேலர்களைக் கடிந்து கொண்டு கார்மேல் பர்வத்த்தில் போட்டிக்கு அழைத்தல். (1 இரா18:20-24) |
| **எலியாவும் பாகாலின் பூசாரிகளும்.** |
| பாகாலின் பூசாரிகளால் வானத்திலிருந்து அக்கினியை இறக்கமுடியாமல் போயிற்று.(1 இரா18:25-29) |
| பாகால் வணக்ககாரர் யாவரையும் கொண்றுபோட்டான். (18:40) |
| **எலியாவும் கர்த்தரும்.** |
| யோசபேல் பழிவாங்கத் துடிக்கிறாள் என்பதை அறிந்து எலியா ஓடி |

| |
|---|
| ஒழிந்து கொண்டார். (**1இரா.** 19:1-3) |
| **கர்த்தருடைய துதுவன் ஒருவர் அவருக்கு ஊழியம் செய்தார்.** (19:4-7) |
| **அவர் குகை அருகில் அமர்ந்திருக்கும் போது கர்த்தருடைய மெல்லிய வார்த்தையைக் கேட்டார்.** (19:8-18) |
| **எலியாவும், தீர்க்கதரிசி எலிசாவும்.** |
| அவர் எலிசாவை ஒரு விஷேச சேவைக்கு அழைத்தார். (1 இராi. 19:19-21) |
| அவர் எலிசாவை ஒரு விஷேச சேவைக்கு ஆயத்தப்படுத்தல். (2இரா. 2:1-10) |
| **எலியாவும் வடக்கு ராஜ்ஜியத்தின் அரசன் அகசியாவும்.** |
| அகசியா விழுந்து மரிப்பான் என்று முன்னறிவித்தார். (2 இரா1:1-18) அவரை சிறைப்பிடிக் கவந்தவர்களை இரண்டு குழுக்களை வானத்தின் அக்கினியால் அழித்துப் போட்டார். (1:9-12) |
| **மூன்றாவது குழு இரக்கம் கேட்டபடியால் தப்புவிக் கப்பட்டார்கள்.**(1:13-16) |
| **எலியாவும் அக்கினி ரதமும்.** |
| யோர்தான் ஆற்றைப்பிளந்து சென்றார். (2இரா. 2:1-8) |
| **எலிசாவின் கடைசி விருப்பத்தைக் கேட்டார்.** (2:9, 10) |
| **அவர் மரிக்காமல் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.** (2:11) |

### B. எலிசா

#### 1. யோர்தான் ஆற்றைப்பிளத்தல். (2 இரா2:14)

எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு எலிசா, எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை

அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான். (யோசு. 3:17; 2இரா. 2:8, 14.) இஸ்ரவேல் சரித்திரத்தில் யோர்தான் பிரிந்தது மூன்றாவது தடவையாகும். எலியாவின் தேவன் எங்கே என்பதே இன்றய உலகின் கேள்வியாகும். இதுதான் வேதாகம பாடசாலை மாணவர்களின் கேள்வியாகும். இதோ, உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் போய் உம்முடைய எஜமானைத் தேடும்படி உத்தரவுகொடும். ஒரு வேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும் பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டு போய்வைத்திருப்பார் என்றார்கள். அதற்கு அவன். அவர்களை அனுப்ப வேண்டாம் என்றான். (2இரா. 2:16). அவன் சலித்துப் போகுமட்டும் அவர்கள் அவனை அலட்டிக் கொண்டிருந்தபடியால் அனுப்புங்கள் என்றான்; அப்படியே ஐம்பது பேரை அனுப்பினார்கள்; அவர்கள் மூன்று நாள் அவனைத் தேடியும் காணாமல், எரிகோவிலிருந்த அவனிடத்திற்குத் திரும்பி வந்தபோது, அவன் இவர்களைப் பார்த்து: போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா என்றான். (2 இரா2:17, 18). இவர் தனக்குக் கிடைத்த இந்த வல்லமைகளைக் கொண்டு அனேக அதிசயங்களைச் செய்தார்.

## 2. எரிக்கோவின் தண்ணிரைச் சுத்தப்படுத்தல்.(2:19-22).

இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப்பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள். அப்பொழுது அவன்:, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று(2 இரா2:19-22).மோசேயும் இதைப்போல் ஒரு அற்புதத்தை மாராவில் செய்தார்.( யாத் 15:23-25.)

## 3. பெத்தேலில் குழப்படிக்காரர் நியாயந்தீர்க்கப்படல். (2:23, 24).

எலிசா வழிநடந்து போகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, அவனைப் பார்த்து: மொட்டைத் தலையா ஏறிப்போ, மொட்டைத் தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தார்கள். அப்பொழுது அவன் திரும்பி

அவர்களைப் பார்த்து: கர்த்தரின் நாமத்திலே அவர்களைச் சபித்தான்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது. இது கர்த்தரின் தண்டனையாக கருதப்படுகின்றது. (2இரா. 2:23-25).

### 4. வாய்க்கால்கள் தண்ணீரால் நிரப்பப்படல். (2இரா. 3:16-27).

இது யூதாவின் அரசன் யோசபாத்தின் காலத்தில் இடம்பெற்றது, யோசபாத்தை ஏமாற்றுவதற்கு, ஆகாப் மற்ற இராஜாக்களுடன் கூட்டுச்சேர்ந்தான், இந்த நாள்களில் யோசபாத்தின் இழைய மகன் யோராம், மோவாப்பியரைத் தோற்கடிப்பதற்காக, ஆகாப்பின் மரணத்திற்குப் பின்பு வரி செலுத்துவதை நிறுத்தி விட்டார்கள். (3:1-8) அப்படியே இஸ்ரவேலின் இராஜாவும் யூதாவின் இராஜாவும் ஏதோமின் இராஜாவும் சேர்ந்து போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஏழுநாள் சுற்றித்திரிந்த போது, அவர்களைப் பின் செல்லுகிற இராணுவத்துக்கும் மிருகஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற்போயிற்று. மிகவும் துக்கத்துடன் ராஜாக்கள் எலிசாவிடம் சென்று விசாரித்தார்கள். யொராமுக்கு உதவிசெய்ய எலிசா முதலில் மறுத்து விட்டார். ஆனாலும் யோசபாத்தின் நிமித்தம் சம்மதித்தார். அவருடைய கட்டளைப்படி வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. அடுத்த நாள் அவைகள் தண்ணீரால் நிரப்பப்பட்டன. (3:9-20).

தங்களோடு யுத்தம் பண்ண இராஜாக்கள் வருகிறதை மோவாபியரெல்லாரும் கேட்டபோது, அவர்கள் ஆயுதம் தரிக்கத்தக்க வயதுள்ளவர்களையும், அதற்கு மேல்தரமானவர்கள் எல்லாரையும் கூட்டி அழைத்துக் கொண்டு வந்து எல்லையிலே நின்றார்கள். மோவாபியர் அதிகாலமே எழுந்த போது சூரியன் தண்ணீரின் மேல் பிரகாசித்ததினால் அந்தத்தண்ணீர் அவர்களுக்கு இரத்தம் போல் சிவப்பாய்க் காணப்பட்டது. அதினால் அவர்கள்: இது இரத்தம், அந்த ராஜாக்கள் தங்களைத் தாங்களே ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு மாண்டுபோனார்கள். ஆதலால் மோவாபியரே, கொள்ளைக்கு வாருங்கள் என்று சொன்னார்கள். (3:21-23). இந்த யோசனையற்ற செயற்பாடு அவர்களுக்குத் தோல்வியைக் கொண்டுவந்தது. யுத்தம் மும்முரமாகிறதென்று மோவாபியரின் இராஜா கண்டபோது, அவன் ஏதோமின் ராஜாவின் மேல் வலுமையாய் விழுகிறதற்குப் பட்டயம் உருவுகிற எழுநூறு பேரைக் கூட்டிக்

கொண்டுபோனான். ஆனாலும் அவர்களாலே கூடாமற்போயிற்று. அப்பொழுது அவன்தன் ஸ்தானத்தில் இராஜாவாகப் போகிறதன் சேஷ்ட புத்திரனைப் பிடித்து, அலங்கத்தின் மேல் அவனைச் சர்வாங்கதகனமாகப் பலியிட்டான்; (3:22-27).

**5.வெற்றுப்பாத்திரங்கள் எண்ணெய்யால் நிறைத்தல்**.(4:1-7).

கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒருமனிதனின் விதவைக்கு கடன்காரர்களிடமிருந்து தப்புவதற்கான செயற்பாடு சமாரியாவில் இடம்பெற்றது. எலிசா, அந்தப் பெண்ணிடம் நீ போய், உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளேபோய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப்பூட்டி, அந்தப்பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒருபக்கத்தில் வை என்றான். அவள் அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக் கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வாந்தாள். அந்தப்பாத்திரங்கள் நிறைந்தபின், அவள் தன்மகன் ஒருவனை நோக்கி: இன்னும் ஒரு பாத்திரம் கொண்டுவா என்றாள். அதற்கு அவன். வேறே பாத்திரம் இல்லை என்றான். அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று. அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது அவன் நீ போய் அந்த எண்ணெயைவிற்று, உன் கடனைத்தீர்த்து, மீந்ததைக் கொண்டு நீயும் உன்பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான்.

**சிறிய பொருட்களைப் பயன்படுத்துவதை விரும்புகிறார்**.

- அவர் மோசேயின் கோலைப் பயன்படுத்தினார். (யாத். 4:2).
- அவர் ஆரோனின் கோலைப் பயன்படுத்தினார். (எண். 17:8).
- அவர் தாவீதின் கவணைப் பயன்படுத்தினார். (1சாமு. 17:49).
- அவர் கிதியோனின் எக்காளத்தைப் பயன்படுத்தினார். (நியா. 7:18).
- அவர் விதவையின் கையளவு உணவைப் பயன்படுத்தினார். (1இரா. 17:12).
- அவர் சிறுபையனின் உணவைப் பயன்படுத்தினார். (யோவன். 6:9-11).

1. சூனேமியாளின் மகனை எழுப்புதல். (4:18-21, 32-37).

சூனேமில், அவருக்கு தங்குவதற்கு ஒரு அறையை கணவனாலும் மனைவியாலும் கொடுக்கப்பட்டது இந்த தீர்க்கதரிசியின்மீது அவர்கள் இரக்கம் காட்டியதற்காக, எலிசா அவர்களுக்கு குழந்தை மகன் கிடைக்கும் என்று வாக்குப்பண்ணினார். குழந்தை பிறந்து சில வருடங்களுக்குப்பின்பு அது மரித்தது. அந்தத் துக்கத்தில் எலிசாவைக் கண்ட தாயார் தனக்கு உதவும்படி மன்றாடினாள். அப்பொழுது எலிசா அவன் கேயாசியைப் பார்த்து: நீ உன் இடையைக் கட்டிக்கொண்டு, என் தடியை உன் கையில் பிடித்துக்கொண்டு, வழியில் ஒருவனைச் சந்தித்தாலும் அவனை வினவாமலும், உன்னை ஒருவன் வினவினாலும் அவனுக்கு மறுமொழி சொல்லாமலும் போய், என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின் மேல்வை என்றான். ஆனாலும் சத்தமும் இல்லை, உணர்ச்சியும் இல்லை;எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப்பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்துகிட்டே போய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன் மேல் குப்புறப் படுத்துக்கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது (2இரா. 4:8-37). எலிசா தான் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயாகிய ஸ்திரீயை நோக்கி: நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப்போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்; அது ஏழு வருஷம் தேசத்தில் இருக்கும் என்று சொல்லியிருந்தான். அந்த ஸ்திரீ எழுந்து, தேவனுடைய மனுஷன் சொன்ன வார்த்தையின்படி செய்து, தன் வீட்டாரோடுங்கூடப் புறப்பட்டு, பெலிஸ்தரின் தேசத்தில் போய், ஏழு வருஷம் சஞ்சரித்தாள். ஏழுவருஷம் சென்ற பின்பு, அவள் பெலிஸ்தரின் தேசத்தை விட்டுத் திரும்ப வந்து, தன் வீட்டுக்காகவும் தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிடும்படி போனாள். அந்நேரத்தில் ராஜா, தேவனுடைய மனுஷனின் வேலைக்காரனாயிருந்த கேயாசியுடனே பேசி. எலிசா செய்த அதிசயங்களையெல்லாம் நீ எனக்கு விவரமாய்ச் சொல் என்றான். செத்துப்போனவனை உயிர்ப்பித்தார் என்பதை அவன் ராஜாவுக்கு அறிவிக்கிற போது, இதோ, அவன் உயிர்ப்பித்த பிள்ளையின் தாயாகிய அந்த ஸ்திரீ வந்து, தன் வீட்டுக்காகவும் தன் வயலுக்காகவும் ராஜாவினிடத்தில் முறையிட்டாள். அப்பொழுது கேயாசி. ராஜாவாகிய என் ஆண்டவனே, இவள்தான் அந்த ஸ்திரீ.

எலிசா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன்தான் என்றான். ராஜா அந்த ஸ்திரீயைக் கேட்டதற்கு, அவள்: அதை அவனுக்கு விவரித்துச் சொன்னாள்; அப்பொழுது ராஜா அவளுக்கு ஒரு பிரதானியை நியமித்து, அவளுக்கு உண்டானது எல்லாவற்றையும், அவள் தேசத்தை விட்டுப்போன நாள்முதல் இதுவ ரைக்கும் உண்டான அந்த வயலின் வருமானம் அனைத்தையும் அவளுக்குக் கிடைக்கும்படி செய் என்றான்.

7. கில்காலில் நஞ்சு கலந்த கூழை நஞ்சகற்றி சுத்தப்படுத்தல் (4:38-41). ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்து வந்து, அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான்; அது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது. சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அந்தக் கூழில் எடுத்துச் சாப்பிடுகிறபோது, அதைச் சாப்பிடக் கூடாமல்: தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள். அப்பொழுது அவன், மாவைக் கொண்டுவரச்சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று (2இரா. 4:38-41).

8. 20 அப்பங்களும் கதிர்களையும் 100 பேர் சாப்பிட்டு மிகுதியும் இருந்த்து. (4:42-44). பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன்: ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு என்றான். அதற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி என்றான். அதற்கு அவன்: அதை ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு; சாப்பிட்ட பிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது அவர்களுக்கு முன்பாக அதை வைத்தான்; கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது. இயேசுவும் 5அப்பங்களையைம் 2 மீன்துண்டையும் 5000 பேருக்கு உணவளித்தார். யோவான் 6:5-13. ( 2 இரா. 4:42-44.)

நாகமானைச் சுகப்படுத்தல். (5:1-19). சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு கர்த்தர்

சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். (2இரா. 5:1).

சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான்.(5:2-6). அப்பொழுது சீரியாவின் ராஜா. நல்லது போகலாம், இஸ்ரவேலின் இராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் தன் கையிலே பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்று வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு போய், இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான். நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது. இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்த போது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கி விடவேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் என்றான். (5:7, 8). அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான். அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப்போனான். அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா?

ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான். (5:9-14).

நாகமான் திரும்பி எலிசாவின் வீட்டிகு வந்தார், எலிசா அவரை வாழத்தினார், அவர் கொடுத்த பரிசை வாங்க மறுத்துவிட்டார். எலிசாவின் வேலைக்காரன் கேயாசி, அந்தப் பரிசை திருட்டுத்தனமாக வாங்கிக் கொண்டான். நாகமான் அவனுக்கு$4,000 இரண்டு விலையுயர்ந்த உடுப்புக்களையும் கொடுத்திருந்தான். எலிசா இதை அறிந்து கேயாசியைச் சபித்தான், அதனால் அவன் குஸ்டரோகியானான். நாகமான் குஸ்டரோகத்திலிருந்து குணமாகினான். (5:15-27).

10. கேயாசியின்மீது குஸ்டரோகத்தை முன்னறிவித்தார். (2இரா. 5:15-27).

11. தொலைந்துபோன கோடாரித் தலையைக் கொண்டுவருதல்.(6:1-7).

யோர்தான் ஆற்றிலே , தற்செயலாக தொலைந்து போன கோடரித் தலையை தண்ணீரின்மீது மிதக்கப்பண்ணினார்.(2இரா. 6:1-7).

12. சிரியாவின் இரகசிய யுத்தத்திற்கான திட்டத்தை வெளிப்படுத்தல்.(6:8-12). எலியா திர்க்கதரிசி,ஒருமுறை வடக்கு அரசனாகிய யெகொராம் இற்கு உதவி செய்ய மறுத்து விட்டார்., அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன் என்று தன் ஊழியக்காரரோடே ஆலோசனை பண்ணினான். ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி : இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச்சொன்னான். (2இரா6:8-10). இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பி, அவன் தன் ஊழியக்காரரை அழைத்து: நம்முடையவர்களில் இஸ்ரவேலின் ராஜாவுக்கு உளவாயிருக்கிறவன் யார் என்று நீங்கள் எனக்கு அறிவிக்க மாட் டீர்களா என்று கேட்டான். அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன்: அப்படியில்லை; என் ஆண்டவனாகிய ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான் என்றான். (6:11, 12). எலியாவைக் கைது செய்வதற்காக

சிரியாவின் இராணுவம் தோத்தனுக்கு அனுப்பப்பட்டது. அடுத்தநாள் காலையில் எலிசா எழும்பிப் பார்க்கும் போது, அவர் யுத்த இரதங்களாலும் குதிரைகளாலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதைக் கண்டு கொண்டார். (6:13-15). பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். அவர்கள் அவனிடத்தில் வருகையில், எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: இந்த ஜனங்களுக்குக் கண்மயக்கம் உண்டாகு ம்படி செய்யும் என்றான்; எலிசாவுடைய வார்த்தையின்படியே அவர்களுக்குக் கண்மயக்கம் உண்டாகும்படி செய்தார். அப்பொழுது எலிசா அவர்களை நோக்கி: இது வழி அல்ல; இது பட்டணமும் அல்ல; என் பிறகே வாருங்கள்; நீங்கள் தேடுகிற மனுஷனிடத்தில் நான் உங்களை வழிநடத்துவேன் என்று சொல்லி, அவர்களைச் சமாரியாவுக்கு அழைத்துக் கொண்டுபோனான். அவர்கள் சமாரியாவில் வந்தபோது, எலிசா: கர்த்தாவே, இவர்கள் பார்க்கும்படிக்கு இவர்கள் கண்களைத் திறந்தருளும் என்றான். பார்க்கும்படிக்குக் கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்கும்போது, இதோ, அவர்கள் சமாரியாவின் நடுவே இருந்தார்கள். இஸ்ரவேலின் ராஜா அவர்களைக் கண்டபோது, எலிசாவைப் பார்த்து. என் தகப்பனே, நான் அவர்களை வெட்டிப் போடலாமா என்று கேட்டான்.

14. சிரியாவின் முழு இராணுவத்தினருக்கும் கண்மயக்கம் உண்டாயிற்று. (2இரா. 6:18-23).

15. பட்டினியிலிருந்து சமாரியா தேசம் காப்பாற்றப்படும் என்று முன்னறிவித்தல். (2 இரா7). சில வருடங்களுக்கும் பிற்பாடு (நாகமானுடைய மரணத்திற்குப் பிற்பாடாக இருக்கலாம்.) சிரியர்கள் இஸ்ரவேலுக்குள் நுழைந்து, தலைநகராகிய சமரியாவை முற்றுகை போட்டார்கள். அதனால் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அவர்களுடைய பஞ்சம் பயங்கரமாக இருந்தது. ஒரு கழுதைத் தலை $50.00 இற்கும், புறாவின் விலை $3.00 விலைபோயிற்று. பொருட்கள் கிடைப்பதே மிகவும் அரிதாயிற்று, அதனால் மனிதர்களைச் சாப்பிடும் தன்மையும் அங்கு ஏற்பட்டது. (6:29). இவைகள் அனைத்தும் ஐந்து நூற்றாண்டுகளுக்கு

முன்பாக மோசேயினால் தீர்க்கதரிசனமாக கூறப்ப்பட்டவையாகும். (லேவி 26:27-29.). எருசலேம் அழைக்கப்படும் போது,தெற்கு இராஜ்ஜியமுமான யூதாவும் இவ்வாறான சுழ்நிலையைச் சந்தித்தது.( யாத்28:53, புலம் 4:10; 2இரா 6:25-29.) சில வருடங்களுக்கு முன்பு, வடராஜ்ஜியத்தின் அரசன் யெகோராம் எலிசா குருட்டாட்டம் பிடித்த சிரியாவின் இராணுவத்தை கொலை செய்யவிடாமல் தடுத்ததை ஞாபகப்படுத்தினான் , அதனால் இந்த பஞ்ச நிலமைக்கு அவனே காரணம் எனக்கூறி, எலிசாவைக் கொலை செய்வதற்கு கொருத்தனை செய்தான், (6:31). அப்பொழுது எலிசா: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது ராஜாவுக்குக் கைலாகு கொடுக்கிற பிரதானி ஒருவன் தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா என்றான். அதற்கு அவன்: உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான். (7:1, 2).

குஷ்டரோகிகளான நாலுபேர் ஒலிமுகவாசலில் இருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில் பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம். நாம் இங்கே இருந்தாலும் சாவோம். ஆகையால் இப்பொழுது சீரியருடைய இராணுவத்திற்குப் போவோம் வாருங்கள். அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைக்கிறோம். நம்மைக் கொன்றால் சாகிறோம் என்று சொல்லி, சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே எழுந்திருந்து, சீரியருடைய பாளயத்தின் முன்னணியில் வந்தார்கள். அங்கே ஒருவருமில்லை. ஆண்டவர் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணினதினால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, நம்மிடத்தில் போருக்கு வர, இஸ்ரவேலின் இராஜா ஏத்தியரின் ராஜாக்களையும் எகிப்தியரின் இராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் என்று சொல்லி, இருட்டோடே எழுந்திருந்து ஓடிப்போய், தங்கள் கூடாரங்களையும் தங்கள் குதிரைகளையும் தங்கள் கழுதைகளையும் தங்கள் பாளயத்தையும் அவைகள் இருந்த பிரகாரமாக விட்டு, தங்கள் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடிப்போனார்கள். (7:3--7). இதைப் போல் ஒரு விடுதலையை முன்பு

கர்த்தர் செய்துள்ளார். (2சாமு. 5:23, 24; நியா. 7:16-21; 2நாள. 20:20-25.). தாங்கள் கொள்ளையிட்டுப் புசித்து திருப்பியடைந்த நிலையில், அந்த நான்கு குஸ்டரோகிகளும், இந்த நற்செய்தியை சமாரியாவிற்கு அறிவித்தார்கள். இதனால் சகலரும் ஓடிச் சென்று தங்களால் முடிந்தவற்றைச் சேர்த்துக் கொண்டு போனார்கள். அப்பொழுது ஜனங்கள் புறப்பட்டு, சீரியரின் பாளயத்தைக் கொள்ளையிட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையின்படியே, ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்பட்டது.(7:8-20).

16. சிரியவின் இராஜாவாகிய பெனாதத்தின் மரணத்தை முன் அறிவித்தார், சிரியாவின் மேல் ஆசகேல் அரசனானான். (2 இரா8:7-15) நோய்வாய்ப்பட்டிருந்த சிரிய இராஜாவாகிய பெனாதத்தைப் பார்ப்பதற்கு எலிசா தமாஸ்சிற்குச் சென்றான், அங்கு ஆசகேல் என்ற, சிரியாவின் முக்கிய பிரதானியினால் வரவேற்கப்பட்டார், அவர் எலிசாவிற்கு 40 ஒட்டகங்கள் நிறைந்த சிறந்த சிரியாவின் உற்பத்திகளைப் பரிசாகக் கொடுத்தான். பெனாதத், இந்த வியாதியிலிருந்து பிழைத்துக் கொள்ளுவாரா என்று வினாவுவதற்கு ஆசகேல், எலிசாவிடம் அனுப்பப்பட்டார். எலிசாபெனாதத் பிழைப்பான் ஆனால் மரித்துப் போவார் என்ற செய்தியைக் கூறினார்(2இரா. 8:7-10). ஆசகேல் சிரியாவின் அடுத்த இராஜாவாக வருவார் என்றும், அவரது ஆட்சியில் அதிகம் இரத்தம் சிந்தப்படும் என்றும் எலிசா முன்னறிவித்தார் மறுநாளிலே ஒரு சமுக்காளத்தை எடுத்து, தண்ணீரிலே தோய்த்து அவன் முகத்தின் மேல் விரித்தான்; அதினால் அவன் செத்துப்போனான்; ஆசகேல் அவனுக்குப் பதிலாய் ராஜாவானான். (8:11-15). பின்பு ஆசகேல் இஸ்ரவேல் மக்களை இரக்கமின்றி துன்பப்படுத்தினான். (2இரா. 13:22.) எலிசா தன்னுடைய இளம் தீர்க்கதரிசியை இரதம் ஓடுவதில் வல்லவரான ராமாத்-கிலேயத்திலுள்ள யெகூ என்ற பெயருள்ளவரை அடுத்த அரசனாக அபிஷேகம் செய்யும்படி கூறி அனுப்பினார். இவ்வாறு செய்யப்பட்டது. ஆகாப்பையும் யோசபேலையும் கொலை செய்யும்படி கர்த்தர் யெகூவிற்கு கட்டளையிட்டார். ஆகாப்பினுடையதும், யெசபேலுடையதும் மாமிசத்தை நாய்கள் தின்னும் .(2 இரா9:1-10).

குறிப்பு : யெகூவையும் ஆசகேலையும் அபிஷேகம் பண்ணும்படி, கர்த்தர் ஏசாவுக்கு கட்டளையிட்டார். ஆனால் சில காரணங்களுக்காக அவரால் இதனைச் செய்முடியவில்லை. (1இரா. 19:15, 16.)

17. இஸ்ரவேலர்கள் சிரியாவை மூன்று முறை வெற்றி கொள்வார்கள் என முன்னறிவிக்கப்பட்டது. (2இரா 13:14-19). எலிசா மரணப்படுக்கையில் இருக்கும் போது இஸ்ரவேலின் வடராஜ்ஜியத்தின் கெட்ட அரசனான யோகாஸ் சந்தித்தான், அவன் கெட்டவனாக இருந்த போதிலும் எலிசாவின் மீது அன்பு கொண்டவனாக இருந்தான். யோகாஸ் தீர்க்கதரிசியை சந்தித்தான், அவருக்கு நிகழப் போகும் மரணத்திற்காகவும் அழுதான்.

எலிசா ,புதுவிதமான கட்டளையை கூறினான், இராஜா படுக்கையறையின் யன்னலுக்கூடாக அம்பு எய்தார். இது இஸ்ரவேலர்கள் சிரியாவின்மீது வெற்றி கொள்வதற்கான அடையாளமாகும். அவன் நிலத்தை அம்புகளால் அடிக்கும்படி கட்டளையிட்டான். அவன் மூன்றுமுறையுமே அடித்தான், அதனால் எலிசா கோபமடைந்தான். அவர் இன்னும் பல முறை அடித்திருக்கலாம் என்று கூறினான். மூன்று முறை அடித்தபடியால், மூன்று வெற்றிகளே கிடைக்கும் என்று கூறினார். (2இரா. 13:14-19). தன்னுடைய தகப்பனார் இழந்த பிரதேசங்களை மீண்டும் பெற்றுக் கொண்டார். எலிசா முன்னறிவித்து போல மூன்று முறை சிரியர்களை வெற்றி கொண்டார். (13:22-25).

18. தீர்க்கதரிசி மரித்து ஒருவருடத்திற்குப்பின்பு மரித்த ஒருவனை உயிர்த்தெழச் செய்தார் (13:20, 21) எலிசா மரித்து அடக்கம் செய்யப்பட்டார். சில வருடங்களுக்குப்பிற்பாடு, அவரது கல்லறைக்கு அருகில் ஒரு பிணம் புதைக்கப்பட்டது, தற்செயலாக எலிசாவின் எலுப்பின் அந்தப்பிணம் தொட்டுவிட்டது, உடனே மரித்த மனிதன் காலுன்றி எழுந்தான். (13:20, 21).

| **எலிசா** |
| --- |

| **எலியாவும் 18 திகிலூட்டும் சம்பவங்களும்.** | **வேதாகம குறிப்புகள்.** |
| --- | --- |
| 1. யோர்தானின் தண்ணீரைப் பிளத்தல். | 2 ராஜா 2:14 |
| 2. எரிக்கோவின் தண்ணீரைச் சுத்தப்படுத்தல். | 2 ராஜா 2:19-22 |
| 3. பெத்தேலில் பழித்துரைத்தவர்களை நியாயம்தீர்த்தர். | 2 ராஜா 2:23, 24 |
| 4. வாய்க்கால்களில் தண்ணீர் நிரம்பச் செய்தல். | 2 ராஜா 3:16-27 |
| 5. வெற்றுப்பாத்திரங்களில் எண்ணெய் நிரம்பச் செய்தல். | 2 ராஜா 4:1-7 |
| 6 சீனேமிர் மரித்த மகனை எழுப்புதல். | 2 ராஜா 4:18-21, 32-37 |
| 7. கில்காலில் நஞ்சு கலக்கப்பட்ட கூழை நல்ல கூழாக சுத்திகரித்தல். | 2 ராஜா 4:38-41 |
| 8. இருபது அப்பங்களையும் ஒருசாக்கு தாள் கதிர்களையும் கொண்டு 100பேரைப் போசித்தல். | 2 ராஜா 4:42-44 |

| | |
|---|---|
| 9. நாகமானை குஷ்டத்திலிருந்து குணமாக்கல் | 2 ராஜா 5:1-14 |
| 10. கோயாசிக்கு குஷ்டம் வரும்வண்ணம் நியாயந்தீர்த்தர். | 2 ராஜா 5:15-27 |
| 11. யோர்தான் ஆற்றுக்குள் விழுந்த கோடாரியை மிதக்கச் செய்தல். | 2 ராஜா 6:1-7 |
| 12. சிரியர்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராக வகுத்த யுத்ததிட்டத்தை வெளிப்படுத்தல். | 2 ராஜா 6:8-12 |
| 13. காணமுடியாத தேவதூதர்களின் இராணுவத்தைக் காணச் செய்தல். | 2 ராஜா 6:13-17 |
| 14. முழுச் சிரியன் இராணுவத்தையும் கண்மயக்கம் அடையச் செய்தல். | 2 ராஜா 6:18-23 |
| 15. பட்டினியாகவிருந்த சமாரிய நாட்டாருக்கு விடுதலையை வாக்குப்பண்ணுதல். | 2 ராஜா 6:24-7:20 |
| 16. பெனாதத், சிரியாவின் அரசனைன் மரணத்தை முன்னறிவித்தல். சிரியாவில் ஆசகேலின் ஆட்சியைக் கூறுதல். | 2 ராஜா 8:7-15 |
| 17. சிரியாவின் மீது மூன்று வெற்றிகளை முன்னறிவித்தல். | 2 ராஜா 13:14-19 |
| 18. எலிசாவின் மரணத்ததிற்குப் பின்பு ஒருவருடத்தின் பின்பு மரித்த மனிதன் எழும்புதல். | 2 ராஜா 13:20, 21 |

*உசாத்துணை நூல்கள்.*

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** ***by*** **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**THE BIBLE READER'S COMPANION** ***By*** **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**THE BIBLE READER'S COMPANION** ***By*** **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**NELSON'S COMPLETE BOOK OF BIBLE MAPS & CHARTS OLD AND NEW TESTAMENTSRevised and Updated EditionThomas Nelson PublishersNashville •Atlanta •London •Vancouver**

**TALK THRUTHE BIBLE** by **BRUCE WILKINSON** and **KENNETH BOA**

Youngblood, R. F., Bruce, F. F., Harrison, R. K., & Thomas Nelson Publishers. (1995). *Nelson's new illustrated Bible dictionary*. Rev. ed. of: Nelson's illustrated Bible dictionary.; Includes index. Nashville: T. Nelson

இலுமினாகோலட்,பேரண்ஸ் அன்ட் சேச்ஸ் எடிசன்